

# தமிழரசு

மே 1 - 15, 1998 ரூ.3







## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


★ கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு - அரசின் வெள்ளை அறிக்கை ...... 2

★ குடிநீர்த் திட்டங்கள் ...... 9

★ தமிழகத்தில் ஒரே காலகட்டத்தில் 16 அணைகள் ...... 13

★ ஆதிதிராவிட மக்களுக்கு 60 ஆயிரம் இலவச கான்கீரிட் வீடுகள் ...... 14

★ தொழிலாளர்களின் தோழனாய் விளங்கும் அரசு, இது!
'மே தினச் செய்தி' - முதலமைச்சர் கலைஞர் ...... 17

★ கைத்தறி நெசவாளர்களுக்கு சலுகைகள் - கலைஞர் அறிவிப்பு ...... 19

★ வேர்கள் - அசோகமித்திரன் ...... 21

★ தமிழகத்திலுள்ள களிமண் உருவங்கள் - நடன காசிநாதன் ...... 23

★ தனிமரம் - பாவண்ணன் ...... 27

★ மே நாள் - ஜி.மகேந்திரன் ...... 30

★ உணவுத் துறையின் ஒப்பற்றபணிகள் ...... 33

★ போக்குவரத்துத் துறையில் சீர்திருத்தங்கள் ...... 37

★ இரண்டாண்டு சாதனைகள் ...... 43

★ ஒடுக்கப்பட்ட உழைப்பாளிகளை
ஒன்றுபடுத்திய காரல் மார்க்ஸ் - முதலமைச்சர் கலைஞர் ...... 45

★ பாரதியார் கவிதை ...... 48


## திருக்குறள்

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

ஒழுக்கத்தில் உறுதியான துறவிகளின் பெருமை, சான்றோர் நூலில் விருப்பமுடனும், உயர்வாகவும் இடம் பெறும். (கலைஞர் உரையிலிருந்து)


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029
சித்திரை - வைகாசி
மே 1-15, 1998

மலர்:28 இதழ்:21

விலை ரூ.3


**அட்டைப்படம்**


முதல் அட்டை :
உழைப்பாளர் சிலை

நான்காம் அட்டை :
மேதினத்தூண்

# கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு :

## அரசின் வெள்ளை அறிக்கை

**சட்டப்பேரவையில் வைக்கப்பட்ட நாள் 23-4-1998**



**14-2-1998** அன்று கோயம்புத்தூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பிற்கான அடிப்படைக் காரணங்கள், அரசு எடுத்த நடவடிக்கைகள் ஆகியவைபற்றி விளக்க இந்த வெள்ளை அறிக்கை அவைமுன் வைக்கப்படுகிறது.

### தமிழகத்தில் பிற குண்டுவெடிப்பு நிகழ்ச்சிகள்

1984 - லிருந்தே நெஞ்சை உலுக்கும் பல குண்டு வெடிப்புகள் தமிழகத்தில் நிகழ்ந்துவந்திருக்கின்றன. அவற்றில் முக்கியமான சில சம்பவங்கள் வருமாறு :

**2-8-84** அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஏற்பட்ட பெரும் குண்டுவெடிப்பில் 25 வெளிநாட்டவர் உட்பட 30 பேர் உயிரிழந்தனர். 37 பேர் காயமுற்றனர். தமிழீழப் போராளிக் குழுவினர்தான் இந்தக் குண்டுவெடிப்பிற்குக் காரணம் எனப் புலன் விசாரணையில் தெரிய வந்தது. இந்த வழக்கில் சரவணபவன் மற்றும் நான்கு நபர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. முக்கியக் குற்றவாளியான தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் என்பவர் ஜாமீனில் விடுதலை ஆகி தலைமறைவாகச் சென்றவர் 6-2-98 அன்று மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர் மீது உள்ள வழக்கில் நீதிமன்ற விசாரணை நடைபெறவுள்ளது.

**15-3-87** அன்று அரியலூருக்கு அருகில் மருதையாறு பாலத்தில் தமிழ்நாடு விடுதலைப் படையினர் குண்டு வைத்ததில், மலைக்கோட்டை விரைவு ரயில் கவிழ்ந்து 26 பேர் மரணம் அடைந்தனர். 140 பேருக்குமேல் காயமடைந்தனர். மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு மேல்முறையீடு நிலுவையில் உள்ளது.

**21-5-91** அன்று திருப்பெரும்புதூரில் நிகழ்ந்த கொடூர குண்டு வெடிப்பில் முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜிவ்காந்தி மற்றும் 9 காவலர்கள் உட்பட 18 பேர் மரணமடைந்தனர். விடுதலைப் புலிகள் மற்றும் அவர்கள் ஆதரவாளர்களான 26 பேருக்கு நீதிமன்றம் 28-1-98 அன்று மரணதண்டனை வழங்கியுள்ளது. மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**20-4-92** அன்று தேனி மாவட்டம் சுருளிப்பட்டியில் தமிழக மக்கள் விடுதலைப் படையினரால் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஒருவர் மரணமுற்றார். குற்றவாளி ராஜாராம் தலைமறைவாக உள்ளதால், வழக்கு விசாரணையில் உள்ளது.

**8-8-93** அன்று சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வைத்ததில் 11 பேர் மரணம் அடைந்தனர். சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று, முஸ்லீம் தீவிரவாதிகள் எஸ்.ஏ.பாஷா, இமாம் அலி, ஹைதர் அலி ஆகியோர் உட்பட 18 பேர் மீது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**18-11-93** அன்று தமிழ்நாடு விடுதலைப் படையினர் கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தைக் குண்டு வீசி தாக்கியதில் ஒரு காவலர் மரணமடைந்தார். 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

**25-5-94** அன்று தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப்பேட்டை என்ற இடத்தில், சோதனைச் சாவடியில், ஒரு காரை நிறுத்தி காவல்துறையினர் சோதனை செய்தபோது விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்த சக்தி என்பவர் எறிந்த குண்டு வெடித்ததில் ஒருவர் மரணமடைந்தார். 7 பேர் காயமடைந்தனர். 18 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**14-4-95** அன்று சென்னை இந்து முன்னணி அலுவலகத்தில் முஸ்லீம் தீவிரவாதிகள் குண்டு வைத்ததில் இருவர் இறந்தனர். குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

**3-7-95** அன்று நாகை இந்து முன்னணி இயக்கத்தைச் சேர்ந்த தங்க முத்துகிருஷ்ணன் என்பவருக்கு அனுப்பப்பட்ட தபால் வெடிகுண்டு வெடித்ததில் தங்க முத்துகிருஷ்ணனின் மனைவி மரணம் அடைந்தார். ராஜாஉசேன், ரிஃபாயீ, குத்புதின், ஹாரூன் இஸ்மாயில் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். 4 பேர் தலைமறைவாக உள்ளனர். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

இந்தச் சம்பவங்களைப் பற்றி ஆராய்ந்து அறிய மாநிலங்கள் அவை எதிர்க்கட்சித் தலைவர், திரு.சிக்கந்தர் பக்த் அவர்கள் தலைமையில் திரு. ஜெ.பி.மாத்தூர் (மாநிலங்களவை உறுப்பினர்), திருமதி. சுஷ்மா சுவராஜ் (மாநிலங்களவை

உறுப்பினர்), திரு.தனஞ்செய் குமார் (நாடாளுமன்ற உறுப்பினர்), திரு.ஒ.ராஜகோபால் (மாநிலங்களவை உறுப்பினர்) ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், திரு. வாஜ்பாய் அவர்கள் அனுப்பிவைத்தார். இந்தக் குழு 29, 30-7-95 ஆகிய நாட்களில் சென்னையில் ஆய்வு நடத்தி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

## மத தீவிரவாத வளர்ச்சி



மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் தமிழகம் விளங்கிவந்தது. இதற்குக் களங்கம் விளைவிக்கும் நிகழ்ச்சிகள் 15 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்தன என்று சொல்லலாம். மற்ற மதத்தினரைப் பற்றி மனம் புண்படும் விதத்தில் சிலர் பேசி வந்தது, காழ்ப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டது. ஒரு மதத்தின் ஊர்வலங்கள் மற்றுமொரு மதத்தின் வழிபாட்டுத் தலங்கள் வழியாகச் செல்லும்போது பிரச்சினைகள் ஏற்பட்டன. அரசு பல சமயங்களில் தலையிட்டு அசம்பாவிதங்களைத் தவிர்த்திருக்கிறது. 1992 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 - ஆம் தேதி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி தமிழக முஸ்லீம்களிடையே பெருத்த கொந்தளிப்பை ஏற்படுத்தி, மத தீவிரவாதம் தமிழகத்தில் பரவிடக் காரணமாக அமைந்தது. 1992 - ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பு, தனி நபர்கள் மீது குறி வைத்து வன்முறை நடத்தப்பட்டு வந்தது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின் சில முஸ்லீம் தீவிரவாத வன்முறையாளர்கள் குண்டு வெடிப்புகளில் ஈடுபடலாயினர். சென்னையில் ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் குண்டு வெடிப்பு, இந்து முன்னணி அலுவலகத்தில் குண்டு வெடிப்பு ஆகியவை நிகழ்ந்தன.

## கோயம்புத்தூர் குண்டுவெடிப்பின் பின்னணி

1993- ல் ஆரம்பித்த குண்டுவெடிப்புகளின் தொடர்ச்சியாகக் கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு என்ற நிலை இருந்தாலும், கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிற்கு முன்பு நிகழ்ந்த சமீபகால நிகழ்வுகளைப் பற்றிக் குறிப்பிடவேண்டும். 28-1-97 அன்று பொள்ளாச்சியில் அகில இந்திய ஜிஹாத் கமிட்டியின் தலைவர் பழனிபாபா ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையையொட்டி கோயம்புத்தூரில் சில வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அதில் 4 முஸ்லீம்களும், 2 இந்துக்களும் உயிரிழந்தனர். இந்த வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து 1997 - ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்பட்ட வன்முறையில் 5 இந்துக்கள் கொல்லப்பட்டனர். இந்த இரு நிகழ்வுகளிலும் காவல்துறையினர் உடன் நடவடிக்கை எடுத்து, 43 முஸ்லீம்களையும், 27 இந்துக்களையும் கைது செய்தனர். இருப்பினும், ஏற்கெனவே கூறியதுபோல், மத நல்லிணக்கம் பாதிக்கப்பட்டிருந்த இந்தச் சூழ்நிலையில், 29-11-97 அன்று கோயம்புத்தூரில் அலுவலில் இருந்த செல்வராஜ் என்னும் காவலர், அல் உம்மா தீவிரவாத முஸ்லீம்களால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இதையடுத்து, கோயம்புத்தூரில் மத தீவிரவாதிகள் நடத்திய வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லீம்களும் 4 இந்துக்களும் உயிரிழந்தனர். சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற உடனடியாக ராணுவம் வரவழைக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள் கோயம்புத்தூரில் வன்முறை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. 3-12-97 அன்று, உடுமலைப்பேட்டையில் குண்டு வெடித்ததில் 3 பேர் மரணமடைந்தனர். அப்துல் கையூம், அப்துல் கரீம், பழனி பாபு, சுல்தான் நஸீர் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டு, வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. 6-12-97 அன்று, திருச்சியில் பாண்டியன் விரைவு ரயிலிலும், ஈரோடு அருகில் சேரன் விரைவு ரயிலிலும், இஸ்லாமியப் பாதுகாப்புப் படையினரால் வைக்கப்பட்ட குண்டுகள் வெடித்ததில் 6 பேர் மரணமடைந்தனர். அப்துல் ரஹிம், அலி அப்துல்லா ஆகிய இருவரும் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. 14-2-98 அன்று கோயம்புத்தூரில் வெடிகுண்டுகள் வெடித்ததில் 49பேரும், குண்டுகள் தயாரித்தவர்கள் 6 பேரும், விபத்துக்களில் 4 பேரும், மொத்தம் 59 பேர் (46 இந்துக்கள், 13 முஸ்லீம்கள்) மரணமடைந்தனர். இந்த வழக்குத் தொடர்பாக, 20-4-98 வரை 158 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நவம்பர் 1997 -ல் கோவையில் காவலர் செல்வராஜ் கொலை செய்யப்பட்டு அதன் தொடர்பாக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்ட துயர சம்பவத்திற்குப் பழிவாங்கும் படலமாகவே இந்த விரும்பத்தகாத குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்பது புலன் விசாரணையில் தெரியவருகிறது.

## கோயம்புத்தூர் குண்டுவெடிப்புகள் குறித்து முன்னெச்சரிக்கைச் செய்திகள்

முஸ்லீம்கள் அடைந்த பாதிப்பிற்குப் பழிவாங்கக் கோயம்புத்தூரின் புறநகர்ப் பகுதிகளில் எதிர்த்தாக்குதல் மேற்கொள்ள அல் உம்மா இயக்கத்தினருக்கு அதன் தலைவர் உத்தரவிட்டிருப்பதாகவும், காவல் நிலையங்களும், காவல்துறை ஆணையர் அலுவலகமும், எரிவாயு லாரிகளும் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்றும் மத்திய அரசு அமைப்பு ஒன்றிடமிருந்து 21.12.97 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. உடனடியாகக் கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளரும், கோயம்புத்தூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரும் மாநில நுண்ணறிவுப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டனர். கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளரும் 25.12.97 அன்று தன் அலுவலர்களைக்கூட்டி, அவர்களை எச்சரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். எட்டு சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டன. காவல் நிலையங்களுக்கும் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திற்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் தகவலின் அடிப்படையில் 24.12.97 அன்று காவல்துறைத் தலைமை இயக்குநர், கூடுதல் இயக்குநர் (சட்டம், ஒழுங்கு), கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு), உள்துறைச் செயலாளர்,

பொதுத் துறைச் செயலாளர் ஆகியோருடன் தலைமைச் செயலாளர் நடத்திய கூட்டத்தில் விவாதித்து முஸ்லீம் அடிப்படைவாத இயக்கத் தலைவர்களைத் தீவிரமாகக் கண்காணிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும், தீவிரத் திட்டம் (Contingency Plan) ஒன்றும் தயாரிக்க முடிவு எடுக்கப்பட்டது. தீவிரக் கண்காணிப்பின் விளைவாக, திருச்சி ரயில் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட அப்துல் ரகீம் என்பவர் 10-1-98 அன்று கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் 2.1.98 அன்று, இந்து இயக்கங்களின் தலைவர்களையும் காவல்துறை அலுவலர்களையும் தாக்க அல் உம்மா பிரிவினர் திட்டம் போட்டிருப்பதாகவும், கோட்டைமேடு பகுதியில் தகராறு ஏற்படுத்தி போலீஸ் வந்தவுடன் அவர்களைத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் மத்திய அரசு அமைப்பு ஒன்றிடமிருந்து தகவல் வந்தது. இந்தத் தகவலும் உடனடியாகக் கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இந்து இயக்கத்தினர் சிலருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. காவல்துறை அலுவலர்களும் எச்சரிக்கப்பட்டனர்.

மத்திய அரசுத் துறையிடமிருந்து 19-1-98ல் வரப்பெற்ற மற்றொரு அறிக்கையில் அல் உம்மா இயக்கத்தினர் சிலர் கோயம்புத்தூரில் பயன்படுத்துவதறகு வெடிமருந்துகள் வாங்க ஏர்வாடி காசிம் என்பவரைக் கேட்டுள்ளதாகவும், ரம்ஜானுக்கு ஒரு வாரத்திற்குப் பின் வன்முறை நடத்தத் திட்டம் தீட்டியிருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்ட்டுள்ளது. மேலும், கைது செய்யப்பட்டுள்ள ரகீம் விடுதலை செய்யப்படாவிட்டால் வன்முறையில் ஈடுபட ஜிகாத் கமிட்டி முடிவு செய்திருப்பதாகவும் கூறப்பபட்டுள்ளது. இத்தகவலும் உடனுக்குடன் அனைத்துக் காவல்துறை ஆணையாளர்களுக்கும் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. ஏர்வாடி காசிமைப் பிடிப்பதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

23.1.98 அன்று மத்திய உள்துறை அலுவலகத்திலிருந்து வந்த செய்தியில் இஸ்லாமியப் பாதுகாப்புப் படை என்ற பெயரில் அல் உம்மா இயக்கத்தினர் கோயம்புத்தூர் நகரில் குண்டு வெடிக்கக் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில், கோவை நகரக் காவல்துறை ஆணையாளரும், கோவை மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரும் உடனடியாக எச்சரிக்கப்பட்டனர்.

இதுபோன்ற செய்திகள் குறித்து, காவல்துறை தலைமை இயக்குநரும், கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம், ஒழுங்கு)-ம் கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டும் எச்சரித்துள்ளனர்.

மாநில நுண்ணறிவுப் பிரிவு தன் அலுவலர்கள் மூலம் தகவல் சேகரித்து 3.12.97 முதல் 10.2.98 வரை 12 எச்சரிக்கைச் செய்திகளைக் கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளருக்கு அனுப்பியுள்ளது. 3.12.97 அன்று முஸ்லீம் தீவிரவாதிகள்



சர். பிட்டி. தியாகராயர் பிறந்த நாளான 27.4.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

காவல்துறை குடியிருப்புகளைத் தாக்கத் திட்டமிட்டிருப்பதாகச் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து காவல்துறை அலுவலர்களும், அவர்களின் குடியிருப்புகளும், வாகனங்களும், இந்தியன் ஆயில் மற்றும் பாரத் பெட்ரோலிய நிறுவனங்களும் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடும் என்றும், குண்டு வெடிப்புத் தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்றும் எச்சரிக்கைச் செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆயுதங்கள் மறைத்து வைக்கப் பட்டிருக்கும் இடங்கள் என்று குறிப்பிட்டு இரண்டு செய்திகளும் அனுப்பப்பட்டுள்ளன. இறுதியாக 10.2.98 அன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்தியில் அல் உம்மா இயக்கத்தினர் திருமால் வீதியில் ஒரு குறிப்பிட்ட கட்டிடத்திற்கு வந்து போவதாகவும், பிப்ரவரி 14 அல்லது 20 அன்று குண்டுகள் வெடிக்கத் திட்டம் தீட்டியிருப்பதாகவும், கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளருக்கு வான்தந்தி மூலம் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் தகவல் அவருக்குக் கோயம்புத்தூரில் உள்ள மாநில நுண்ணறிவுப் பிரிவு அதிகாரியினால் நேரடியாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிக் கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு) கோவை நகரக் காவல்துறை ஆணையாளருக்கு 12-ஆம் தேதி ஒரு நேர்முகக் கடிதமும் அனுப்பியுள்ளார். கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளர், செய்தியில் குறிப்பிட்ட இடங்களைத் தேடிப் பார்த்தாகவும், குண்டுகள் ஏதும் இல்லை எனவும் காவல்துறை இயக்குநருக்குப் பின்னர் அனுப்பிய பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

**குண்டுவெடிப்பு நடைபெற்ற சில மணி நேரங்களிலேயே இராணுவமும், சி.ஆர்.பி.எப் -ம் வரவழைக்கப்பட்டு கோயம்புத்தூரில் வன்முறை ஒடுக்கப்பட்டது. திருமால் வீதியில் ஒரு கட்டடத்தில் தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 14. 2. 98 அன்று இரவே அக்கட்டடத்தைப் போலீசார் சுற்றி வளைத்தனர். தீவிரவாதிகள் வைத்திருந்த குண்டு வெடித்ததில் தீவிரவாதிகளில் ஆறு பேர் இறந்தனர். எஞ்சியிருந்த எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.**

அரசு பல எச்சரிக்கைகள் செய்தும், குண்டு வெடிப்புகளைத் தடுக்காமல் போனதற்கு கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது பெரும் தண்டனைக்குரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படக்கூடும் என்ற தகவலின் அடிப்படையில், 1.2.98 அன்று காவல்துறை இயக்குநர் அனைத்துக் காவல்துறை ஆணையாளர்களுக்கும் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் அனுப்பிய செய்தியில் 1-2-98 நள்ளிரவு முதல் 4-2-98 வரை மாநிலம் முழுவதும் வெடிப்பொருட்கள் தீவிர தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மீண்டும் 9-2-98 அன்று அனுப்பப்பட்ட செய்தியில் 9-2-98 நள்ளிரவு முதல் 11-2-98 நள்ளிரவு வரை தணிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெடிமருந்துக் கடைகளைத் தணிக்கை செய்வதுடன், கள்ளத்தனமாக வெடிமருந்துகளை வைத்திருப்பவர்களைக் கண்டுபிடிக்கும்படியும், குறிப்பாக - வாகனத் தணிக்கைள் மேற்கொள்ளும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மீண்டும் 10.2.98 அன்று அனுப்பப்பட்ட வான்செய்தியில் வெடிபொருள் சோதனை, இரவு பகல் வாகனத் தணிக்கை, லாட்ஜ் தணிக்கை ஆகியவற்றைச் செய்யும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குண்டுகள் தயாரித்து, குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர், நாகர்கோவில், திருச்சி, உதகமண்டலம் தொகுதிகளில் பீதியை ஏற்படுத்த முயற்சிகள் இருக்கக்கூடும் என்றும் இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கைகளின் அடிப்படையில் 13-2-98 வரை மாநிலம் முழுவதும் 49 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 81 பேர் கைது செய்யப்பட்டு, சுமார் 2000 நாட்டு வெடிகுண்டுகள், 586 ஜெலட்டின் குச்சிகள், 1595 டெடனேட்டர்கள், உரிமம் இல்லாத 8 துப்பாக்கிகள், 2 ரிவால்வர்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. ஆனால், கோயம்புத்தூர் மாநகரத்தில் எவ்விதப் பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த கலவரங்களுக்குப் பின், கோயம்புத்தூர் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு முன் வரை, கோயம்புத்தூர் நகரில் 23 பேரும் (14 இந், 9 முஸ்லீம்), கோயம்புத்தூர் மாவட்டத்தில் 5 பேரும் (3இந்து, 2(முஸ்லீம்) தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். மொத்தம் 259 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

## கோயம்புத்தூர் குண்டுவெடிப்பிற்குப் பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிற்குப் பின்னர் அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது :-

குண்டுவெடிப்பு நடைபெற்ற சில மணி நேரங்களிலேயே இராணுவமும், சி.ஆர்.பி.எஸ்-ம் வரவழைக்கப்பட்டு கோயம்புத்தூரில் வன்முறை ஒடுக்கப்பட்டது. திருமால் வீதியில் ஒரு கட்டடத்தில் தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 14-2-98 அன்று இரவே அக்கட்டடத்தைப் போலீசார் சுற்றி வளைத்தனர். தீவிரவாதிகள் வைத்திருந்த குண்டு வெடித்ததில் தீவிரவாதிகளில் ஆறு பேர் இறந்தனர். எஞ்சியிருந்த எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.

**"கோயம்புத்தூர் குண்டு வெடிப்புகள் நடைபெற்ற இரண்டு மணிநேரத்திற்குள் அல்உம்மா இயக்கமும், அகில இந்திய ஜிஹாத் கமிட்டி இயக்கமும் மாநில அரசால் தடைசெய்யப்பட்டன. அல்உம்மா இயக்கத் தலைவர், எஸ்.ஏ. பாஷா மற்றும் அவருடன் இருந்த 12பேர் உடன் கைது செய்யப்பட்டனர். பின்னர், அவற்றின் அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. அவற்றின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. அல்உம்மா இயக்கத்தைச் சேர்ந்த 53 நபர்களும் அகில இந்திய ஜிகாத் கமிட்டியை சேர்ந்த 66 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்."**

கோயம்புத்தூர் குண்டு வெடிப்புகள் நடைபெற்ற இரண்டு மணிநேரத்திற்குள் அல்உம்மா இயக்கமும், அகில இந்திய ஜிஹாத் கமிட்டி இயக்கமும் மாநில அரசால் தடைசெய்யப்பட்டன. அல்உம்மா இயக்கத் தலைவர், எஸ்.ஏ. பாஷா மற்றும் அவருடன் இருந்த 12பேர் உடன் கைது செய்யப்பட்டனர். பின்னர், அவற்றின் அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. அவற்றின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. அல்உம்மா இயக்கத்தைச் சேர்ந்த 53 நபர்களும் அகில இந்திய ஜிகாத் கமிட்டியை சேர்ந்த 66 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணைக் குழு திறம்பட புலன் விசாரணை மேற்கொண்டு இக் குற்றவாளிகளைக் கைது செய்ததுடன், சதியை அம்பலப்படுத்தக்கூடிய மிகப் பயனுள்ள சாட்சியங்களையும் சேகரித்துள்ளது.

புலன் விசாரணையில், 20-4-98 வரை 158 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 8 பேர் மரணம் அடைந்துள்ளனர். வெடிபொருட்கள் கர்நாடக மாநிலத்தில் இருந்து வாங்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு அம்மாநிலத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், இஸ்லாமியப் பாதுகாப்புப்படை என்ற இயக்கத்தைச் சேர்ந்த அலி அப்துல்லா என்பவர் திருவாரூர் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு அவர் 6-12-97 அன்று நடந்த ரெயில் குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் நகரிலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தீவிரவாதிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளும் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சென்னை நகரில் மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, வெடிகுண்டுகளும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதுடன், பல தீவிரவாதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். 1042 எலக்ட்ரிக் டெடனேட்டர்கள், 1022 சாதாரண டெடனேட்டர்கள், 5 நாட்டு வெடிகுண்டுகள், 37 பெட்ரோல் குண்டுகள், 187 ஜெலட்டின் குச்சிகள், குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு (time bomb) ஒன்று, 2 டின் குண்டுகள், 12 பெட்டி குண்டுகள், உரிமம் இல்லாத 3 ரிவால்வர்கள், 3 பைப் வெடிகுண்டுகள் முதலியவை கைப்பற்றப்பட்டன.

பிப்ரவரி 14-க்குப் பிறகு இதுவரை 35 பேர் (முஸ்லீம்கள்) தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் (DGP) பாண்டிச்சேரி காவல்துறைத் தலைவர் (I.G.) ஆகியோரது கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு, தீவிரவாதிகளைக் கண்காணித்து அவர்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பிற்குப் பின்பு மாநிலத்தில் வேறு எந்தப் பகுதியிலும் பின் விளைவுகள் இல்லாமல் தடுக்கப்பட்டது. மத்தியில் புதிய அரசு பதவி ஏற்கும் நாளான 19.3.98 அன்று மாநிலத்தில் குண்டு வெடிப்புகள் நிகழக் கூடும் என்ற தகவலின் அடிப் படையில் மாநிலம் முழுவதும் காவல் துறையினர் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டதின் விளைவாக எந்தவித அசம்பாவிதமும் நிகழாமல் தடுக்கப்பட்டது. தற்போத தமிழகம் எங்கும் பூரண அமைதி நிலவுகிறது.

குஜராத் மாநிலத்தின் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற நீதிபதி திரு.பி.ஆர்.கோகுல கிருஷ்ணன் தலைமையில் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததற்கான சூழ்நிலைகள் குறித்தும், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்ட ஈடு குறித்தும், இது போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராய்ந்து அறிக்கை தரும். இடைக்கால நிவாரணம் வழங்க ஆறரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் (DGP) பாண்டிச்சேரி காவல்துறைத் தலைவர் (I.G.) ஆகியோரது கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு, தீவிரவாதிகளைக் கண்காணித்து அவர்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**

புலன் விசாரணையின் அடிப்படையில் குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயர்நீதிமன்ற அனுமதியுடன் தனிக்கோர்ட் ஒன்று நிறுவி வழக்கு விசாரணையை விரைவுபடுத்தவும் அரசு முடிவு எடுத்துள்ளது.

## ஐ.எஸ்.ஐ. நடவடிக்கைகள்

தமிழகத்தில் ஐ.எஸ்.ஐ. உளவாளிகள் நடமாடுவது பற்றியோ கோயம்புத்தூர் குண்டுவெடிப்புகளில் அவர்களுடைய ஈடுபாடு பற்றியோ மத்திய உள்துறையிலிருந்தோ அல்லது மத்தியப் புலனாய்வுத் துறையிலிருந்தோ தகவல் ஏதும் இல்லை. பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. இந்தியாவில் வன்முறைச் சம்பவங்களை நிகழ்த்தி குழப்பத்தை விளைவிக்கும் என்பது பற்றிபொதுப்படையான செய்திகள் அவ்வப்போது மத்திய உள்துறையிலிருந்து வந்துள்ளன. பொதுவாக இவ்வியக்கம் காஷ்மீர் தீவிரவாதிகள் மற்றும் சீக்கிய தீவிரவாதிகள் துணையுடன் இந்தியாவில் பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடக்கூடும் என்று தகவல் உள்ளது.

கோவையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த நாளன்று பி.ஜே.பி. பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் திரு.எல்.கே. அத்வானி அவர்கள் கோவை வந்திருந்தார். அவருக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதில் அரசு மிகவும் கவனமாக இருந்தது. இந்தியப் பிரதமருக்கு இணையான பாதுகாப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. குண்டு வெடிப்பில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களை நேரில் பார்க்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டபோது அவருக்குத் தக்க பாதுகாப்புகள் அனைத்தையும் அரசு செய்தது. அதேநாள், இரவு திருச்சியில் திரு.அத்வானி அவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்திற்கும் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

## திரு. அத்வானி உயிருக்குப் பாதுகாப்பு

கோவையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த நாளன்று பி.ஜே.பி. பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் திரு.எல்.கே. அத்வானி அவர்கள் கோவை வந்திருந்தார். அவருக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதில் அரசு மிகவும் கவனமாக இருந்தது. இந்தியப் பிரதமருக்கு இணையான பாதுகாப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. குண்டு வெடிப்பில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களை நேரில் பார்க்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டபோது அவருக்குத் தக்க பாதுகாப்புகள் அனைத்தையும் அரசு செய்தது. அதேநாள், இரவு திருச்சியில் திரு.அத்வானி அவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்திற்கும் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

## மத்திய அரசின் ஒத்துழைப்பு

கோவை குண்டு வெடிப்பு சம்பந்தப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றியும் பின்னர் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியும் தமிழக அரசு மத்திய அரசிற்கு அனைத்து தகவல்களையும் அனுப்பியுள்ளது. தீவிரவாதத்தை ஒடுக்குவதில் தமிழக அரசு தீவிரமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அதற்கு மத்திய அரசிடமிருந்து பின்வரும் உதவிகளைத் தமிழக அரசு கோரியுள்ளது :

அ) கோயம்புத்தூரில் மத்திய அரசின் அதிரடிப்படையினுடைய பட்டாலியன் ஒன்றை நிரந்தரமாக நிறுவவேண்டும்.

ஆ) மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து செலவுகளைப் பகிர்ந்துகொண்டு இரண்டு இந்திய ரிசர்வ் பட்டாலியன்களைத் தமிழகத்தில் நிறுவ வேண்டும்.

இ) அல்-உம்மா மற்றும் ஜிகாத் கமிட்டி ஆகிய இயக்கங்கள், பிற மாநிலங்களில் இருந்தும் செயல்படுவதால் அகில இந்திய அளவில் அவற்றைத் தடை செய்யவேண்டும். இதற்கான கோரிக்கை 18-3-98ல் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஈ) காவல்துறையை நவீனப்படுத்த மத்திய அரசு ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கவேண்டும்.

உ) வெடிபொருள் கட்டுப்பாட்டுச் சட்டம் மத்திய அரசுடைய சட்டமாகையால் வெடிபொருளை வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றிற்குக் கடுமையான வழிமுறைகளை மத்திய அரசு விதிக்கவேண்டும். இதற்கான கடிதத்தை 21-3-98 அன்று மாநில அரசு மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது.

மைய அரசின் உள்துறை சிறப்புச் செயலாளர், திரு.அசோக்குமார் தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு சென்னைக்கு 16.4.1998 அன்று அனுப்பி வைத்தது. மத தீவிரவாதத்திற்கு எதிராக அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி இந்தக் குழுவிற்கு அலுவலர்களால் விளக்கிக் கூறப்பட்டது. மத்திய அரசு குழுவும், தமிழக அரசு மற்றும் தமிழகக் காவல்துறை எடுத்துள்ள நடவடிக்கைகளில் முழு திருப்தி தெரிவித்தது. இந்தச் சமயத்தில் மத்திய அரசிடம் தமிழக அரசு கோரிய கோரிக்கைகள் பற்றி மறுபடியும் வலியுறுத்தப்பட்டது. தீவிரவாதத்தை முறியடிப்பதற்குத் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பைத் தரவேண்டுமெனத் தமிழக அரசு கோருகிறது.

தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து தமிழக அரசு தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதிக்கவில்லை என்பது தெளிவாகும். வன்முறைகள் நிகழ்ந்த போதெல்லாம் பாரபட்சமின்றித் தீவிரவாதிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகள் பலர் கோவை குண்டுவெடிப்பிற்கு முன்பாகவே, தேசியப் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பிறகு, உடனடியாகத் தீவிரவாத இயக்கங்கள் இரண்டைத் தமிழக அரசு தடை செய்தது. இந்த இயக்கங்கள் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்களுடைய அலுவலகங்களும் மூடப்பட்டு, சீல் வைக்கப்பட்டுள்ளன. தீவிரவாதத்தில் ஈடுபடுவர்க்ள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும். தீவிரவாதிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த ஒரு தனிச்சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. தீவிரவாத்தை ஒழிக்க இது உதவுமென அரசு கருதுகிறது.

**“இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பிற்குப் பின்பு மாநிலத்தில் வேறு எந்தப் பகுதியிலும் பின் விளைவுகள் இல்லாமல் தடுக்கப்பட்டது. மத்தியில் புதிய அரசு பதவி ஏற்கும் நாளான 19.3.98 அன்று மாநிலத்தில் குண்டு வெடிப்புகள் நிகழக் கூடும் என்ற தகவலின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் காவல் துறையினர் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டதின் விளைவாக எந்தவித அசம்பாவிதமும் நிகழாமல் தடுக்கப்பட்டது. தற்போத தமிழகம் எங்கும் பூரண அமைதி நிலவுகிறது.”**

தீவிரவாதிகள் அனைத்து மதங்களிலும் இருக்கும் மிகக்குறைந்த பிரிவினரேயாகும். மதத்தலைவர்கள் அனைவரும் மதத் தீவிரவாதிகளை ஒதுக்கி வைக்கவேண்டும். அவ்வாறு ஒதுக்கிவைத்து மதத் தலைவர்கள் சிலரும் அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்கள். மதத் தீவிரவாதிகளுடைய செயல்களுக்கு எந்தவிதமான ஆதரவையும் அளிக்காது, அவர்களைக் கண்டித்து, தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு அரசிற்கு எல்லா உதவிகளையும் அளிக்க முன்வர வேண்டும். மத வேற்றுமையைத் தூண்டிவிடும் பேச்சுகளைக் குறைத்து, எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் பிற மதத்தினரையும் மதிக்கக் கற்றுக்கொண்டு, மத நல்லிணக்கத்தை உறுதி செய்ய மதத் தலைவர்கள் மேலும் உதவிடவேண்டுமென்று அரசு இத்தருணத்தில் கோருகிறது. அரசின் சட்டம் - ஒழுங்கு இயந்திரத்தை மட்டும் வைத்துக்கொண்டு, மதத்தீவிரவாதத்தை முழுமையாக ஒழிக்க இயலாது. மக்களுடைய மனதில் இருக்கின்ற மத வேறுபாட்டை நீக்கவேண்டும். அதற்கு சமுதாயத் தலைவர்களும், மதத் தலைவர்களும் துணை நிற்கவேண்டுமென்று அரசு வேண்டுவதுடன் அதற்கான முழு முயற்சிகளையும் அரசு எடுத்திடும் என்று உறுதி அளிக்கிறது.

கோயம்புத்தூர் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக இதுவரை 6½ கோடி ரூபாய் நிதி உதவியை அரசு அறிவித்துள்ளது. வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை எதுவாயினும் ஏற்பட்டுள்ள இழப்புக்கு அது ஈடாகாது என்பதை இந்த அரசு உணர்கிறது. இழப்புக்கு ஆளான குடும்பத்தினருக்குக் கண்ணீருடன் கலந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, தமிழகம் அமைதி பூமியாக விளங்கிட அனைத்துத் தரப்பு மக்களின் ஒத்துழைப்பையும் வழங்குமாறு மீண்டும் ஒருமுறை வேண்டிக் கேட்டுக் கொண்டு இந்த வெள்ளை அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

**மு.கருணாநிதி**
முதலமைச்சர்.



பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளையொட்டி 29.4.98 அன்று சென்னை மெரினாவில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க.அன்பழகன், மற்றும் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# குடிநீர் பிரச்சினையைப் போக்க ஊராட்சி, நகராட்சிகளுக்கு ரூ.430 கோடி ஒதுக்கப்படும்.



1989ல் தற்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்குப் முன்னால் ஊராட்சி ஒன்றியச்சாலைகளைத் தார்ச்சாலைகளாக மாற்றியமைக்க இயலாத நிலை இருந்தது. கலைஞர் அவர்கள்ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பின்னர்தான் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும் தார்ச் சாலைகளாக அமைக்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தினார்.

### கூடுதலாகத் தார்ச்சாலைகள் அமைப்பு

இதன் அடிப்படையில் 1996 - 97ல் 5,000 கி.மீ. தார்ச்சாலையும், 1997 - 98ல் 5,000 கி.மீ. தார்ச் சாலையும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டதன் பேரில், இதுவரை இரண்டு ஆண்டுகளில் 11,764 கி.மீ. தார்ச்சாலைகள் எடுக்கப்பட்டு பெரும்பகுதி முடிவடையும் நிலை உள்ளது. இதைத் தொடர்ந்து இந்த ஆண்டு சென்ற ஆண்டுகளைவிட சற்றுக் கூடுதலாக 7,000 கி.மீ. வரை தார்ச்சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

### நீர்நிலை ஆதாரம் மேம்பாட்டுத் திட்டம்

ஊராட்சிகளில் குடிநீர்ப் பிரச்சினையில் அதிகக் கவனம் செலுத்திடும் இந்த அரசு, இதற்குத் தொடர்புடைய இதர பணியான நீர்நிலை ஆதாரத்தை மேம்படுத்தும் புதிய திட்டத்தினைத் துவங்க உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஊராட்சிகளுக்கு உட்பட்ட பெரிய, சிறிய குளங்கள், குட்டைகள், ஊரணிகள் எதுவாக இருப்பினும் அவைகளில் ஒரு ஊராட்சிக்கு ஒன்று வீதம் எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் வரத்து வாய்க்கால் மதகு, வடிகால் மதகு, தடுப்பு அணை, படித்துறை, ஆழப்படுத்தும் பணி போன்ற பணிகளை செய்ய இருக்கிறது.

### ஊராட்சிகளுக்காக ரூ.126 கோடி

இதற்காக ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலா ரூ.1 லட்சம் வழங்கப்பட இருக்கிறது. இதன்படி தமிழகத்திலுள்ள 12,593 ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் ரூ.126 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இதுவரை கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு மட்டும் முதல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தது. உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு கட்டடங்கள் பற்றாக்குறை வெகுவாக இருப்பதால் இந்த ஆண்டு, முதல் முறையாக கிராமப்புறங்களில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 500 கட்டடங்கள் கட்டித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ.14 கோடி அனுமதிக்கப்படும்.

1997 - 98 ஆம்ஆண்டில் கிராமப்புறங்களில் 2217 பொது விநியோக கட்டடங்கள் கட்டித் தரப்பட்டது. இதைப்போன்று இந்த ஆண்டிலும், மேலும் 2000 பொது விநியோக கட்டடங்கள் ரூ.30 கோடி செலவில் கட்டித் தரப்படும்.

இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு கட்டிட சாமான்கள் விலையேற்றம் மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக, தற்போதைய மதிப்பீட்டு தொகையை உயர்த்தி தரவேண்டும் என்று உறுப்பினர்களும், பயனாளிகளும் நீண்ட நாட்களாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கான்கீரிட் கூரை அமைப்பதற்கென, தமிழக அரசு வழங்கி வரும் தொகையான, ரூ.7000த்தினை இந்த ஆண்டு ரூ.121,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு முதல்வர் அறிவித்தபடி ரூ.35 இலட்சம் என்ற கணக்கின் அடிப்படையில் 235 தொகுதிகளுக்கும் ரூ.82.25 கோடி செலவிடப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு 2 ஜீப்புகள் என்ற முடிவின்படி ஏற்கெனவே இவ்வரசு வழங்கிய 211 ஜீப்புகள் போக, 173 ஜீப்புகளுடன் உதவி செயற்பொறியாளர்களுக்கு 68 ஜீப்புகளும் ஆக மொத்தம் 241 ஜீப்புகள் ரூ.9.035 கோடி செலவில் வழங்கப்படும்.

### 30 ஆயிரம் தெருவிளக்குகள்

முழுமையாகத் தெரு விளக்கு இல்லாத குடியிருப்புகளுக்குத் தெருவிளக்குவசதி அமைத்திடத் தேவையெனக் கணக்கிடப்பட்ட 50,000 தெரு விளக்குகளில் 1997 - 98ல் அமைக்க ஆணையிடப்பட்ட 20,000 தெரு விளக்குகள் தவிரத், எஞ்சியுள்ள 30,000 தெருவிளக்குகள் சுமார் ரூ.12.60 கோடி செலவில் அமைக்கப்படும்.

ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கும் நிலையங்களை மேம்படுத்திட ரூ.2 கோடி நிதி உதவி அளிக்கப்படும். பயிற்சியின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றம் பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றை ட்ரைசம் பயிற்சி நிறுவனங்களாகச் சேர்க்கப்படும்.

சட்டப்பேரவையில் உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. கோ.சி.மணி அறிவிப்பு



## குடிநீர்க் குழாய்கள் அமைக்க ரூ.15 கோடி

கோடைக்காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் ஊராட்சிகளில் கைப்பம்புகள், விசைப்பம்புகள், புதிய குழாய் நீட்டிப்புச் செய்தல், குழாய் நீட்டிப்பினை விரிவுபடுத்துதல் போன்ற பணிகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் புதிதாக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சுற்றுலா மையங்கள், மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளை ஒட்டியுள்ள ஊராட்சிகள் தெரிவுசெய்து சாலை வசதி, பொது சுகாதார வசதி மேம்பாட்டிற்காகச் சமன்பாடு ஊக்க நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்குவதற்கு ரூ.10 கோடி புதிதாக ஒதுக்கீடு செய்யப்படும்.

ரூ.13.88 இலட்சம் செலவில் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் 500 எம்.எம் திறந்த சிலிண்டர் அமைப்புகள் இந்தியா மார்க் - 3 கைப்பம்புகள் நிறுவப்படும். இதைத்தவிர ரூ.21.80 இலட்சம் செலவில் சத்தியமங்கலம், தாளவாடி, அந்தியூர் வட்டாரங்களில் இந்தியா மார்க் - 2 பம்புகள், மார்க் - 3 பம்புகளாக மாற்றப்படும்.

மத்திய ஊரக சுகாதார திட்டத்தின் கீழ் - ஈரோடு, சேலம், நாமக்கல், மாவட்டங்களில் 176 கழிப்பிடங்கள் தலா ரூ.9,000 மதிப்பீட்டில் கட்டப்படும். மத்திய ஊரக சுகாதார திட்டம், யூனிசெப் மற்றும் டானிடா திட்டங்களுடன் இணைந்து முழுமையான ஊரக சுகாதாரத் திட்டம் இம்மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

50 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சந்தைகளை மேம்படுத்திக் கொள்ள தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.2.5 கோடி நிதி வழங்கப்படும்.

தற்போது ஊராட்சிகளில் ஒப்படைக்கப்படும் திட்ட வேலைகளுக்குத் தேவையான சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகள் ஊராட்சி ஒன்றிய இருப்பிலிருந்து வழங்கப்படுகின்றன. இனிமேல் தேவைப்படும் இரும்புக் கம்பிகள் மற்றும் சிமெண்ட் ஆகியவற்றை ஊராட்சிகளே வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்படும்.

## பணிகள் காலதாமதம் - தவிர்த்திட ஏற்பாடு

தற்போது ஊராட்சிகளின் சுயநிதி மற்றும் வளர்ச்சித்திட்ட நிதியிலிருந்து செயல்படுத்தப் படும் வேலைகள் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தொழில்நுட்ப பணியாளர்கள் மூலம் செயல் படுத்தப்படுகின்றது.

ஊராட்சிகளின் நிதி ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. ஆகவே சிறிய வேலைகளை மட்டுமே எடுத்துச் செய்யக்கூடிய நிலை உள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சுமார் 30 முதல் 60 வரை ஊராட்சிகள் உள்ளன. இவற்றிற்கான பணிகளின் மதிப்பீடு மற்றும் மேலளவு செய்தல் யாவும் ஊராட்சி ஒன்றியத்தி லுள்ள தொழில்நுட்ப பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்படுவதால் மிகுந்த காலதாமதம் ஆகிறது என முறையீடுகள் அரசிற்கு வந்துள்ளன.

இவ்வகையான இடர்பாடுகளை நீக்குவதற்குக் கேரளா போன்ற மாநிலங்களில் பட்டம் பெற்ற பொறியாளர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் ஊராட்சிகளின் இடர்ப்பாடுகள் பெரிதும் நீங்கியுள்ளன.

இதுபோன்றே தமிழக அரசும் ஊராட்சிகளின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு பட்டயப் பொறியாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப் பரிசீலித்து வருகிறது. திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு பட்டயப் பொறியாளர்களை பயன்படுத்திக்கொள்ள ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப் பரிசீலித்து வருகிறது. திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்குத் தற்போதைய நடைமுறைகளே நீடிக்கும்.

ஒப்படைக்கப்படும் வேலைகளின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் இப்பொறியாளர் களுக்குக் கட்டணமாக ஊராட்சியிலிருந்து வழங்க அனுமதிக்கப்படும்.

1997 - 98 ஆம் ஆண்டில், தெருவிளக்கு சம்பந்தமான பொருட்கள் வாங்கிட அரசு நிறுவனங்களையும் மற்றும் பொருட்களின் விலையையும் நிர்ணயித்தது. தெரு விளக்கு சம்மந்தமான பொருள்கள் வாங்குவதற்குத் தற்போதுள்ள ஒப்பந்தக்காலம் முடிவுற்றதும், ஊராட்சிகள் தாங்களாகவே தங்கள் தேவைக் கேற்பத் தெருவிளக்கு சம்பந்தமான பொருள்களை (ஐ.எஸ்.ஐ) முத்திரை கொண்ட தரம் வாய்ந்த பொருட்களாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனைகளுடன் வாங்கிக் கொள்ள அனுமதி வழங்கப்படும்.

கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் பழுதுபார்ப்பதற்கு ஊராட்சிகளே விலைப்புள்ளி ஒப்பந்தப் புள்ளியினைப் பெற்று, ஊராட்சியின் தீர்மானத்துடன் செயலாக்கம் செய்திட அனுமதிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பொது நிதி உபரியிலிருந்து மேற்கொள்ளப்படும் மூலதனப் பணிகளுக்கான நிதிவரம்பு உயர்த்தப்பட்டு, தனியான பணிகளுக்கு ரூ.5 இலட்சம் வரை ஊராட்சிஒன்றியக் குழுவும், ரூ.5 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரை மாவட்ட ஆட்சித்தலைவரும், ரூ.10 இலட்சத்திலிருந்து 1 கோடி வரை ஊரக வளர்ச்சி இயக்குநரும், 1 கோடிக்குமேல் அரசும் நிர்வாக அனுமதி வழங்க அனுமதிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் இளநிலை உதவியாளர் பதவிக்கு, பணி உயர்வு பெற, தகுதியான கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பகுதிநேர . முழுநேர எழுத்தர்கள்வேலை வாய்ப்பகங்கள் மூலமே தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கி இதன் மூலம் அனைத்து ஊராட்சி உதவியாளர்களும் இப்பதவிக்கு தகுதி பெற ஆவன செய்யப்படும்.

சொந்தக் கட்டடம் இல்லாத 289 ஊராட்சிகளுக்கும் இந்த ஆண்டு கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டு அனைத்து ஊராட்சிகளும் சொந்தக் கட்டடத்திலேயே செயல்படுகிறது என்ற நிலை ஏற்படுத்தப்படும்.

## ஊர்நல அலுவலர்கள் நியமனம்

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணிகளை ஒருங்கிணைத்து, திட்டப் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்தத் தேவையான எண்ணிக்கையில் ஊர்நல அலுவலர்கள் களப்பணியாளர்களாக மீண்டும் நியமிக்கப்படுவார்கள். உறுப்பினர்களின் நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் சுகாதாரப் பணியாளர்களைப் பணியிடங்கள் தோற்றுவிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியிடங்களில் ஏற்கெனவே பதலியாட்டுகளாகப் பணிபுரிந்து வந்த

நபர்களே பெரும்பாலும் பணியமர்த்தப் பட்டுள்ளனர். இவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு தொகுப்பு ஊதியத்தினை மாற்றியமைத்து ஆணை வெளியிடப்படும். இதன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் 31.12.96 ல் ஏற்கெனவே பத்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் 2,100 வீதமும், ஐந்து முதல் பத்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் ரூ.2000 மும் ஐந்து ஆண்டு வரை பணிபுரிந்தவர்களுக்கு ரூ.1500 மும் வழங்கப்படும்.


### துப்புரவுப் பணியாளர்

இதேபோன்று பேரூராட்சிகளில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் ரூ.1800 - ம், ஐந்து முதல் 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் ரூ.1500ம் ஐந்து ஆண்டுகளுக்குள் பணி புரிந்தவர்களுக்கு மாதம் ரூ.1200ம் வழங்கப்படும். சென்னை மாநகராட்சிக்கு மட்டும் 2783 புதிய துப்புரவு பணியாளர்கள் பணியிடங்களைத் தோற்றுவித்து அரசு ஆணையிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிகளில் 600 விளக்குகளுக்கு ஒரு லைன்மேன் மற்றும் ஒரு ஹெல்பர் என்ற அடிப்படையில் புதிய பணியிடங்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து தோற்றுவிக்கப்படும். பேரூராட்சிகளில் தற்போது இப்பணியை மின்வாரியப் பணியாளர்கள் செய்துவருகிறார்கள். இந்த நிலையை மாற்றித் தெருவிளக்குகள் பராமரிப்பதற்கெனப் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

மாநகராட்சிகளில் உள்ளது போன்று இனி மேல் நகராட்சிகளில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் பாலியஸ்டர் சீருடை வழங்கப்படும்.

மாநிலத்திலுள்ள 102 நகராட்சிகளில் 79 நகராட்சிப் பகுதிகளில் மலேரியா, பைலேரியா போன்ற நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளதால் நோய்த் தடுப்பு நடவடிக்கைக்காகத் தெளிப்பான் மற்றும் மருந்து விநியோகத்திற்காக ரூ.50 இலட்சம் சிறப்பினமாக நிதி ஒதுக்கப்படும்.



அருப்புக்கோட்டை, மாதவரம், ஒசூர், திண்டுக்கல் மற்றும் சங்கரன் கோவில் நகராட்சிகளில் குடிநீர் திட்டங்களை மேம்படுத்த ரூ.1.50 கோடி ஒதுக்கப்படும்.

16 பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்த ரூ.1.21 கோடி நிதி ஒதுக்கப்படும்.

பேரூராட்சிகளில் தண்ணீர் வசதியில்லாத பொதுக் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுக்க ரூ.7.5 இலட்சமும், உலர் கழிப்பிடங் களைத் தண்ணீர் வசதி உள்ள நவீன கழிப்பிடங் களாக மாற்றியமைக்க ரூ.40 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிச்சாலை களின் நிலமையை ஆய்வு செய்து, அரசு பல்வேறு நிதியினங்களிலிருந்து சாலை மேம்பாட்டிற்காகச் சிறப்பாக ஒரு தொகையைப் புதிதாக முடிவு செய்துள்ளது. இதன்படி பேரூராட்சிகளுக்கு ரூ.2.5 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.20 கோடியும் வழங்கப்படும். இந்தத் தொகையுடன் நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் தங்களது பொது நிதியையும் சேர்த்து நல்லமுறையில் சாலைகளைப் பராமரிக்கலாம்.

பேருந்து நிலையங்களுக்குச் செல்லும் சாலை, சிறிய தெருக்கள் மற்றும் சந்துகளை சிமெண்ட் சாலைகளாக மாற்றியமைக்கத் தனி நிதி இந்த ஆண்டு முதல் முறையாக ஒதுக்கீடு செய்யப்படும். அந்தந்த நகராட்சி பாதி செலவையும் பேரூராட்சி 25 சதவீத செலவையும் ஏற்கும். இந்தத் திட்டத்திற்காக நகராட்சிகளுக்கு ரூ.5 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ.10 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படும்.

3 மண்டல நகராட்சி இணை இயக்குநர்களுக்கும், 3 பேரூராட்சி உதவி இயக்குநர்களுக்கும் முறையே ரூ. 6.45 இலட்சம் மற்றும் 8.50 இலட்சம் செலவில் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை கடந்த ஆண்டில் சுமார் 50 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்ட 22 பாலம் கட்டும் பணிகளில் முடிக்கப்பட்ட ஏழு பணிகள் தவிர எஞ்சிய பணிகள் நடப்பாண்டில் கட்டி முடிக்கப்படும்.

### சென்னையில் மேம்பாலங்கள்

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மாநகரின் எல்லைக்குள் 12 இடங்களில் மேம்பாலம் அமைத்தல் மற்றும் சுரங்கப்பாதை அமைத்தல் ஆகியவற்றிற்கான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு உயர் தொழில்நுட்ப உதவியுடன் பணிகள் உடனடியாகத் துவங்கப்படும்.

ஏற்கெனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு சொத்துவரி நிர்ணயிக்கும் புதிய முறை அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி களில் நடைமுறைப்படுத்தப்பட்டு, அந்த முறையின் அடிப்படையில் 1.10.98 முதல் வரி சீராய்வு செய்யப்படும்.

சுற்றுலா மையங்கள் மற்றும் புகழ் பெற்ற புனித ஸ்தலங்களாகக் கருதப்படும் பேரூராட்சி கள் மற்றும் நகராட்சிகளில் அடிப்படை வசதி செய்யக் கூடுதலாக சமன்பாடு நிதியிலிருந்து பேரூராட்சிகளுக்கு ரூ.5 கோடியும், நகராட்சி களுக்கு ரூ.3 கோடியும் இந்த ஆண்டு புதிதாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் சில பேரூராட்சிகளை மக்கள் தொகை, மக்கள் தொகை நெருக்கம், ஆண்டு வருமானம் மற்றும் விவசாய முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சிகளாக மறுவகை மாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டது. சுமார் 100 பேரூராட்சிகள் இதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றி உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி இவை களை ஊராட்சிகளாக அறிவித்திடத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கை நடப்பு நிதியாண்டில் முடிவடையும்.

அடுத்த 2 ஆண்டுகளில் சென்னை மாநகரில் மீதமுள்ள 2,600 குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றியமைக்கப்படும்.

இந்த நிதியாண்டில் குடிநீர்த் திட்டங் களுக்காக 28 மாவட்டங்கள் உள்ளடக்கிய 212 சட்ட மன்ற தொகுதிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 1090 ஊராட்சிகள் மற்றும் 5,500 ஊரகக் குடியிருப்புகளுக்கும், 20 ஊரகப் பேரூராட்சிகள் இதர ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கும் ரூ.330 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 5 நகராட்சிகள், 20 நகரப் பேரூராட்சிகள், குடியிருப்புகளுக்கும் குடிநீர்த் திட்டங்களுக்காகவும் இதர நகர பகுதிகளுக்கான திட்டங்களுக்காகவும் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த நிதி ஒதுக்கீடு ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காகக் கடந்த ஆறு ஆண்டுகளின் சராசரி நிதி ஒதுக்கீடான ரூ.178 கோடியைக் காட்டிலும் 85 விழுக்காடு அதிகமாகும். இதே போன்று நகரக் குடிநீர்த் திட்டங்களுக்குச் சென்ற காலங்களில் ஒதுக்கப்பட்ட ரூ.48 கோடியைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகும்.

### கோவை மாவட்டக் குடிநீர்த் திட்டங்கள்

கோவை மாவட்டத்தில் திருப்பூர் இரண்டாம் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 5 ஊராட்சி ஒன்றியங் களில் உள்ள 49 ஊராட்சிகளில் அடங்கிய 412 ஊரகக் குடியிருப்புகளுக்கான திட்டம் ரூ.31.5 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில்

அரச்சலூர், தொட்டாம்பாளையம் திட்டங்கள் ரூ.19.60 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் தாணிப்பாடி தண்டராம்பட்டு திட்டம் ரூ.4.38 கோடி மதிப்பீட்டிலும் கன்னியா குமரி மாவட்டம், கொல்லங்கோடு ஏழுதேசம் குடிநீர்த் திட்டம் ரூ.4.38 கோடி மதிப்பீட்டிலும் முடிக்கப்படவுள்ளது.

இந்த நிதியாண்டில் ஊரக குடிநீர்த்திட்டங் களுக்கான மொத்த ஒதுக்கீடான ரூ.330 கோடியில் 56 ஊராட்சிகள் அடங்கிய 537 ப்ளோரைடால் பாதிக்கப்பட்ட ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் 72 ஆயிரம் மக்கள் பயன்பெறும் திட்டம் செயல்படுத்தப்படும்.

நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் 401.36 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட்டு வரும் 16 பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்கள் 33 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் 1999 - 2000 ஆண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். உதாரணமாக நாகை, திருவாரூர், மாவட்டங்களில் வேதாரண்யம் - திருத்துறைப்பூண்டி திட்டம் ரூ.105.46 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில் முத்தூர் - காங்கேயம் திட்டம் ரூ.62 கோடி மதிப்பீட்டிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளை - நான்குனேரி திட்டம் ரூ.43 கோடி மதிப்பீட்டிலும், ரெம்பலூர் மாவட்டத்தில் துறையூர் திட்டம் ரூ.31.11 கோடி மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் கடம்பூர் - விளாத்திக்குளம் திட்டம் ரூ.28.50 கோடி மதிப்பீட்டிலும் செயலாக்கத்தில் உள்ளன.

இந்த நிதியாண்டில் 10 பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 21 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.272.71 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். உதாரணமாக, கோவை மாவட்டம், பொள்ளாச்சி ஊரகப் பகுதிகளுக்கான திட்டம் ரூ.54.70 கோடி மதிப்பீட்டிலும் ஈரோடு மாவுட்டத்தில் வெள்ளக்கோவில் திட்டம் ரூ.24.30 கோடி மதிப்பீட்டிலும், நாகை மாவட்டத்தில சீர்காழி - செம்பனார் கோவில் திட்டம் ரூ.19.20 கோடி மதிப்பீட்டிலும், சேலம் - நாமக்கல் மாவட்டத்தில் பட்டணம் - சீராப்பள்ளி திட்டம் ரூ.61.41 கோடி மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டத்தில் பூவாலூர் - குறும்பலூர் திட்டம் ரூ.26.40 கோடி மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டத்தில் 4 ஊராட்சி ஒன்றியங்களில உள்ள 9 ஊராட்சிகளில் 43 ஊரகக் குடியிருப்பு களுக்கான திட்டம் ரூ.12 கோடி மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

### முதல்வர் அறிவித்தபடி தன்னிறைவுப் பணிகள்

தமிழக முதல்வர்அவர்கள் தமிழகத்தில் அனைத்து ஊரகக் குடியிருப்புகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வசதி பெறும் வகையில் 9-வது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக 1998 - 99 ஆம் ஆண்டிற்குள் 10 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள் அனைத்தும் முழு அளவு குடிநீர் பெறும் வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்படும். மேலும் 11 முதல் 39 லிட்டர் வரை குடிநீர் பெறும் குடியிருப்புகளுக்கு முழு அளவில் குடிநீர் வழங்கும் அடிப்படையில் முதற்கட்டமாக இந்த ஆண்டே சில ஊராட்சி ஒன்றியங்கள் குடிநீர் வசதியில் தன்னிறைவு அடையத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்ற ஊராட்சி ஒன்றியங்கள் 9-வது ஐந்தாண்டு திட்ட கால இறுதிக்குள் தன்னிறைவு அடையத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குடிநீர்ப் பற்றாக்குறை மிகுந்த இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டத்தைச் சேர்நத 3 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 342 ஊராட்சிகளில் அடங்கிய 1,787 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 14 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 400 கோடி மதிப்பீட்டில் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 5 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாளையம், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் நகரப் பேரூராட்சிகளில் எரியோடு, தாடிக்கொம்பு, அகரம் கிராமப் பேரூராட்சிகள் மற்றும் 284 ஊராட்சிகளில் அடங்கிய 1432 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.190 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த்திட்டம் நிறைவேற்றப்படும். காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் நகராட்சிக்கு ரூ.73 கோடி 2 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாடு திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

கோவை மாநகராட்சிப் பகுதியில் 8 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.48 கோடி மதிப்பீட்டில் பில்லூர் குடிநீர்த் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். சேலம் மாநகராட்சிப் பகுதியில் 6 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.64 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாடு திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

சேலம் மாவட்டத்தில் 3,80,000 மக்கள் பயன்பெறும் வகையில் பட்டிணம் - சீராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தம்மம்பட்டி மற்றும் 5 ஊரக பேரூராட்சிகள், 56 ஊராட்சிகளில் அங்கிய அனைத்து ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.43 கோடி மதிப்பீட்டில் கூட்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் 6 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் பட்டினம் - சீராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 3 ஊரக பேரூராட்சிகள் மற்றும் 150 ஊராட்சிகள் அடங்கிய 858 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.64 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

### கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மதுரை மாவட்டத்தில் 3 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 12 ஊராட்சிகளைச் சேர்ந்த 83 குடியிருப்புகள், டி,கல்லுப்பட்டி ஒன்றியத்திலுள்ள 93 குடியிருப்புகள், ஏழுமலை கல்லுப்பட்டி ஊரக பேரூராட்சிகள், பேரையூர், ஆண்டிப்பட்டி ஒன்றியத்திலுள்ள 8 ஊராட்சிகளில் அடங்கிய 36 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.47 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருச்சி மாவட்டம் 5 இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் காவேரி ஆற்றினை நீராதாரமாக் கொண்டு மருங்காபுரி - வையம்பட்டி, மணப்பாறை மற்றும் கடம்பூர் ஒன்றியத்திலுள்ள 223 ஊராட்சிகளில் அடங்கிய 1138 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.48 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

சேலம் மாவட்டத்தில் 75 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் காவேரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு எடப்பாடி - கொங்கனாபுரம் ஒன்றியங்களில் 31 ஊராட்சிகளை சேர்ந்த 15 வழியோர கிராமங்களுக்கு ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் 75 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் காங்கேயம் மற்றும் சென்னிமலை ஒன்றியங்களில் 47 ஊராட்சிகளைச் சேர்ந்த 232 குடியிருப்புகளுக்கு முத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து ரூ.7.40 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் 1 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ஊத்துக்குடி ஒன்றியத்திலுள்ள 44 ஊராட்சிகளில் 217 குடியிருப்புகளுக்கு ரூ.10 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)

# தமிழகத்தில் ஒரே நேரத்தில் ரூ.427 கோடியில் 16 அணைத் திட்டங்கள்!

கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே திட்டங்களுக்கா குறை? இராஜாதோப்பு கானாறு அணை, மோர்தா அணை, செண்பகத் தோப்பு அணை, ஆண்டியப்பனூர் ஓடை அணை, வரட்டாறு - வள்ளி மதுரை அணை, மலட்டாறு - பத்தலப்பள்ளி அணை, குப்பனத்தம் அணை, அடவி நயினார் கோவில் அணை, கொடு முடியாறு அணை, நம்பியாறு அணை, பொய்கையாறு அணை, இருக்கன்குடி அணை, சண்முகாநதி அணை, சோத்துப்பாறை அணை, வடக்குப் பச்சையாறு அணை, நங்காஞ்சியாறு அணை என்று 16 திட்டங்கள், இப்போது அதன் வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு மதிப்பீட்டில்? 427 கோடி ரூபாய் மதிப்பில்; 16 திட்டங்கள் 427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்கு வேலைகள் தமிழ்நாட்டில் ஒரே நேரத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

இவ்வளவு பெரிய தொகையில், 16 இடங்களில் ஒரே நேரத்தில் வேலைகள் நடக்கின்றன. இதுபோல வேறு ஒரு மாநிலத்தைச் சுட்டிக் காட்ட முடியுமா?

இந்த ஆட்சியில் இரண்டு திட்டங்கள் கொண்டு வந்தார்கள். அதில் ஒன்று மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம், எதிர்க் கட்சித் தலைவர் தொகுதியில் இது வருகிறது. அதற்கும் இன்றைக்குக் கலைஞர் அவர்கள் 16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை.

மக்களுக்குத் திட்டத்தின் பயன் சேர வேண்டும் என்பதற்காக அந்த இருக்கண்குடி திட்டத்திற்காக 28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்.

1989-லே ஆட்சிக்கு வந்தவுடனே, பொய்கையாறு, நம்பியாறு, அடவிநயினார் கோயில், நங்காஞ்சியாறு, இராஜாதோப்பு கானாறு, மோர்தனா போன்ற அணைத் திட்டங்களை அறிவித்தோம்.

இந்த முறை ஆட்சிக்கு வந்தபிறகு, வடக்குப் பச்சையாறு, அணைத் திட்டம், செண்பகத் தோப்பு அணைத்திட்டம், பத்தலப்பள்ளி அணைத் திட்டம், வரட்டாறு அணைத் திட்டம், குப்பநத்தம் அணைத் திட்டம் போன்ற திட்டங்களைத் துவக்கியிருக்கிறோம். இந்த 16 புதிய அணைக்கட்டுத் திட்டங்கள் மட்டுமல்ல, அதே நேரத்தில் ஏற்கெனவே உள்ள அணைகளை பலப்படுத்த வேண்டி திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

16 அணைகள் கட்டுமானம், மற்றொன்று ஏற்கெனவே உள்ள அணைகளைப் பலப்படுத்தல், 14 அணைகளைப் பலப்படுத்துவதற்கு 55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஒரே நேரத்தில் பணி நடந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று, கால்வாய்களைத் தூர் எடுக்கும் பணி, கால்வாய்களைப் புனரமைக்கும் பணி, கரைகளைப் பூசுதல், கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் மதகு அடைப்புகளை மாற்றியமைக்கும் பணி செய்தல் போன்ற பணிகளுக்கு 341 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 17 இடங்களில் அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதேமாதிரி தூர்வாரி, வாய்க்கால்களை மேம்படுத்தி, கரைகளை வலுப்படுத்தி, மதகுகளை மாற்றி அமைப்பதற்கான திட்டங்களுக்கு இந்த ஆண்டு 25 கோடி ரூபாய். காவேரி கழிமுகப் பகுதியில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி தூர் வாரும் பணிக்கு இந்த ஆண்டு 23 கோடி ரூபாய்; சென்ற ஆண்டு 12 கோடி ரூபாய். இவ்வளவும் கலைஞருடைய ஆட்சிலேதான்.

கிட்டத்தட்ட பார்த்தால், பொதுப்பணித் துறையிலே அணைகளைக் கட்டுவது, அணைகளைப் பழுது பார்ப்பது, கால்வாய்களைப் பலப் படுத்துவது, நவீனப்படுத்துவது, தூர்வாருவது, குளங்களை ஆழப்படுத்துவது, ஏரிகளைச் செப்பனிடுவது என்று ஒரே நேரத்திலே இந்த மாநிலத்தில் கிட்டத்தட்ட 1700 கோடிக்கான மதிப்புள்ள திட்டங்கள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

# சென்னை மாநகரில் வெள்ளத் தடுப்பிற்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு!

சென்னை மாநகரில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற்காக, பெருமளவில் ஒருங்கிணைந்த திட்டங்கள் பலவற்றைச் செய்ய ரூ.300 கோடியை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள்.

இதில் கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் முதலிய நகரின் நீர் வழிகளைத் தூர்வாருதல், கூவம் - அடையாறு ஆகிய ஆறுகளின் கரைகளைப் பலப்படுத்துதல், கரைகளின் அருகிலே தடுப்புச் சுவர்கள் கட்டுதல், மேலும் சென்னையில் பெருவெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளாகும் தணிகாசலம் நகர், மணலி போன்ற இடங்களுக்கு வெள்ள நிவாரணம் அளித்தல் போன்ற பெரும் பணிகள் அடங்கும்.

மேலும் நகரில் பெருநீர் வடிகால்களுக்கு வந்துசேரும் மாநகர வடிகால் வாய்க்கால்களைப் புதுப்பித்தல், தேவைப்படும் புதிய வடிகால் வாய்க்கால்களை அமைத்தல் போன்ற பணிகளும் இதில் அடங்கும்.



இதுவரை ஓட்டேரி நல்லா, மத்திய பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றைத் தூர்வாரும் பணிகள் செய்து முடிக்கப்படும் தருவாயில் உள்ளன.

இதன் தொடர்ச்சியாக வடசென்னைப் பகுதியில் உள்ள வடக்கு பக்கிங்ஹாம் கால்வாய் தூர்வாரும் பணி ரூ.5.72 கோடி. தென்சென்னைப் பகுதியில் மறைமலையடிகள் ஆற்றுப் பாலத்திற்கு மேற்கே அடையாறு ஆற்றின் இடதுகரையில் ஒரு கிலோமீட்டர் நீளத்திற்குத் தடுப்புச் சுவர் கட்டுதலுக்கு ரூ.4.7 கோடி மற்றும் தணிகாசலம் நகருக்கு வெள்ளநிவாரணம் ரூ.18 கோடி ஆகிய பணிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட இருக்கிறது.

தாம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் மீ.அ.வைத்தியலிங்கமும், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலுவும் இதுகுறித்து, திரும்பத் திரும்ப அரசிடம் கேட்டு, முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் பல மனுக்களைக் கொடுத்திருந்தார்கள்.

மழைக்காலங்களில் அடையாற்றில் மிகுதியான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கரையோரைப் பகுதிகள் முழுகும் நிலை ஏற்பட்டு, பெருத்த நட்டத்தை மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம், படப்பை, கூடுவாஞ்சேரி, மண்மங்கலம், சோமங்கலம் ஆகிய பகுதிகளில் மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து வரக்காரணம்; திருநீர்மலை என்கிற இடத்தில் அடையாற்றில் கலப்பதால் மட்டுமல்லாமல், மழைக்காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வரும் உபரிநீரும் அதே திருநீர்மலையிலேயே அடையாற்றில் கலப்பதாலும்தான். இப்படி வரும் பெருவெள்ளம் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது.

எனவே, அடையாற்றில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளத்தைத் தவிர்க்கவும், வீணாக அந்த நீர் கடலில் கலப்பதைத் தேக்கிவைப்பதற்கும் அதன்மூலம் மக்களுக்குக் குடிநீருக்காகப் பயன்படுத்தும் நோக்கத்தில் நிலத்தடி நீரைப் பெருக்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நிலத்தடி நீர் குறையும் காலங்களில், கடல் நீர் நிலப் பகுதிக்குள் நுழைந்து குடிநீரை உப்பு நீராக மாற்றுவதையும் தடுக்க முடியும். மேலும் வளர்ந்துவரும் சென்னை மாநகரின் விரிவாக்கத்திற்கும், பெருகிவரும் தொழிற்சாலைகளுக்கும் இந்த நீர் எதிர்காலத்தில் பயன்படும்.

எனவே, திருநீர்மலையில் அடையாற்றின் குறுக்கே பலநோக்கு கொண்ட ஒரு நீர்த்தேக்கம் அமைக்க முதலமைச்சர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார். இதுகுறித்து விரிவான ஆய்வைப், பொதுப்பணித்துறை உடனடியாக மேற்கொள்ளும்.

*சட்டப்பேரவையில் 22. 4. 98 அன்று*
*மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்*
*திரு.துரைமுருகன் அறிவிப்பு.*

**1998-99** ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறைக்கான மான்யக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து அமைச்சர் சமயநல்லூர் செல்வராசு அவர்கள் பேசியதாவது:-

மாறிவரும் சமுதாயத்தில், மலர்ந்து நிற்கும் ஆதிதிராவிடர் நலத்துறை, மிகச் சிறப்பாகச் செயல்பட மூன்று பெரும் திட்டங்களாவன:-

*கல்வி நிலையை உயர்த்துதல்.*

*பொருளாதார நிலையை உயர்த்துதல்.*

*அடிப்படை வசதிகளைப் பெருக்குதல்.*

- ஆகியவற்றை முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்.

இத்திட்டங்கள் மூலம் ஆதிதிராவிடர் மக்கள் வாழ்வுயர, வாக்குயர, சீருயர, சிறப்புயர அவர்கள் செம்மாந்து வாழ, ரூ.434 கோடி நிதியினை மனநிறைவோடு முதல்வர் அவர்கள்

# ஆதிதிராவிட மக்களுக்கு இந்த ஆண்டில் 60 ஆயிரம் இலவச கான்கிரீட் வீடுகள்



வழங்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கூடுதல் நிதி**

முந்தைய ஆட்சியில், ஒதுக்கப்பட்ட நிதியைக் காட்டிலும், கழக ஆட்சியில் ரூ.225 கோடியே 90 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இங்கு நான் குறிப்பிடவேண்டும். ஆதிதிராவிடர் மக்கள் வாழ்க்கைத் தரம் உயரத் தமிழக முதல்வர் அவர்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மீது கொண்டுள்ள பற்று, பரிவு, பந்தம், பாசம், ஒட்டு உறவின் காரணமாக, கோடி கோடியாக அள்ளித் தந்து இருக்கிறார்கள் என்பதை நன்றி உணர்வோடு எடுத்துக் கூற விழைகிறேன்.

6 நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், நிலை உயர்த்துவதோடு மட்டுமின்றி, நிலை உயர்த்தப்பட்ட 12 பள்ளிகளுக்கும் அடிப்படை வசதிகள், கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, இதற்காக ரூ.1 கோடியே 37 இலட்சத்து 13 ஆயிரத்தை ஒதுக்கியுள்ளார்கள். 3 மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கும், சென்னை கன்னிகாபுரம்,செவ்வாய்ப்பேட்டை மகளிர் மேல்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் திருச்சி மாவட்டம் துறையூர் மாணவர் இல்லத்திலும் சுற்றுச்சுவர் எழுப்பவும், கோமுகி அணை பழங்குடியினர் மனையகப் பள்ளிக்குச் சிறுபாலம் அமைக்கவும் ரூ.91 இலட்சத்து 48 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**எங்கும் கணினி, எதிலும் கணினி**

"மாணவர்கள் எதிர்காலச் சமுதாயத்தின் விதை நெல்" என்பதை உணர்ந்த அரசு, மாணவர்களைக் கண்ணின் மணியெனக் கருதி, 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'என்பதைப்போல, எங்கும் கணினி - எதிலும் கணினி எனும் நிலையினை நம் முதல்வர் அவர்கள் ஏற்படுத்தி, 51 மேல்நிலைப் பள்ளிகளிலும், 9 உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு - கணினிகளுக்கான கல்வியும், நலப்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் கணினியில் பயிற்சியும், படித்த இளைஞர்களுக்குச் சுயதொழில் சார்ந்த கணினி பயிற்சியும், அதனைத் தொடர்ந்து கணினி மையங்கள் வைக்கவும் நிதி அளித்துள்ளார்கள்.

**மாணவர்களுக்குத் தங்கும் விடுதிகள்**

வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவர்கட்குப் புதிதாக இரண்டு விடுதிகளும், மேலும் பள்ளி மாணவர்களுக்கு 20 விடுதிகளும் சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் பொன்னேரி ஆகிய இடங்களில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு மூன்று விடுதிகளும், ஆகமொத்தம் 25 விடுதிகள் இவ்வாண்டு தொடங்கப்படும் என்பதை இப்பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**உணவுக் கட்டணம் உயர்வு**

மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக் கட்டணமாக முந்தைய ஆட்சியில் ரூ.202.50 ஆக இருந்தது. மாணவர்களின் வயிற்றுப் பசியைப் போக்கி, அறிவுப் பசியை வளர்த்திட, மாணவரில்லங்களில் படிக்கும் மாணவர்களின் உள்ளம் மகிழும் வண்ணம் பழகுபவர்களுக்கு அகநானூறாக, பாங்குடன் வாழுவதற்குப் புறநானூறாக விளங்கும் முதல்வர் அவர்கள் நான் நூறு நூறாகத் தருகிறேன் நானூறாகத் தருகிறேன் என்று ரூ.400 ஆக உயர்த்தித் தந்துள்ளார்கள். இது இரட்டிப்பாக, தித்திப்பாக இருக்கிறது. ஆதிதிராவிட மாணவர்களுக்கும் - ஏன்? பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் அட்சயப் பாத்திரமாக, அமுத சுரபியாகத் திகழ்பவர் நம் முதல்வர் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

**விடுதிகளுக்கும் புதிய கட்டடங்கள்**

மாட்டுத் தொழுவங்கள் போல், கடந்த கால ஆட்சியில் கட்டப்பட்டுள்ள மயானக்கூரை போல் இடிந்த, வடிவமிழந்த சில தனியார் கட்டடங்களில்

*சட்டப்பேரவையில் 29.4.98 அன்று மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சர் திரு.* **சமயநல்லூர் செல்வராசு** *அவர்கள் அறிவிப்பு*

நடந்து வந்த மாணவ - மாணவியர் விடுதிகளை மாற்றி, புதிய கட்டடங்கள் கட்ட ரூ.8 கோடியே 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்டதோடு நில்லாமல், ஒழுங்காக விடுதிக் கட்டடங்களைக் கட்டுவதற்குத் திறந்த முறை ஒப்பந்தப்புள்ளி பெற்று, அவைகளைக் கட்டுவதற்காக ஆதிதிராவிட ஒப்பந்தக் காரர்களுக்கு மட்டுமே முன்னுரிமையும் முதலிடமும் அளித்து, கட்டடப் பணிகளைக் கண்காணிப்பதற்காக ஐவர் குழு ஒன்றையும் அமைத்து, ஒரு புதியமுறை இப்போது கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த மகத்தான செயல்பாட்டினை இந்திய அளவில் முதன்முதலாக உருவாக்கித் தந்த உன்னதத் தலைவர் கலைஞர் அவர்களே.

### விடுதிகளுக்குச் சமையல் எரிவாயு

சென்னையிலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவர் விடுதியில் தங்கிப் பயிலும் 500 மாணவர்கட்கு ரூ.17 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் அறைகலன்களும், வளர்ந்து வரும் அறிவியல் யுகத்தில், அடுப்பெரிக்க விறகுக் கட்டைகளா? புகைக்கும் மண்ணெண்ணெய் அடுப்புகளா? எனச் சிந்தித்த கலைஞர் அவர்கள், பணத்தடைகள் முன்நின்றபோதும், மனத்தடையில்லாத தாராள குணத்தால், வாடுகின்ற பயிர்களுக்கு வான்மழை போல், 50 மாணவர் இல்லங்களுக்குச் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்குவதற்காகச் சிறப்பு நிதியாக ரூ.20 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளார்.

### கல்வி-குடும்பத் திட்டம்

ஒரு காலத்தில் குலத்துக்கு ஒரு கல்வித் திட்டம் என்றிருந்தது. இன்று குடும்பத்துக்கு ஒரு கல்வித் திட்டத்துக்கு கலைஞர் வழி வகுத்துள்ளார். ஒவ்வொரு ஆதிதிராவிடர் - மலைவாழ் மக்களும் தனிப்பட்ட முறையில் தொழில்துறையில் முன்னேறவும், குடும்பம் தழைக்கவும், கல்வியில் நாட்டம் பிறக்கவும், கல்வியால் பயன்கிட்டும் என்பதை உறுதிசெய்யவும் "கல்வி - குடும்பத் திட்டம்" என்ற ஒரு புதிய திட்டத்தை இவ்வரசு புதிதாகக் கொண்டுவந்துள்ளது.

இத்திட்டத்தின்படி எந்தக் குடும்பம் தனது பிள்ளைகளில் ஒருவரையாவது, பட்டயம் அல்லது பட்டப்படிப்பில் தேர்ச்சி பெறச் செய்கிறதோ, அந்தக் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் குறைந்தது ரூபாய் பதினைந்து ஆயிரம் என்ற அடிப்படையில் சிறுதொழில் கூடம் அமைத்திட, அடிப்படைச் சாதனை வசதிகளை, இலவசமாக அரசு வழங்கும் ஒரு புதுமையான பொருளாதார மறுமலர்ச்சித் திட்டம் இது.

*சாதிகளை வேரறுத்து, சமத்துவத்தை நிலைநாட்ட இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டமான சமத்துவபுரம் எனும் திட்டத்தை விடுதலைப் பொன்விழாவில் பொன்னொளித் திட்டமாக அறிவித்து, தமிழகம் எங்கும் தலா 100 வீடுகளைக் கொண்ட 50 சமத்துவபுரங்களை உருவாக்கி அதில் அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றி, எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற உள்ள உணர்வை உருவாக்கிய, சமத்துவச் சூரியனாக விளங்கும் முதல்வர் அவர்கள் 50 சமத்துவபுரத்திற்கு ரூ.17 கோடியே 50 இலட்சம் ஒதுக்கித் தந்துள்ளார்கள்.*

### பழங்குடியினர் மேம்பாட்டுக் குழு

பழங்குடியின மக்களின் மேல்நிலைக் கல்வி வளர நூறு விழுக்காடு இலக்கு எய்தவேண்டும் என்பதை இத்துறைக் கொள்கையாக மேற்கொண்டு, அதற்கொப்ப நடப்பு ஐந்தாண்டு காலத்தில் திட்டங்களைச் செயல்படுத்தும். இதன் முதற்படியாக, வரும் ஆண்டில் பழங்குடியினர் மேலாண் குழு நடத்தும் மேல்நிலைப்பள்ளி ஒன்றைத் துவக்க முதலமைச்சர் அவர்களின் மேலான பரிந்துரைப்படி, மத்திய அரசு ரூ.1 கோடி வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளிலும், பழங்குடியினர் நலனுக்காக மனையகப் பள்ளிகள் அதாவது உண்டுறைவிடப் பள்ளிகள் இந்த இனத்தின் விடியலுக்காகப் பாடுபட்ட தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மாவட்டத்தில் கத்தேரி மலையிலும், கோவை மாவட்டத்தில் காடம்பாறை மற்றும் பரளி இரு இடங்களிலும், தேனி மாவட்டத்தில் ஆனைமலையிலும் ஆகிய 4 இடங்களில் தொடங்குவதற்கு ரூ.15 இலட்சத்து 23 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### பணி இடங்களை நிரப்ப நடவடிக்கை

ஒதுக்கப்பட்ட மக்களுக்காக, ஒதுக்கப்பட்ட பணியிடங்களை அரசுத் துறைகளிலும், அரசுத்துறை நிறுவனங்களிலும் நிரப்பப்படாமல் இருக்கும் இடங்களை முழுமையாக ஒடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நிரப்புவதுதான் இந்த அரசின் லட்சியமும், இலக்குமாகும்.

### வீட்டுமனை - இலவச வீடுகள்

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டடி மனை வழங்குவதற்கும், வேண்டிய நற்காரியங்கள் விரைந்து நடத்திடுவதற்கும், இத்துறையைச் சாா்ந்த 20 தனி வட்டாட்சியர்களுக்கு ரூ.71 இலட்சம் செலவில் ஜீப்புகள் வாங்கி வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும், குடியிருக்கக்கூட குடிசையில்லாது வாடிய ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியாவிலேயே முதன்முதலாகக் கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்த பெருமை கலைஞர் அவர்களையே சாரும். இந்த முன்னோடித் திட்டத்தின் அடிப்படையில்தான் அனைத்திந்திய அளவில் "இந்திரா வீட்டு வசதித் திட்டம்" உருவாக்கப்பட்டது என்பது உலகறிந்த உண்மை.

நடப்பாண்டில் 60 ஆயிரம் வீடுகள் கட்டப்படும். குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு ரூ.68 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீட்டுமனைக்கான நில எடுப்புப் பணிக்கென ரூ.15 கோடியே 51 இலட்சம் நடப்பாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு 75,000 இலவச மனைபடிப் பட்டாக்கள் வழங்கப்படும்.

### சுந்தரலிங்கம் வாரிசுக்கு இலவச வீடுகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் பாஞ்சாலங்குறிச்சியை அடுத்துள்ள கவர்னகிரியில் வாழ்ந்த விடுதலை வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு 200 வீடுகள் மற்றும் சாலை, பூங்கா, நூலகம், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளோடு, கவர்னகிரியில் "வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமம்" ரூ.1 கோடியே 5 இலட்சம் செலவில் கம்பீரமாக அமைக்கப்பட்டு, 18.4.98 அன்று துவக்கி வைத்த முதல்வர் அவர்களுக்கு கவர்னகிரியில் வாழும் ஆதிதிராவிடர் மட்டுமல்லாமல், உலகில் வாழும் அத்தனை ஆதிதிராவிடர் மக்களும் காலமெல்லாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளனர்.

### சமத்துவபுரம் காணும் சமத்துவச் சூரியன்

சாதிகளை வேரறுத்து, சமத்துவத்தை நிலைநாட்ட இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டமான சமத்துவபுரம் எனும் திட்டத்தை விடுதலைப் பொன்விழாவில் பொன்னொளித் திட்டமாக அறிவித்து, தமிழகம் எங்கும் தலா 100 வீடுகளைக் கொண்ட 50 சமத்துவபுரங்களை உருவாக்கி அதில் அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றி, எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற உள்ள உணர்வை உருவாக்கிய, சமத்துவச் சூரியனாக விளங்கும் முதல்வர் அவர்கள் 50 சமத்துவபுரத்திற்கு ரூ.17 கோடியே 50 இலட்சம் ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

### கொத்தடிமை ஒழிப்பு

கொத்தடிமை ஒழிப்பில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழகம். தமிழக அரசின் கொத்தடிமை மறுவாழ்வுத் திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரி என்று உச்ச நீதிமன்றம் பாராட்டியுள்ளது. தமிழ்நாட்டில் எவ்வளவு கொத்தடிமைகள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, முதற்கட்டமாக அவர்களில் 10 ஆயிரம் பேர் மறுவாழ்வு பெற அரசு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளது. இதற்கு மத்திய அரசும் ரூ.3 கோடி நிதி வழங்கியுள்ளது.

துப்புரவுத் தொழிலாளர்கள் மறுவாழ்வுத் திட்டத்திற்கு நேரடிக் கடன் அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மனிதனே மனிதக் கழிவுகளை அகற்றும் அவலம் நீங்கச் சட்டம் இயற்றப்படும்.

★ ★ ★



தமிழ்நாடு அரசின் சார்பில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இல்லத்தை அரசு நினைவகமாக்க நாமக்கல் கவிஞர் குடும்பத்தினருக்கு ரூ.9இலட்சத்து 58 ஆயிரத்துக்கான காசோலையினை மாண்புமிகு தமிழக **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் 30.4.98 அன்று வழங்கினார். காசோலையினைப் பெற்றுக்கொண்ட நாமக்கல் கவிஞர் குடும்பத்தினர், முதல்வருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

# "தொழிலாளர்களின் தோழனாய் விளங்கிடும் அரசு, இது!"

**முதல்வர் கலைஞர் மே நாள் செய்தி**



மே நாள் - மேதினியெங்கும் கொண்டாடப்படும் தொழிலாளர் திருநாள்! உழைப்பை மதித்து - உழைப்பாளிகளின் உயர்வுகள் குறித்துச் சிந்தித்து ஊக்கமுடன் செயல்பட்டிட உலகத்தவர்க்கு உணர்வூட்டிடும் உன்னதப் பெருநாள்!

உடல்நலம் கெட - உள நலம் குன்றிட - உழைப்பாளர்கள் சுரண்டப்படுவதை உணர்ந்து - எட்டு மணி நேர வேலை கேட்டுப் போராடி - செங்குருதி சிந்தி - சித்திரவதைகளுக்கு ஆளாகி - தூக்கு மேடைகளேறி - அன்று அமெரிக்க மண்ணில் தியாகச் சுவடுகள் பதித்த தீரமறவர்களைப் போற்றி வெற்றிப் பதாகையுயர்த்தி வணங்கிடும் வீரத் திருநாள்- மே நாள்!

இந்த மே நாளை - இந்திய மண்ணில் முதன்முதலில் கொண்டாடிய பெருமை தமிழகத்திற்கு உண்டு.

மே நாள் கொண்டாடிடும் தொழிலாளர்தம் மேன்மைக்காக முதன் முதல் தொழிற்சங்கம் கண்ட பெருமையும் தமிழகத்திற்கு உண்டு.



மே நாள்- மிகுந்த மகிழ்ச்சியுடன் தொழிலாளர் பெருமக்களால் கொண்டாடப்படுவதற்காக - அந்நாளிற்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கிய பெருமைகூட தமிழகத்திற்கு அதிலும், இந்த அரசுக்குத்தான் உண்டு.

தொழிலாளர் நலம் காக்க 1969 ஆம் ஆண்டில் ஒரு தனி அமைச்சகம் கண்ட பெருமையும் இந்த அரசுக்கே உண்டு!


இவை மட்டுமல்ல;

தொழிலாளர் நல வாரியம் அமைத்தது - தொழிலாளர் ஓய்வு பெறும்போது பணிக்கொடை வழங்கிடச் செய்தது - தொழில்புரியும் காலத்தில் விபத்துக்கள் நேர்ந்து தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால், அவர்களுக்குத் தொழில் விபத்து நிவாரணம் வழங்கிடும் திட்டம் கண்டது - தொழிலாளர் வாழ்க்கைத்தரம் உயர தொழிலாளர் கல்வி நிலையம் கண்டது - ஒப்பந்தத் தொழிலாளர்களின் நலன் காத்திடத் தனிச் சட்டம் கண்டது - மே நாள் நூற்றாண்டின் நினைவுச் சின்னம் அமைத்தது முதலிய பல்வேறு பணிகளை நிறைவேற்றி - தொழிலாளர் உணர்வுகளைப் போற்றி அவர்களின் நலன் காத்திட அரண்கள் பல அமைத்துள்ளதும் இந்த அரசே.

கடந்த ஆண்டில் - அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்திட குழு ஒன்றை அமைத்து - அக்குழு வழங்கியுள்ள அறிக்கையின் அடிப்படையில், சலவையாளர்கள், மண்பாண்டம் வனைவோர், சுமை தூக்கிடுவோர், முந்திரி உடைத்தல், பந்தல் அமைத்தல், கயிறு தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற அமைப்பு ரீதியில் இல்லாத 43 வகை தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் என ஏறத்தாழ 25 இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு நோய்க்கால உதவிக் காப்பீடு, பேறுகால உதவித் தொகை, ஓய்வூதியம் போன்ற நல உதவிகள் வழங்கிடக் கூடிய "அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர் நல வாரியம்" ஒன்றை உருவாக்கிடத் திட்டமிட்டு - அதற்குரிய அறிவிப்புகளை அண்மையில் வெளியிட்டுள்ளதும் இந்த அரசே.

இப்படித் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு - அவர்தம் வாழ்வு உயர்ந்திட - வளம் உயர்ந்திட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திட்டங்கள் பல தந்து தொழிலாளர்களின் தோழனாய் விளங்கிடும் தமிழக அரசின் சார்பில் தொழிலாளர் சமுதாயத்திற்கு என் இதயம் கனிந்த மே நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

நான் தரையில் வாழ்கிறவன்
கருப்பை சிசுப்போலக்
கால்மடக்கித் தூங்குகிறவன்.
இந்தக் கட்டில்களை,
நுரைமெத்தைகளை எல்லாம்
அப்புறப்படுத்தினால் நல்லது.
நசுங்கிய பல்லியை
மொய்க்கிற எறும்புகள்
கட்டில்கால் வழியான பாதையில்
வளர்கின்றன.



சிதறின தின்பண்டத் துண்டுகள்
தென்படுவதும் உண்டு.
மூட்டுவலித்தைல வாசனை தவிர
அதிகப்படி மணம் எதுவுமில்லை.
என்றோ இந்தப் படுக்கையில் படுத்துக்
கேட்ட ஒலிநாடாக்களின் இழை
அறுந்த சிக்கல்கள்
ஜன்னல்கள் வழியே எறியப்பட்டு
வாழைகளின் பக்கக் கன்றுகளில்
சுற்றி அலைக்கழிகின்றன.
விரியன் பாம்புகள்
மே மாத உச்சித் தீயில்
புடைநீங்கிக் கட்டிலுக்கு
விரைந்துவரும் சாத்தியமும் உண்டு,
புற்றுகளுக்கு நடுவில் உள்ள
என் வீட்டில்.
நீங்கள் அதில் படுத்திருக்க
விருப்பமெனில்
ஆட்சேபமில்லை, நகர்த்திக் கொள்ளுங்கள்
உங்கள் இடத்திற்கு.
எனக்குக் கட்டில்களற்ற
விசாலத் தரை போதும்.
தரை -
குளிர்ந்த தரை !

# கைத்தறித் துணிகளுக்கு 30 சதவிகிதத் தள்ளுபடி !

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு மே இறுதிக்குள் ரூ.43.25 கோடி !

# நூல் விலை நிர்ணயம் செய்ய மாநில அளவில் குழு !

# நெசவாளர்களுக்கான காப்பீட்டுத்தொகை ரூ.35 ஆயிரம் !

## சட்டப்பேரவையில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு


**1998-99**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 27.3.98 அன்று சட்டப்பேரவையில் வைத்தபோது நான் அறிவித்ததற்கிணங்க, கைத்தறித் துறைச் செயலாளரை அமைப்பாளராகவும் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.என்.சுப்பிர மணியன், ஈ.எஸ்.எஸ்.இராமன், நா.பெரியசாமி, இரா.தாமரைக்கனி, கே.ஆர்.ஜி.தனபால், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் ஜெ.சுத்தானந்தன், ச.சி.பெருமாள் மற்றும் நிதித்துறை கூடுதல் செயலர் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இக்குழு கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால் உருவாகியுள்ள பிரச்சினைகள், நெசவாளர்களுக்கு எளிதாக நியாயவிலையில் நூல் கிடைக்க வழிவகைகள், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும், தேவையான கடன் வசதி எளிதில் பெறுவதற்குமான செயல்பாடுகள் போன்றவற்றை ஆராய்ந்து மே மாதம் முதல் தேதிக்குள் அரசுக்கு அறிக்கையினை வழங்கிடக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க, இக்குழு சென்னை மற்றும் நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடங்களுக்கு நேரில் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தது. மேலும், இக்குழு கூட்டுறவு சாராத நெசவாளர் சங்க அமைப்புகள், நாபார்டு மற்றும் வங்கி அலுவலர்கள், நூற்பாலைகள், தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து தனது பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கையினை 27.4.98 அன்று என்னிடம் அளித்தது.

இக்குழுவின் பரிந்துரைகள் 29.4.98 அன்று, அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 31.3.98 வரை தேங்கியுள்ள கைத்தறித் துணிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுவரும் 20 சதவிகிதத் தள்ளுபடியுடன் மேலும் 10 சதவிகிதம் சிறப்புத்தள்ளுபடி மே மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு அளிக்கப்படும்.



கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய 1994-95 மற்றும் 1995-96 ஆகிய ஆண்டுகளுக்கான பழைய பாக்கி தள்ளுபடி மானியமான ரூ.43.25 கோடி மே மாத முடிவுக்குள் அளிக்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து ரூ.50 கோடி மதிப்பிற்குக் கொள்முதல் செய்திட உற்பத்தித் திட்டத்தினை கோ-ஆப்டெக்ஸ் உடனடியாக அந்தச் சங்கங்களுக்கு வழங்கிடும்.

கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்திட கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குத் தேவையான நிதியுதவி அவ்வப்போது அளிக்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் செய்திடும் மொத்த விற்பனைக்கும் 20 சதவிகிதம் தள்ளுபடி அளிக்கப்படும்.

### தள்ளுபடி மானிய பாக்கிகள் ஒவ்வொரு காலாண்டும் வழங்கப்படும்

தள்ளுபடி மானிய பாக்கிகள் ஒவ்வொரு காலாண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும். ஏற்கெனவே சரியாக அளிக்கப்படவில்லை. எனவேதான் தள்ளுபடி மானிய பாக்கிகளை ஒவ்வொரு காலாண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும்.

கைத்தறித் துணிகள் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் அரசுத்துறைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான துணிகளைப் பிரதம சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படும்.

கோ-ஆப்டெக்ஸ் பிரதம சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யும் பொழுது, துணியின் முழு மதிப்பையும் சங்கங்களுக்கு அளித்து அவற்றின் விற்பனையின் போது நுகர்வோருக்கு அரசுத் தள்ளுபடியினை அளித்து, அதன் பின்னர் அத் தள்ளுபடித் தொகையினை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளும்.

### நெசவாள உறுப்பினர் அனைவருக்கும் அடையாள அட்டை

உண்மையான கைத்தறி நெசவாளர்கள் தான் அரசின் திட்டங்களின் பயன்களைப் பெறுகிறரர்கள் என்பதை உறுதி செய்து கொள்ளும் வகையில், சங்கங்கள் தங்களது நெசவாள உறுப்பினர் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கும்.

மத்திய அரசு முன்பு அமல்படுத்தி வந்த சிட்டா நூல் மானியத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்திட மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தும்.

கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகள், பிரதம நெசவாளர் சங்கங்களுக்குக் கடனிலும் நூல் வழங்கும்.

### நூல் விலையினை நிர்ணயம் செய்ய மாநில அளவிலான குழு

நூல் விலையினை நிர்ணயம் செய்வதற்காக மாநிலத்தின் பல்வேறு நெசவாளர் மையங்களிலுள்ள நெசவாளர் சங்கப் பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்படும்.

டான்சில்க் நிறுவனத்திடமிருந்து பட்டுச்சங்கங்கள் கடனில் வாங்கிய பட்டு நூலுக்கான தவணை தவறிய பாக்கிக்கு விதிக்கப்பட்டுள்ள 2 சதவீதம் தண்டவட்டி, சங்கங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிலுவையைச் செலுத்தினால், ரத்து செய்யப்படும்.

நடப்பு ஆண்டிற்கு, பிரதம சங்கங்களுக்கு மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நாபார்டு வழங்கும் ரொக்கக் கடன், 1997-98ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அளவிற்கு வழங்கிடவும், சங்கங்களுக்கு வரவேண்டிய தள்ளுபடி மானிய முழுத் தொகையினை வங்கிக் கடனுக்கு நிதிஆதாரமாக எடுத்துக்கொள்ளவும், சங்கங்களுக்கு அளிக்கப்படும் 3 சதவிகித வட்டி மானியத்தை, முன்பு நடைமுறையில் இருந்தது போலவே வங்கிகளே நேரடியாக அரசிடமிருந்து பெற்றுக்கொள்வதை மீண்டும் அமல்படுத்திட வேண்டும் என்றும் நாபார்டு வங்கியிடம் வலியுறுத்தப்படும்.

நெசவாளர் சங்கங்கள் வங்கிக் கடன் பெறுவது போன்ற பிரச்சினைகளை அவ்வப்போது தீர்த்துக்கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நெசவாளர் சங்கங்கள் மற்றும் வங்கிகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட அளவிலான குழு அமைக்கப்படும்.

### காப்பீட்டுத் தொகை உயர்வு

நெசவாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டுவரும் காப்பீட்டுத் தொகையான ரூ.25,000ஐ, ரூ.35,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

கூட்டுறவுச்சங்க நெசவாளர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் பணிபுரிவோர் உட்பட, இப்போது பணிபுரிந்தால் இல்லை என்றிருக்கிறது. அதை மாற்றி 60 வயதான உறுப்பினர் அனைவரும் பயன்பெறும் வகையில் நிபந்தனைகள் தளர்த்தப்படும்.


கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்படும்.

கைத்தறி ஒதுக்கீட்டுச் சட்டம் முறையாக அமலாக்கம் செய்யப்படும்.

தனியாரிடம் உள்ள நெசவாளர்களின் நலனைக் காத்திட, கைத்தறித் தொழிலாளர்கள் நலச்சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

### மாநிலக் கைத்தறி ஆலோசனைக்குழு மீண்டும் அமைக்கப்படும்

மாநில அளவில் 1989ஆம் ஆண்டில் இருந்ததைப்போல் கைத்தறி அமைச்சர் தலைமையில் மாநிலக் கைத்தறி ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கப்படும்.



கைத்தறித் துணி தேக்கத்தினால் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினரல்லாத தனியார் நெசவாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பு இழந்துள்ளனர். எனவே தனியார் துறையில் ஏற்பட்டுள்ள துணித் தேக்கத்தினைப் போக்கி, அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்திட நாபார்டு மறுநிதி திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாகக் கடனுதவி வழங்கப்படும்.

தமிழகக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குக் கைத்தறி ஏற்றுமதியில் உருவாகியுள்ள சுணக்கமும் ஒரு காரணமாகும். தமிழக அரசு, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்கச் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்தும்.

### நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புனரமைப்புத் திட்டங்கள்

நன்றாக இயங்கிவந்து கடந்த ஆட்சியில் நலிவடைந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைத்திட நாபார்டு நிதிநிறுவனத்தின் ஆலோசனையுடன் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவை தொழிலாளர்கள், வங்கிகள் ஆகியோருடைய ஒத்துழைப்புடன் மீண்டும் நன்முறையில் இயங்க முயற்சிகள் எடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். அதற்கேற்ப 16 கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு நூற்பாலைகள் இலாபகரமாக இயங்கும் வகையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன்மூலம் இந்த நூற்பாலைகளில் நிலுவையில் உள்ள பஞ்சு கொள்முதல் பாக்கி மற்றும் இதர நிலுவைகள் மிகவிரைவில் தீர்க்கப்படும்.

- இவ்வாறு 30.4.98 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். ●

# வேர்கள்

- அசோகமித்திரன்

வேர்கள் என்ற சொல் சில ஆண்டுகளாக மிகுந்த செல்வாக்கு பெற்றிருக்கிறது. நாட்டியக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் (குறிப்பாக வாத்தியம் இசைப்பவர்கள்), ஓவியக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூகத் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள் எனப் பல பிரிவினர் நம் வேர்களை முக்கியக் கவனம் செலுத்தி அறிய வேண்டும் என்று பல தருணங்களிலும், சூழ்நிலைகளிலும் கூறி வருகிறார்கள். வேர்களைத் தேடாதவன் சமகாலத்தை உணராதவன் என்பது போன்ற எண்ணம் சமுதாய மாற்றத்தின் இயக்கங்களில் அக்கறை கொண்டவர்கள் நடுவில் நிலவுகிறது.

இன்றைய மாற்றங்கள் பலவும் ஏற்படாத காலத்தில், இந்திய சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் வேர்களை அறியவேண்டும் என்ற தாகம் இருந்ததாகத் தெரியவில்லை. இன்றைவிட அன்று கிராமங்கள் கிராமங்களாகவே இருந்தன. பல நகரங்களின் வாழ்க்கை கிராமப்புறத்தை விட அதிகம் மாறுபட்டிருந்ததாகக் கூற முடியாது. நகரத்திலேயே பல இடங்களில் விடிய விடியக் கூத்து நடக்கும். பெட்ரோமாக்ஸ் விளக்கை வைத்துக் கொண்டு சந்தனக்குடம், புலிவேஷம் சகிதமாக நள்ளிரவில் ஊர்வலம் வரும். இப்படி வெளிப்படையான நிகழ்ச்சிகளைத் தவிர அன்றாட வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் பல நூற்றாண்டுகளை நினைவில் கொள்ளக்கூடிய பழக்க வழக்கங்கள் வெகு சகஜமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. மகிழ்ச்சியையும் வளர்ச்சியையும் குறிக்கும் திருமணச் சடங்கிலிருந்து ஒருவரின் இறுதிச் சடங்கு வரை அந்தந்தப் பிரிவினரின் வசதிக்கேற்பவும் செல்வாக்குக்கேற்பவும் கிரியைகள் நிறைவேற்றப்பட்டன. இவை நீண்ட தொடர்ச்சியுடையவை என்ற உணர்வுகூட அன்று தோன்றியிருக்க நியாயமில்லை. எப்போதோ ஒருமுறை வன்முறை தோன்றினாலும் பொதுவாக ஒரு மதத்தினர் தங்களுடைய பகிரங்க மதச் சடங்குகளை நிறைவேற்றும்போது இன்னொரு மதத்தினர் வழிபாட்டு நம்பிக்கைகளை அலட்சியப்படுத்தாத முறையில் நடந்து கொண்டார்கள். மதுராவிலும், காசியிலும் மட்டும் கோயிலும், மசூதியும் அடுத்தடுத்து இருப்பதாக அமையவில்லை. மாநிலங்கள் பலவற்றில் இப்படிப் பல இடங்கள் நெடுங்காலமாக இருக்கின்றன. என் இளம்பிராயத்தைக் கழித்த அன்றைய நிஜாம் ராஜ்யத்தில் ஆடி மாதம் முழுக்க மாங்காளம்மா ஜாத்ரா (மாகாளியம்மன் யாத்திரை) எனக் கடைப்பிடிக்கப்படும். நானிருந்த ஊரில் மட்டும் தினம் ஏழெட்டு ஊர்வலங்கள், கரகம் சகிதம் இரட்டை அல்லது நான்கு பறை வாத்தியத்துடன் நடைபெறும். அந்தக் கடும் வெயிலில் கரகம் சுமந்து ஆடி வருபவர் பரவச நிலையில் இருப்பர். ஆனால், மசூதி உள்ள தெருவில் நுழைந்தால், மேளம் நிறுத்தப்பட்டு, ஊர்வலம் மசூதியைக் கடந்த பிறகுதான் மீண்டும் ஒலிக்கத் தொடங்கும். பரவச நிலைக் கரகக்காரரும் இந்தக் கட்டுப்பாட்டுக்கு இணங்கித்தான் நடப்பார். இதெல்லாமே வெகு இயல்பாக நிகழும். யாரும் இதைத் தவறாகவோ, இகழ்ச்சியாகவோ நினைத்தல் கிடையாது. இந்த ஜாத்ராவின் ஒரு பகுதியாகப் புலிவேஷமும் நிகழ்த்தப்படும். புலிவேஷக் கலைஞர்கள் அநேகமாக முஸ்லீம்கள்தான். இதே கலைஞர்கள் மொகரம் வரும்போது மீண்டும் புலிவேஷம் அணிவார்கள். ஒரு பிள்ளையார் கோயிலை அடுத்தும் அனுமார் கோயிலை அடுத்தும் மசூதிகள் இருந்தன. வெள்ளிக்கிழமை பிள்ளையார் கோயிலுக்கு முக்கியமான நாள். அன்று குடம் ஏற்றி ஆரத்தி காட்டுவதோடு நிறுத்தாமல் பிரசாதமாகச் சுண்டலும் தருவார்கள். சரியாக எட்டு மணிக்கு முடிந்துவிடும்... இதையும் யாரும் பாரபட்சமான ஏற்பாடாக நினைக்கவில்லை.

"அன்று உங்கள் அனைவருக்கும் பெரியண்ணனாக வெள்ளைக்காரன் உட்கார்ந்திருக்கிறான். அதனால்தான் இந்த நல்ல பிள்ளைத்தனம்" என்று இன்று சிலர் கூறக்கூடும். இதில் உண்மை சிறிதும் கிடையாது என்று கூறிவிடமுடியாது. ஆனால், முழு உண்மையும் இதுவே எனவும் கூறிவிட முடியாது.

இரண்டாம் உலக யுத்தம் 1945-ம் ஆண்டு முடிந்தபோது, மனித இனத்தின் பல நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டிருந்தன. பொதுவுடைமையை வாழ்க்கை நெறி என்று ஆட்சி மூலம் மக்களை ஏற்கச் செய்த ஓர் அரசு, ஒரு நெருக்கடியின்போது மணல் வீடு போலச் சரிந்துவிடும் என எதிர்பார்த்த மேலைச் சிந்தனையாளர்களை நிலைகுலைய வைப்பது போலச் சோவியத் ரஷ்யா, ஜெர்மனியைப் போரில் தோற்கடித்தது. ஆனால், மிகப் பெரிய விரக்தியை ஏற்படுத்தியது, மேலைச் சிந்தனை வளம், தத்துவம், தாராளக்கல்வி, நுண்ணிய கலை உணர்வு, ஜனநாயகம் இவற்றுக்கெல்லாம் இதர நாடுகளோடு உரிமை கொண்டாடிய ஜெர்மனி பெரும் திரளான மக்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தது. மனிதன் தோன்றியதிலிருந்து எவ்வளவோ போர்களுக்குப் பிறகு படுகொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் அடிமைகளாகக் கடத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்களை எல்லாம் அக்கிரமங்களுக்கும் உட்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஜெர்மனியில் நிகழ்த்திய யூத இன ஒழிப்புப் பேய்த்தனமானது. 'முழு யூத இன ஒழிப்பு பேய்த்தனமானது'. 'முழு யுத்தம்' என்ற பெயரில் பல நூற்றாண்டுகள் ஆயிரம் மக்கள் முயற்சியில் உருவான அழகிய நகரங்கள் சில நூறு குண்டுகளால் தரைமட்டமாகி இருக்கின்றன. குழந்தைகள், பெரியவர்கள், ஆண், பெண், முதியோர், நோயுற்றோர் என்ற பேதமில்லாமல் உடல் சிதறி இறந்திருக்கிறார்கள். இடிபாடுகள் நடுவில், அனாதையாகத் திரியும் குழந்தைகளும், கிழவர்களும் ஒருவாய் உணவுக்குக் குப்பைத் தொட்டிகளைக் கிளறியிருக்கிறார்கள். இராணுவ முகாம்களின் அருகாமையில் பிச்சைக் கேட்டு நின்றிருக்கிறார்கள். இச்சூழ்நிலையில் வேர்கள் என எந்த மேலைநாட்டினரும் தேடிப் போகக் கூடிய



மனநிலையில் இருந்திருக்க நியாயமில்லை. மாறாக மேலைய வெள்ளையர் ஆதிக்கத்தில் பல நூற்றாண்டுகளைக் கழித்துவிட்ட கறுப்பு இன மக்களும் கீழைய நாட்டினரும் வேர்களை நாடிச் செல்லத் தொடங்கினர்.

வேர்கள் பண்டையக் கலாச்சாரம், பழக்க வழக்கங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதோடு முடிந்து விடுவதாக எண்ணப்படவில்லை. பகுத்தறிவுவாதம் நிலை கொண்ட இந்த இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் பழைய மத நம்பிக்கைகளையும் இந்த வேர்கள் மீட்டுக் கொணர்ந்தது. ஐக்கிய அமெரிக்காவில் கறுப்பு இனத்தவரிடையே ஒரு பிரிவினர் அவர்கள் ஆப்பிரிக்கக் கண்டத்தின் முஸ்லீம் குழுவினிடமிருந்து கடத்திக் கொணர்ந்தவர் என அறிவித்துக் கொண்டார்கள். கரும் சிறுத்தைகள், "கறுப்பு முஸ்லீம்கள்" என்ற அந்த இயக்கங்கள் அறுபதுகளிலும் எழுபதுகள் தொடக்கத்திலும் அமெரிக்கர்களிடையே சிறிது பயமும் பீதியும் கூட ஏற்படுத்தியது. இவர்களின் தலைவர் எலிஜா முகம்மது என்பவர் பண்டைய மதக்குழுவினரிடையே இருக்கக்கூடிய ஒரு பரிபூரண சர்ணாகதியைத்தான் எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால், அவருடைய முக்கியச் சீடரான மால்கம் எக்ஸ் என்பவர் எலிஜா முகம்மதுவிடமிருந்து பிரிந்து சென்று தனித் தலைவரானார். இருவருமே அரங்கப் பேச்சாற்றலால் கேட்போரை எதையும் செய்யத்தூண்டும் அபார சக்தி பெற்றவர்கள். இவர்களுடைய கோட்பாடுகளும், வேட்கைகளும் பழங்குடிமக்கள் காலத்துக்கும், சூழ்நிலைக்கும் பொருத்தமாக இருந்திருக்கக்கூடும். ஆனால், ஜனநாயகம், சமத்துவம் முதலிய சிந்தனைகளும் உலவக்கூடிய நாட்களில் இந்த இயக்கங்கள் போன்றவை நீடித்த மாற்றங்கள் நிலையாகக் கொண்டுவருவது கடினம். இந்த இயக்கங்களின் விளைவாக காஸியல் கிளே என்பவர் முகம்மது அலி என அன்று பெயர் மாற்றம்செய்து கொண்டதோடு அல்லாமல், அரசின் கட்டாய ராணுவ சேவை ஆணைக்குட்படாமல் உலக வீரர் பட்டத்தைத் துறந்து சிறைவாசமும் மேற்கொண்டார். நடந்து முடிந்த 1996 அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியின் துவக்க நாளன்று அவர் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியத்தில் வேர்களைத் தேடல் சில சந்தர்ப்பங்களில் வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறது. எஸ்ரா பவுண்டு எனும் அமெரிக்கக் கவிஞர் மத்திய கால பிரான்ஸ் நாட்டுக் கவிதைகளை ஆராய்ந்ததில் அவருடைய சொந்தப் படைப்பில் சிறப்பான பரிமாணங்கள் தோன்றின. (அமெரிக்க வெள்ளையர்களுக்கு அவர்களுடைய மண்ணிலேயே மிகப் புராதனமான வேர்கள் கிடைப்பது அசாத்தியம். ஐரோப்பிய வேர்களை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் இருப்பதைப் புரிந்துகொள்ள முடியும்.)



வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்" ஆங்கில நாவல் இலக்கியத்தின் பாதிப்பால் தமிழில் தோன்றிய முதல் முழுநீள புனைகதைப் படைப்பானாலும் அதில் இந்திய வேர்களை எளிதில் உணர்ந்துகொள்ள முடியும். வேதநாயகம்பிள்ளை அவர்கள் நாவலின் இறுதியில் 'பலசுருதி'யும் எழுதியிருக்கிறார். எல்லாமே இயல்பாக இருக்கும், இயல்பாக இருக்கும் என்று கூறுவதை விட, 'பிரதாப முதலியார் சரித்திர'மும் அதைத் தொடர்ந்து வந்த பல நவீனப்படைப்புகளும் அவற்றின் உந்துதல் எங்கிருந்து வந்தாலும் தமிழ் வெளிப்பாட்டில் இம்மக்களுக்குரிய ஆதார சுருதியை உட்பொதிந்தே இருந்து வந்திருக்கின்றன. மிக அந்நியமான சம்பவச் சேர்க்கை கொண்டிருந்த துப்பறியும் நவீனங்களில் கூடக் கதை மாற்றல் நெருக்கடியின்போது வெளிப்படுத்தும் உரையாடலோ எண்ணமோ இந்திய வேர்களுக்குரியதாகவே இருக்கும்.

படைப்பாளியின் இயல்பான தன்மையின் வெளிப்பாடாக இருக்கும் போதுதான் கலை ஒருங்கிணைந்த படைப்பாக உருவாகிறது. வலுக்கட்டாயமாக எந்த ஒரு போக்கையும் படைப்பில் இருத்தும்போது அது தனித்து நிற்பதோடு படைப்பின் மொத்த உருவ அமைதியையும் பாதித்துவிடுகிறது. மேலும் நாம் நம்முடைய வேர்கள் உள் உண்ணுவதும் ஒரு வகை கால நிர்ணயிப்புக்கு உட்பட்டதுதான். நம் அன்றாட வாழ்க்கையில் கணக்கில்லாத அம்சங்களில் வேர்களிலிருந்து விலகிப் போயிருக்கிறோம். விலகிப்போயிருக்கிறோம் என்பதை விட நாம் சமுதாயவியல் பரிணாமத்துக்கு உட்பட்டிருக்கிறோம் என்று கூறுவது பொருத்தமானதாகும். நாம் வசிக்கும் இல்லங்கள் பயன்படுத்தும் எரிபொருள், உண்ணும் உணவு, உடுக்கும் உடை, தொழில், பொழுதுபோக்கு, திருமணம், குழந்தை வளர்ப்பு, கல்வி புகட்டல் எனப் பல அடிப்படைக் கூறுகளில் கடந்த நூறு இருநூறு ஆண்டுகளிலேயே ஏராளமான மாற்றங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அரசு என்பதே இந்த நூறு ஆண்டுகளில் அமைப்பிலும் பணிகளிலும் எவ்வளவு மாறியிருக்கிறது.

நீண்ட தொடர்ச்சியுடைய கலாச்சாரம் மிக நுண்ணிய வகையில் அதன் வேர்களை உயிர்ப்பித்துக் கொண்டே இருக்கும். பரிணாமத்திற்கு மாறாக வேர்களைச் செயற்கையாக வற்புறுத்தும் முயற்சிகள் இன்றைய வாழ்க்கைக்கு அந்நியமாகவே இயங்கும் யதார்த்தத்திற்கு விலகியிருக்கும் எந்த இயக்கமும் மனித முன்னேற்றத்துக்கு வழிகோலாது.

# தமிழகத்தில் களிமண் உருவங்கள்- தோற்றமும், வளர்ச்சியும்

- நடன காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழகம் கலை, கைவினைத் தொழில்களின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் உன்னத நிலை பெற்று விளங்குகிறது. நாகரிக வளர்ச்சியோடு கலை, கைத்தொழில் ஆகியனவும் வளர்ச்சியினையும், நேர்த்தியினையும் பெற்றன. பிற கலைகள் அனைத்திற்கும் அடிப்படையாகவும், அவற்றின் வளர்ச்சிக்கும் உயர்விற்கும் உறுதுணையாகவும் அமைந்தது ஓவியம். அதுபோலக் கல் ஆயுதங்கள் செய்தல், கைவினைத் தொழில்களுக்கு அடிப்படையாக அமைந்தது. வேட்டையாடுவதற்காகக் கல்லிலும், மரத்திலும், எலும்பிலும் ஆயுதங்கள் செய்தலும், உணவு சமைப்பதற்கும், தானியங்கள் சேகரிப்பதற்கும், மட்பாண்டங்கள் வனைதலும் வரலாற்றுக்கு முற்பட்ட மனித சமுதாயத்திற்கு அடிப்படைத் தேவைகளாக இருந்தன. இவை தவிரப் பாறைகளிலும் மட்கலங்களிலும் ஓவியங்கள் தீட்டுவதையும் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கின்றனர். இன்னும் குறிப்பாகச் சொல்வோமேயானால் இறந்தவர்களை மண்ணுள் பாதுகாப்பாகப் புதைக்கப் பயன்படுத்திய சவப்பெட்டிகளைக் கூட ஆடு, குதிரை வடிவங்களில் செய்தமைத்துள்ளனர். மேலும் ஈமத் தாழிகளின் மேல்மூடிகளில் பறவை, விலங்கு உருவங்களை அமைத்து மகிழ்ந்திருக்கின்றனர். எனவே சுடுமண் உருவங்கள் செய்யும் கலை பெருங்கற் காலத்திலேயே தோன்றிவிட்டது எனலாம். சங்க இலக்கியங்களான திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவற்றில் 'மணிமான்புனை பாவை', 'மண்ணீட்டாளர்' போன்ற சொற்கள் சுடுமண் உருவங்களையும், களிமண் கைவினைஞர்களையும் குறிக்க எடுத்தாளப்பட்டுள்ளன.

மேற்காணும் கருத்துக்களுக்கு வலிமை சேர்ப்பதாகத் தருமபுரி மாவட்டம் கடத்தூரில் கிடைத்துள்ள ஒரு சுடுமண் பெண் உருவத்தையும், இரண்டு ஆண் உருவங்களையும் குறிப்பிட வேண்டும். தமிழாசிரியர் திரு.புது.பொ.வெங்கடராமன் அவர்கள் ஒத்துழைப்புடன் இச்சுடுமண் உருவங்கள் கண்டறியப்பட்டன. மேற்கூறிய மூன்று உருவங்களில் இரண்டு நல்ல நிலையிலும் மற்றொன்று தலை தவிர்த்துப் பிற பகுதிகள் சிதைந்தும் காணப்படுகின்றன. தவாலிகர் என்பார் அவற்றைப் பற்றித் தாம் எழுதிய விரிவான கட்டுரையில் களிமண்ணோடு தேவைக்கு அதிகமான அளவு மணலும் பக்குவமான கலவைக்கேற்ற பொருட்களும் கலந்து செய்யப்படுவதால் உருவங்களில் ஒருவிதக் கட்டுமானம் இழையோடுகிறது என்கிறார். மேலும் இம்மண் சிற்பங்கள் பற்றி அவர் கூறியுள்ள கருத்து அப்படியே இங்கு தரப்படுகிறது. "பெண் உருவங்கள் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளது. அவ்வுருவத்தில் வலக்கை மணிக் கட்டிலிருந்து உடைந்தும், இடக்கை முழங்கை வரை உடைந்தும் காணப்படுகின்றன. கால்களில் முழங்காலுக்குக் கீழ் காணப்படவில்லை. இவ்வுருவம் முழுதும் கையால் செய்யப்பட்டுள்ளது. உறுப்பமைப்பில் சப்பையான மூக்கும், குறுகலான பெரிய அல்லது நீள்வட்டத்தில் கீறியது போன்ற கண்ணும் குறுகிய முன்தலையும் தனித்தன்மைகளாகக் கருதத்தக்கன.

இவ்வுருவம் இதுகாறும் அறியப்பட்டுள்ள இந்தியச் சுடுமண் கலைப்பாணிகள் எதிலும் சாராது தனித்தன்மை வாய்ந்த பழைய சுடுமண் உருவமாக உள்ளது. இதன் பாங்கு கி.மு.5-3ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தொன்மை வகைபோல் காணப்பட்டாலும் அணிந்துள்ள முறுக்குப் பதக்கத்தைக் கொண்டு இதன் காலத்தை கி.மு.முதலாம் நூற்றாண்டாகக் கருதலாம். இவ்வகைப் பதக்கத்தின் பிறப்பிடம் மத்திய ஆசியா. இதனை இந்தியாவில் அறிமுகப்படுத்தியவர்கள் சித்தியர்கள்.

2. ஆண் உருவம் அமர்ந்த நிலையில், கால்களை முன்புறம் நீட்டியும், கைகள் மேலே தூக்கப் பெற்றும் காட்டப்பட்டுள்ளன.



*'முத்தோஸ்' . மேலப்பெரும்பள்ளம் - பூம்புகார் - கி.பி.3ஆம் நூற்றாண்டு*



*முற்காலச் சோழர் கால ஆணின் தலை உருவம் . கி.பி.9. 10ஆம் நூற்றாண்டு - பூம்புகார்.*

இதன் முக அமைப்புப் பெரிதும் சிதைந்திருப்பினும் இருக்கக் கூடியவற்றின் அமைதியைக் காணும்போது நீண்ட மூக்கும், மெல்லிய உதடுகளும், கீறினாற் போன்ற குறுகிய கண்களும், மேடான கன்னத்தின் எலும்புகளும் காணப்பெறுகையால் இவ்வுருவம் அயல்நாட்டைச் சார்ந்தது என்றே கருதத் தூண்டுகிறது. அடர்த்தியான மீசையும், தாடியும் கொண்டு காட்சியளிக்கிறது. தலையில் அணிந்துள்ள தலையணி தலைக்கவசமாக இருத்தல் வேண்டும். மேலும் கன்னத்தைப் பாதுகாக்கும் பட்டைவார், முற்காலச் சாதவாகனர் (கி.மு.முதலாம் நூற்றாண்டு) காலத்ததாக, அஜந்தாவில், பத்தாம் எண் குடைவரையில் உள்ள ஓவியத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. இவ்வுருவத்தில் உள்ளங்கைகளும், கணுக்கால்களும் சிதைந்து விட்டன. சிறு குழிவான உந்தி தெளிவாகக் காணப்படுவதால் மேலாடை இன்றிக் காணப்படுகிறது எனலாம். ஆனால் கீழ் ஆடையற்ற மேனி அல்ல என்பதும் புரிகிறது. இவ்வுருவத்தின் உறுப்பமைதி கொண்டு பண்டைய சித்தியன் படைவீரன் எனக் கொள்ளலாம்.

ஆண் தலை மட்டும் காணப்படும் இதன் அகன்ற தட்டையான மூக்கு, தடித்த உதடுகள், அகன்று துருத்திய கண்கள் ஆகியன அச்சமூட்டுவதாக உள்ளன. அகன்ற கரையுடன் கூடிய தலையணி அணிந்துள்ளது. உயரமான தலையணியாக இருந்திருத்தல் வேண்டும். ஆனால் உடைந்துள்ளது.

இது தற்காலத்திய குல்லா என்பதினின்றும் பெரிதும் வேறுபட்டதல்ல. வடமொழியில் 'குல்ஹா' என்று வழங்கப்பெறும் சொல், பர்சீய மொழியில் உள்ள 'கொல்' என்பதிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. இவ்வுருவம் அயல்நாட்டினனாகவே இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சிலையின் உருவமைதி அடிப்படையில் இதனைக் கிறித்து சகாப்தத்தின் முதல் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

மேலே விவரிக்கப்பட்ட சுடுமண் பொம்மைகள் தென்னிந்தியப் பெருங்கற்காலச் சின்னங்களில் இதுகாறும் கிடைத்தவற்றுள் தனித்தன்மை வாய்ந்தவையாகவும், நீலகிரி பெருங்கற் சின்னங்களின் மண்சிற்பங்களைவிட பழமையானதாகவும் உள்ளன. இரண்டு ஆணுருவங்களுமே அயல்நாட்டு மனித இனம் சார்ந்ததாகப் பெரும்பாலும் சித்திய இனத்தவராகக கருத இடந்தருகின்றன.


இதன் மூலம் பெருங்கற் சின்னங்களை அமைத்தவர்கள் இடுகுழியுள் இடும் மற்ற பொருட்களுடன் சுடுமண் பொம்மைகளையும் வைத்துப் புதைத்துள்ளனர் என்ற முடிவிற்கு வரலாம். பெருங்கற் சின்னங்களின் காலத்தை அறியக் களத்தூர் சுடுமண் உருவங்கள் உதவி புரிகின்றன. அவற்றின் காலம் கி.பி.1-2ஆம் நூற்றாண்டு.

சங்க காலப் பாண்டியரின் துறைமுகப் பட்டினமான கொற்கையில் கிடைத்துள்ள சுடுமண் உருவங்களுள் பெண்ணின் முண்டப் பகுதி கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. அதன் இடைப்பகுதி கருவுறுவதற்கு ஏற்ற வகையில் பருத்து காணப்படுகிறது. குழந்தைப் பிறப்புக்கு முக்கியத்துவம் தந்து இவ்வுருவம் அமைக்கப்பட்டுள்ளதால் வளமை வழிபாடு வழக்கில் இருந்துள்ளது என்பதை இதனால் உணரலாம்.

அண்மைக் காலங்களில் கிடைத்துவரும் கி.மு.2,1ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த பல சான்றாதாரங்கள் மண்பாவை செய்யும் கலை வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் பரவலாக இருந்திருக்கிறது என்பதை மெய்ப்பிக்கின்றன.

மலையமான், சோழர், பாண்டியர் ஆகியோரின் பண்டைய துறைமுகங்களான அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், அழகன்குளம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைத்துள்ள சுடுமண் பொம்மைகளால் கிறித்து சகாப்தத்திற்கு முன்பிருந்தே களிமண் உருவங்கள் செய்யும் தொழில் சிறப்புற்று இருந்துள்ளது என்பதை அறிகிறோம். அரிக்கமேட்டில் கிடைத்துள்ள கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு சுடுமண் பொம்மைகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றைவிட மேலானதாகக் குறிப்பிடத்தக்க ஒன்று அழகன்குளத்தில் கிடைத்துள்ளது. கி.மு.முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.முதல் நூற்றாண்டு வரை எனக் கொள்ளலாம். மேற்கூறிய அனைத்துமே பெண் உருவங்களாகும். அரிக்கமேட்டில் கிடைத்துள்ள இரண்டு உருவங்களுள் ஒன்று தமிழ்நாட்டுப் பாணியில் புடவை உடுத்தி, பழமோ அல்லது விதையோ நிரம்பிய கூடையை இடக்கையில் ஏந்தி, வலக்கையைத் தொங்கவிட்ட நிலையில் காட்சியளிக்கின்றது. மற்றோர் உருவம் வடநாட்டுப் பாணியில் மேலாடை வலது தோளிலிருந்து இடது கையின் கீழ் செல்வது போலவும், இடுப்புக்குக் கீழ் ஆடை சாய்வான இணைகோடுகளாகக் காட்டப்பட்டும் உள்ளன. இடையின் கீழ்ப்பகுதியின் நடுவே நீண்ட குஞ்சம் தொங்குகின்றது.

**ஆப்பிரிக்க நாட்டுப் பானை ஓட்டின் மீது பெண்களின் உருவங்கள் - அழகன் குளம் - கி.மு.2ஆம் நூற்றாண்டு.**





*தாயும் - சேயும்.*
*இந்தோ - கிரேக்க பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.*
*கி.மு.2 - 1ஆம் நூற்றாண்டு - அழகன் குளம்*

அழகன்குளத்தில் கிடைத்துள்ள சுடுமண் உருவம் கிரேக்கக் கலையமைதியிலான தமிழ்நாட்டுப் பெண்ணாகக் காட்சி தருகின்றது. அவள் இடுப்பில் குழந்தையை ஏந்தியுள்ளாள். அக்குழந்தையின் கால்கள் கிரேக்க மரபினைத் தெளிவாகச் சுட்டுகின்றன. ஆனால் பெண்ணின் ஆடையமைப்பு உள்நாட்டுப் பாணியை வெளிப்படுத்துகிறது. இச்சுடுமண் உருவத்தில் இழைந்தோடும் கலைநயம் அழகன்குளம் மட்கலனையே ஒத்ததாக மிகவும் மென்மையாகவும், நெகிழ்வாகவும் அமைந்துள்ளது. இவ்வாண்டு நிகழ்த்தப்பெற்ற அகழாய்வில், ஒரு பானையோட்டில் இரு பெண் உருவங்கள் அச்சு குத்தப்பெற்ற முறையில் காணப்பெறுகின்றன. இவற்றின் கலையமைதி ஆப்பிரிக்க நாட்டுக் கலையமைதியோடு ஒப்பிடத்தக்கதாய் உள்ளன. இவை கி.மு.2 அல்லது முதல் நூற்றாண்டினதாகக் கொள்ளலாம்.

இதுகாறும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மேற்கூறிய உருவங்கள் அனைத்துமே எந்தவொரு அடிப்படையிலும் சாராது பொதுநிலை சார்ந்தவையே என்று கொள்ளலாம். கிறித்து சகாப்தத்திற்கு சற்று முற்பட்ட காலந்தொடங்கி இதுகாறும் கிடைத்துள்ள களிமண் உருவங்களை 'சமயம் சார்ந்தவை' என்றும் 'சமயம் சாராதவை' என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

காவிரிப் பூம்பட்டினம் அகழாய்வில் இவ்விரு வகை சார்ந்த உருவங்களும் கிடைத்துள்ளன. சமயம் சார்ந்தவைகளாகச் சில கடவுளர் உருவங்களும் கிடைத்துள்ளன. இவை தவிரச் சில விலங்குகள் மற்றும் பறவைகளின் உருவங்களும் கிடைத்துள்ளன. இவை கி.பி.2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை வெவ்வேறு காலங்களைச் சார்ந்தவை.

1960ஆம் ஆண்டு புகாரில் நடைபெற்ற அகழாய்வில் கிடைக்கப்பெற்ற இரண்டு சுடுமண் பொம்மைகள் ஆந்திரத்திலுள்ள நாகார்ச்சுன கொண்டா கலைப்பாணியைப் பெரிதும் பிரதிபலிப்பதாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாம். ஆணின் உருவம் வில் போன்ற தலையணியுடன் கூடிய தலைப்பாகை அணிந்துள்ளது. அத்தலைப்பாகையின் அடிப்பக்க மடிப்பில் அலங்காரமான அணி போன்று காணப்படுகிறது. பெண்ணின் உருவம் சுருண்ட கூந்தலைத் தன் இரு காதுகளின் புறமும் காணுமாறு அணிகளுடனும், கழுத்தணி, ஸ்தான சூத்திரத்துடனும் காட்சியளிக்கிறது. இவ்விரு உருவங்களும் சமயம் சாராக் கலைச் சான்றுகளாய் உள்ளன.

கி.மு.2 முதல் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்ததான தெய்வ நேர்ச்சிக்காக விடப்பட்ட புத்தபாதமும், அவலோகி தேசுவரரின் தலையும் சமயம் சார்ந்தவற்றுக்கு எடுத்துக் காட்டுகளாம். இங்கு முருகன் அல்லது இயக்கனுடைய தலைப்பகுதியும் மேற்பரப்பாய்வில் கிடைத்துள்ளது. மேலப் பெரும்பள்ளம், திருக்கோயிலூர் ஆகிய இடங்களில் முதுமக்கள் தாழியின் வெளிப்புறம் ஒட்டு வேலையாகச் செய்யப்பட்ட உருவங்களும் கவனத்தை ஈர்க்கத்தக்கவையாகும். இவற்றுள் பூம்புகார்த் தாழி ஒட்டுவேலை கி.பி.3ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. திருக்கோயிலூர்ச் சிற்பம் கி.பி.4-5ஆம் நூற்றாண்டினது.

விழுப்புரம் மாவட்டம் சேந்தமங்கலம் அகழாய்வில் தனித்தன்மை கொண்ட களிமண் உருவம் ஒன்று கண்டறியப்பட்டது. அதில் ஆணின் உருவமும், பெண்ணின் உருவமும் புடைச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இரண்டும் ஒரு காலை நேராக வைத்தும், ஒரு காலைச் சற்று மடக்கியும் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளன. இவை கி.பி.2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மிதுனச் சிற்பங்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதே இடத்தில் ஆணின் தலையற்ற உடற்பகுதியும் கிடைத்துள்ளது. இதன் உருவமைதி கொண்டு இதனைக் கி.பி.1-2ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

சங்க காலத்தினையொட்டி தமிழகத்தில் சமணச் சமயம் சிறப்புற்றிருந்தது. எனவே அச்சமயத்தைச் சார்ந்தவர்கள் தம் வழிபாட்டிற்காக இயக்கன், இயக்கி உருவங்களைப் படைத்திருக்கின்றனர்.

கோவை மாவட்டம் போளுவாம்பட்டி அகழாய்வில் ஒரு சில மிக நேர்த்தியான இயக்கன் உருவங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இதுபோன்று சில பொம்மைகள் காவிரிப்பூம்பட்டினத்திலும் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை கி.பி.7-8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவ்வுருவங்கள் இருகால்களை நீட்டித் தொங்கவிட்டு, அதாவது குதிரைமேல் அமர்ந்தது போன்ற நிலையில், தடித்த தலைப்பாகை அணிந்து காணப்படுகின்றன. இத்துடன் தாயும் சேயும் ஆக உள்ள உருவங்கள் தமிழகத்தில் கணிசமான அளவில் கிடைத்துள்ளன. இவை யசோதையும் கண்ணனுமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆதலால் இக்காலக் கட்டத்தில் சமணத்தோடு வைணவமும் உயர்நிலையில் இருந்துள்ளது என்று கொள்ளலாம்.



*பிற்காலச்சோழர்கால நந்தி உருவம் - கி.பி.12- 13ஆம் நூற்றாண்டு - பூம்புகார்.*

சேந்தமங்கலத்தில் கிடைத்துள்ள தவழும் கண்ணன், மனித உருவங்கள், பறவைகள், விலங்குகள் ஆகிய சுடுமண் உருவங்கள் கி.பி.13-14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவை இடைக்காலத்தின் பிற்பகுதிக் கலைத்தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஈரோடு மாவட்டம் மண்மங்கலம் கோட்டை மேட்டில் வட்டமான ஆசனத்தில் அமர்ந்த நிலையில் காணப்படும் மிக அழகிய களிமண் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் இரண்டு பெண்ணுருவங்கள் இடையில் குழந்தையை ஏந்தியும், மூன்றாவது உருவம் குழந்தை இன்றியும் காணப்படுகின்றன. இவை பற்றி எழுதிய அப்துல்மஜீத் இவற்றின் காலம் கி.பி.11 முதல் 13ஆம் நூற்றாண்டுகளெனக் கணித்துள்ளார். அவை மூன்றனுள் ஒன்று கி.பி.11ஆம் நூற்றாண்டினது என்றும் பிற இரண்டும் கி.பி.16,17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கொள்ளலாம்.

தருமபுரி மாவட்டம் பனையகுளம், கொளகத்தூர் ஆகிய இடங்களில் தற்செயலாக இரண்டு வகையான சுடுமண் உருவங்கள் கண்டறியப்பட்டன. இவையனைத்தும் பெண்ணுருவங்களே. இவற்றின் காலம் கி.பி.2 முதல் 8ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுவதால் இவை வரலாற்று நோக்கில் மிகவும் அரிய கண்டுபிடிப்புகளாகக் கொள்ளப்படுகிறது. பனையகுளத்தில் ஒரு பெண்ணின் உருவம் முகத்திலிருந்து வயிறு வரை உள்ள பகுதிதான் கிடைத்துள்ளது. இதன் கமையமைதி கொண்டு காலத்தால் முற்பட்டதாக அதாவது கி.பி.2ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. கொளகத்தூரில் தலை மட்டுமே கிடைத்துள்ள உருவத்தின் முக அமைதி கொண்டு இது ஆப்பிரிக்கப் பெண்ணை ஒத்திருப்பதாகக் கூறலாம். இதுவும் அதே காலத்தைச் சார்ந்தது.

மீதமுள்ள உருவங்களுள் பனையகுளம் பெண்ணின் மார்பளவுள்ள உருவம் பல்லவர் கால உருவமைதியிலேயே காணப்படுவதால் இதனைக் கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

அடுத்து இடைக்காலத்திற்கு வருவோமானால், அண்மையில் பூம்புகாரில் கண்டெடுக்கப்பட்ட முற்காலச் சோழர் கலைப்பாங்கிலுள்ள ஆணின் தலைப்பகுதியைக் குறிப்பிடுதல் வேண்டும். இந்தத் தலைப்பகுதியை மட்டும் கொண்டு இதன் முழு உருவமும் எத்தகையதாக இருந்திருக்குமென ஊகிக்க முடிகிறது. முகம் மிகவும் அமைதியாகவும் இளமையாகவும் உள்ளது. இளநகை தவழும் இதழ்களும், கண்களும், நீண்ட மூக்கும் முற்காலச் சோழர் கலைப் பாணியினைப் பிரதிபலிக்கின்றது. திண்டுக்கல் மாவட்டம் அரவக் குறிச்சியில் குழந்தையை இடுப்பில் ஏந்திய தாயின் உருவம் அண்மையில் கிடைத்துள்ளது. இதுவும் கி.பி.10-11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. திருமலை நாயக்கர் அரண்மனையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கொந்தகைக் களிமண் உருவங்கள் அழகிய வேலைப்பாட்டுடன் காட்சி தருகின்றன. அளவில் பெரியதாகவும், கருஞ்சிவப்பு நிறமாகவும், உறுதியாகவும், உருண்டு திரண்டும் உள்ளன. இவை கி.பி.13-14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

இவ்வுருவங்களையடுத்து தஞ்சையின் ஒரு பகுதியாகிய செக்கடிமேட்டில் கிடைத்த சுடுமண் உருவங்களை இங்குக் குறிப்பிடவேண்டும். இவ்வுருவங்களுள் கணேசரும், வேணுகோபாலரும், காளை வாகனமும் மதச்சார்புடையவை என்று பிரிக்கலாம். இவற்றின் கலையமைதி கொண்டு கி.பி.17-18ஆம் நூற்றாண்டு என்று கூறலாம்.

மேலே கூறப்பட்டவற்றைக் கொண்டு பார்க்கையில் பெருங்கற்காலத்திலே களிமண் உருவங்கள் செய்யும் பழக்கம் தோன்றிவிட்டது என்பது தெளிவாகிறது. அக்கால கட்டத்தில் இயற்கைப் பொருட்களான பறவைகள், விலங்குகள் மட்டுமே செய்யப்பட்டன. கிறித்து சகாப்தத்திற்குச் சற்று முன்னும் பின்னும் களிமண் கைவினைத் தொழிலில் மதச்சார்புடைய உருவங்களும் புகுத்தப்பட்டன. அவற்றுள்ளும் பௌத்தமத உருவங்களே முதன்மை பெற்றிருந்தன. வரலாற்றுக் காலந்தொடங்கி இந்துமதக் கடவுளர் உருவங்களும் இடம் பெறலாயின.

இடைக்காலத்தில் தவழும் கண்ணன் போன்றவை மக்கள் மனதைக் கவர்கின்ற நிலை பெற்றிருக்கின்றன. மக்கள் தாங்கள் விரும்பி வழிபடும் தெய்வங்களை ஏராளமாகப் படைக்கத் தொடங்கிவிட்டனர். வரலாற்றுக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் கணேசர், வேணுகோபாலர் போன்ற தெய்வங்களும் தமது வாகனங்களுடன் படைக்கப்படலாயின.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் சிறுதெய்வங்களுக்குச் சுடுமண் உருவங்கள் செய்யப்படுவது இன்றும் வழக்கத்திலுள்ளது. அங்கு மதுரைவீரன், அய்யனார் கோயில்களின் முன் பெரிய அளவில் குதிரைகள் செய்து வைக்கப்படுகின்றன. செம்பு, மரம், தந்தம் ஆகியவற்றால் செய்யப்படும் உருவங்களுக்கு அடிப்படையாக அமைவது களிமண் உருவக்கலையே என்றாலும், நாளடைவில் உயர்தட்டு மக்கள் சுடுமண் கலையை ஆதரிப்பது அரிதாகிவிட்டது. ஆனாலும் இம்மரபுவழி உன்னதக் கலைக்குக் கிராமிய மக்களின் பேராதரவு இன்னமும் இருந்து வருவது கண்டு உளம் பூரித்தெழுகிறது. ★

# தனிமரம்

பாவண்ணன்

ஒரு வகையில் குடும்பத்துக்கு அது பெருமை. இன்னொரு வகையில் வீண்வேலை. ஊரோடு இருக்கிற ஆசையில் ராணுவத்தில் ரிட்டயர்மெண்ட் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த கோபாலசாமி கையோடு ரத்தனையும் அழைத்து வந்தார். பங்களாதேஷ் யுத்தம் முடிந்திருந்த நேரம் அது. ரத்தனுக்கு முட்டிக்குக் கீழே ஒருகால் இல்லை. குண்டு பாய்ந்ததில் எடுத்துவிட்டார்கள். ராணுவ ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய் இருந்த சமயத்தில் பீகாா்க்குள் புகுந்த கங்கை வெள்ளம் அவர் கிராமத்தையே அடித்துக் கொண்டு போய்விட்டது. பலியான எழுநூறு சொச்ச உயிர்களில் அவர் அம்மா, அப்பா, மனைவி, மகள் எல்லாரும் அடக்கம். மூணு மாசத்துக்குப் பின் ரிட்டயர்மெண்ட் வாங்கிக் கொண்டு முடமான காலோடு போய்ச் சேர்ந்தபோது பார்த்துப் பேசக்கூட யாரும் இல்லை. சிதைக்கப்பட்ட பிரதேசம் போலக் கிடந்தது கிராமம். சொல்லி அழுவதற்காவது துணை வேண்டுமேயென்று முகாமுக்குத் திரும்பிய ரத்தனுக்கு ஆறுதல் சொல்லி அழைத்து வந்து குடும்பத்தோடு வைத்துக்கொண்டார் கோபாலசாமி.

ராணுவத்தில் கிடைத்த பணம் நாற்பதாயிரத்துச் சில்லறையைக் கோபாலசாமியிடம் கொடுத்துவிட்டார் ரத்தன். அவருக்குச் சொந்தமான கோழிப் பண்ணை ரத்தனின் பணத்தில் மேலும் கொஞ்சம் விருத்தியானது. கூடமாட முடிந்தவரைக்கும் எல்லாக் காரியங்களிலும் ஒத்தாசையாய் இருந்தார் ரத்தன். அவரைச் சொந்தத்தம்பி போலப் பார்த்துக்கொண்டார் கோபாலசாமி. இருபது வருஷ காலத்துக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. கோபாலசாமியும் அவர் மனைவியும் அடுத்தடுத்து இறந்து போனார்கள். அதற்கப்புறம் பிரச்சனை தொடங்கியது.

ஆண் வாரிசு இல்லாத வீட்டுக்குக் கண்டமங்கலத்தில் இருந்து குடும்பப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள மூத்த மருமகன் என்கிற அந்தஸ்தோடு வந்து சேர்ந்தான் வீரப்பன். ஒரு டெம்போவில் கட்டில், அலமாரி, தட்டுமுட்டுச் சாமான்களோடு வந்தவன் குடும்பத்துக்கும் பண்ணைக்கும் உபகாரமாக இருப்பான் என்றுதான் ரத்தன் நம்பினார். பெரிய பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போகிற பிள்ளை என்று உபசரிக்கவும் செய்தார். ஆனால் பண்ணைக்குள் நுழைந்து கோழி எத்தனை, முட்டை எத்தனை, வரவு எவ்வளவு, செலவு எவ்வளவு, என்று கணக்குப் பிள்ளையைக் கேட்கிற மாதிரி அதட்டலாய்க் கேட்டபோது மனம் நொந்து போனார் அவர்.

துறுதுறுப்பான பையன்தான். கையும் காலும் ஒரு நிமிடம் கூட சும்மா இல்லை கட்டி ஆளும் வெறி அவன் ரத்தத்தில் ஓடிக் கொண்டிருந்தது. கொஞ்சம் கறுப்பு. ரேவதிக்கு அவ்வளவாகப் பொருந்தாத ஜோடி. கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலியை மெனக்கிட்டு பல்லிடுக்கில் கடித்துக் கொண்டிருந்தான். தர்மசங்கடமான சூழலுக்குள் விதி தன்னைத் தள்ளிவிட்டதை நினைத்தபடி கண்களை மூடிக்கொண்டு தூணோரம் உட்கார்ந்தார் ரத்தன்.

மறுநாள் ரத்தன் பண்ணைக்குள் நுழையும்போது வீரப்பன் வேலைக்காரச் சிறுவனின் துணையோடு முட்டைகளை எண்ணி எண்ணிக் கூடையில் போட்டுக் கொண்டிருந்தான். ரத்தனுக்கு தூக்கிவாரிப் போட்டது. இதை எதிர்பார்க்கவில்லை அவர். வழக்கம்போல முந்நூறு முட்டைகளைச் சலீம்பாய் கடைக்கு அனுப்பச் சீட்டு எழுதப்போனார். வீரப்பன் அவரைத் தடுத்தான். அப்துல்கரீம் கடையில் இருந்து ஆள்வரும் என்றும், கொடுத்தனுப்பினால் போதும் என்றும் சொன்னான். "இரு, இரு" என்று சொன்னபடி, முன்னால் வந்தார் ரத்தன். ஆண்டாண்டு காலமாய்ச் சலீம்பாய்க்குக் கொடுத்து வரும் வழக்கத்தைச் சொன்னார். "அவனுக்காக நீங்க ஏன் வக்காலத்து வாங்குறீங்க" கமிஷன் ஏதாச்சிம் கெடைக்குதா ஒங்களுக்கு ?" என்று சட்டென்று துடுக்காய்க் கேட்டான் வீரப்பன். ஆடிப்போய் விட்டார் ரத்தன். அரைநிமிடம் வார்த்தையே வரவில்லை. மார்பு படபடக்கத் தான் வலியுறுத்துவதற்கான காரணத்தைச் சொன்னார். கோபாலசாமிக்கும் சலீம்பாய்க்கும் இருந்த நெருக்கத்தைப் பற்றிச் சொன்னார்.

"எங்க மாமா ஒரு அப்பாவி மனுஷன். வெளுத்ததெல்லாம் பாலுன்னு நெனைக்கற ஆளு. அதான் அவர் தலையில எல்லாரும் மொளகா அரச்சாங்க. அந்த சலீம்பாயும் அதுல ஒருத்தன்".

ஓரக்கண்ணால் அவரைப் பார்த்தபடி சொல்லிக் கொண்டே வெளியேறினான் வீரப்பன். அவனுடன் தொடர்ந்து வாதிப்பதா வேண்டாமா என்று குழம்பினார் ரத்தன். படபடப்போடு அக்குள் கட்டையை ஓரமாய்ச் சாய்த்து வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். ஏதோ பறவைகள் கூரையை உதறிக்கொண்டு பறந்தன. காலை வெளிச்சம் மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டே இருந்தது.

வீரப்பன் குரலைப் பெரிதாக்கிக் கொண்டு நின்றபோது அவர் நினைவு கலைந்தது.

"என்ன உட்கார்ந்துட்டே தூங்கறீங்களா ?"

ரத்தன் அசட்டுச்சிரிப்போடு எழுந்திருக்கக் கட்டைக்காகக் கைகளை நீட்டினார்.

"வேற யார் யாருக்கு எவ்வெவ்வளவு அனுப்பணும்னு எழுதி வச்சிருக்கேன். பார்த்து அனுப்பிருங்க.."

"சரி".

"ஊரெல்லாம் ஒன்னேகால் ரூபாய்க்கு முட்ட விக்குது. இன்னும் பழைய முக்கால் ரூபாய்க்கே சலீம்பாய்க்கு நாம ஏன் போடணும் ? நஷ்டப்படறதுக்கா வியாபாரம் செய்யறும் ?"

"அது சரி".

"இன்னம் யாராவது புது பார்ட்டிங்க கெடைக்கறாங்களான்னு பார்க்கறான்".

"சரி".

"வியாபாரத்தை இன்னம் கொஞ்சம் விஸ்தரிக்கலாம்னு நெனைக்கறன். நீங்கதான் ஒத்தாசையா இருக்கணும்".


"சரி".

"பெங்களூருக்குக் கறிக் கோழிங்க அனுப்பலாம்னு ஒரு திட்டம் வச்சிருக்கேன். பின்னால இன்னம் கொஞ்சம் பெரிசா கொட்டா போட்டு அதுக்கும் ஏற்பாடு செய்யலாம்னு நெனைக்கறேன்".

ரத்தனின் பதில் "சரி" என்கிற அளவோடு சுருங்கிக் கொண்டது. தன்னை மீறி அப்படி நிகழ்ந்து விட்டதை அவரே உணர்ந்தார். வீட்டிலும் அவர் உட்கார்ந்த இடத்துக்குச் சாப்பாடு வந்தது. தண்ணீர் வந்தது. வேளா வேளைக்கு டீ வந்தது. ஆனால் மனசு ஓவென்று இருந்தது. கூட உட்கார்ந்து பேச ஆள் இல்லாதது பெரிய மனக்குறை. கதை கேட்கிற கடைசிப்பெண் கூட அருகில் வருவதை நிறுத்திக்கொண்டது வருத்தமாய் இருந்தது. நடுப்பெண்ணும் மூத்தப் பெண்ணும் ஆளைப் பார்த்தால் சிரிப்பது என்கிற அளவோடு நிறுத்திக் கொண்டார்கள். ஏறத்தாழ இருபது வருஷம் தான்இருந்த வீடா இது என்று அவருக்கே ஆச்சரியமாக இருந்தது.

நாளடைவில் பண்ணையின் முகம் மாறியது. கோழிகள் பெருகின. புதுப்புதுத் தாங்கிகள் செய்யப்பட்டன. அவற்றிற்குத் தேவையான தீனிப் பொருள்களைச் சேமித்து வைக்கச் சின்னக் கிடங்கு கட்டப்பட்டது. பெருக்கவும் குப்பைகளைக் கொண்டுபோய்க் கொட்டவும் தனித்தனியே இரண்டு பெண்கள் வேலைக்கு அமர்த்தப் பட்டார்கள். கால்களில் சக்கரம் கட்டிக்கொண்ட மாதிரி சுற்றிக்கொண்டே இருந்தான் வீரப்பன். ஒத்தாசை வேண்டும் என்று அவன் சொன்னது வெறும் சம்பிரதாயமான வார்த்தையாக நின்று போனதை எண்ணி வருந்தினார் ரத்தன்.

ரத்தன் அநேகமாக ஓரம் கட்டப்பட்ட மனிதரைப் போல இருந்தார். உடல் மெலியத் தொடங்கியது. பக்கத்திலேயே இருந்தாலும் கூட யாரும் எதுவும் கலந்து பேசுவதில்லை. வேலைக்காரர்களும் அவரை உதாசீனப்படுத்தத் தொடங்கினர். இனி இவருக்குப் பழைய மரியாதை இல்லை என்பது அவர்களுக்குக் கூட தெரிந்துவிட்டது. இவரால் தம் வேலைக்கு எந்த குந்தகமும் ஏற்படாது என்று புரிந்துகொண்டார்கள். இந்தக் கிழவனை இவ்வளவு தூரம் யார் நொண்டிக்கொண்டு வரச்சொன்னார்கள் என்று குத்திக்காட்டினார்கள். இது தவிரச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் ரத்தனை சீண்டிப் பார்த்துச் சந்தோஷம் கொண்டார்கள். அவரைக் கோபப்படுத்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்தது போலப் பேசினார்கள். ஆனால் ரத்தனின் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட சீற்றத்துடன் வரவில்லை., ஒரு அசட்டுச் சிரிப்பு. "அப்படியா" என்று தலையாட்டல். அட, சும்மா இருங்கய்யா என்று அலுப்பு அவ்வளவுதான் அவர் எதிர்வினை. வீரப்பனும் இந்தக் கும்பலுடன் சேர்ந்துகொண்டான் என்பதுதான் அவருக்குச் சங்கடமாய் இருந்தது.



"ஆத்தோட ஒருத்தி போய்ட்டாங்கறதுக்காக ஆயுசுபூரா சும்மா இருந்துடணுமா ? அந்த ஊர்லியே தகுதியானவளா பாத்து கட்டிக்கறத உட்டுட்டு இங்கு வந்து ஏன் அல்லாடணும் ?"

"அவருதான் ஏதோ மொறைக்கிக் கூப்பிட்டார்ன்னா இவரு எதுக்கு பொட்டிய தூக்கிட்டு ஓடி வரணும் ? நானா இருந்தா கோடி ரூபா கொட்டிக் கொடுத்தாலும் பொறந்த ஊர விட்டு ஒரு அடிக்கூட எடுத்து வைக்க மாட்டேன்".

"கெழத்துக்குத் தலையெழுத்தப் பாரு, எங்கேயோ பொறந்து, எங்கயோ வளந்து எங்கயோ குப்ப கொட்டுது."

"எல்லாவற்றிற்கும் தலையசைத்தபடி உட்கார்ந்திருந்தார் ரத்தன். அவருடைய சிரிப்பும் மௌனமும் ஒற்றை வார்த்தைப் பதிலுமே வீரப்பனுக்கு வெறியை அதிகப்படுத்தியது.

"ஒரு வட நாட்டுக்காரன் தைரியமா வந்து இங்க வாழ்ந்துட்ட... இதே எங்க ஆளுங்க அங்க வந்தா இருக்க உடுவீங்களா... எல்லாம் நாங்க கொடுக்கற தாராளம்... அத நெனச்சிக்குங்க".

அதற்கும் ஒரு சிரிப்புதான் அவர் பதில். மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் உட்கார்ந்திருந்தான் வீரப்பன். ஏதாவது சுடுசொல்லை அவர்மீது உடனடியாய்க் கொட்டித் தன் ஸ்தானத்தை உறுதிப்படுத்தி விடவேண்டும் என்று தவித்தான். பதற்றம் புத்திசாலித்தனமல்ல என அவன் உள்மனம் சொன்னது பல்லைக் கடித்தபடி எழுந்து போனான்.

ரத்தனுக்கு இரவில் தூக்கம் வரவே இல்லை. ஏதோதோ கெட்ட கெட்ட கனவுகள். பெரிய பாழுங்கிணறு. கையையும் காலையும் கட்டிவிட்டுத் தொபீர் என்று தள்ளிவிடுகிறார்கள். அது ஒரு கனவு. இன்னொரு கனவில் சுற்றிலும் அலையடிக்கும் சமுத்திரம் கப்பல் நொறுங்கிப் போக ஒரு மரக்கட்டையைப் பிடித்தபடி நீந்துகிறார் ரத்தன். வேகமாக எழுந்த அலையில் தடுமாறிக் கட்டையின் மீது இருந்த பிடிமானம் நழுவி விடுகிறது. சமுத்திரம் அவரைத் தம் வயிற்றின் ஆழத்திற்கு இழுத்துக்கொண்டே செல்கிறது. மரணம் என்கிற சொல் அடிக்கடி காதுக்குள் ஒலித்தது. வாழ்க்கை மீதும் மனிதர்கள் மீதும் முதன்முதலாக வெறுப்பு ஏற்பட்டது.

விடிந்ததும் விடியாததுமாகப் பண்ணையில் வேலை செய்த சிறுவன் ஓடிவந்து அவரை அழைத்தான் எழுந்து உட்கார்ந்தவரிடம் "ஐயா கூப்படறாங்க" என்றான். மௌனமாக எழுந்து கட்டையை ஊன்றிக்கொண்டு சென்றார் ரத்தன்.

இறைச்சிக் கோழிகளில் கொட்டகைக்குள் நின்றிருந்தார் வீரப்பன். குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தான். முற்றிலுமாக இன்னும் இருள் பிரிந்திருக்கவில்லை. ரத்தனைப்

பார்த்ததுமே "பத்து கறிக்கோழிங்க செத்துக் கெடக்குது என்றான். ரத்தனுக்குப் பகீர் என்றது. அக்குள் கட்டை நழுவும்போல இருந்தது. "என்ன... என்ன சொல்ற நீ... ?"என்று பதறினார். வீரப்பன் தன் சிவந்த கண்களை உருட்டி "பத்துக் கோழிங்க செத்துக் கெடக்குது" என்றான் மீண்டும்.

ரத்தன் படலை விலக்கிக் கொண்டு உள்ளே போய்ப் பார்த்தார். தனியே ஓரமாய் துணிக்கூளம் போலப் பத்துக் கோழிகள் கிடந்தன. குனிந்து தொட்டுப் பார்த்தார். உடல் சில்லிட்டிருந்தது. சின்ன கண்ணாடி குண்டு போல மின்னும் கண்கள் குத்திட்டிருந்தன.

கைக்கட்டையைச் சுவரோரம் சரித்துவிட்டு அப்படியே உட்கார்ந்தார் ரத்தன். ஒரு கணம் என்ன செய்வது என்று புரியவில்லை. மீண்டும் மீண்டும் அவர் பார்வை செத்துப்போன கோழிகள்மீது பதிந்தது. 'கடவுளே' என்று வாய்விட்டுச் சொன்னார். "எப்படி ஆச்சு ?" எனத் தவிப்போடு வீரப்பன் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

"அதான் நானும் கேக்கறன். எப்படி ஆச்சு ?" என்று குரலை உயர்த்திக் கேட்டான் வீரப்பன். அடிபட்டது போல உடல் நடுங்கியது ரத்தனுக்கு. கண்களில் திகைப்பு தேங்கியது.

"என்ன முழிக்கறிங்க ? எப்படி ஆச்சின்னு நீங்கதான் சொல்லணும்" என்று கத்தினான் வீரப்பன்.

"நீ சொல்லியனுப்பனப்பறம் தான் நான் வந்தன். எனக்கு எப்படிப்பா தெரியும் ?" என்றார் ரத்தன்.

"அந்தக் கதையெல்லாம் வேணாம். நேத்து ராத்திரி கோழிங்களுக்கு தீனி வச்சது நீங்க ! தண்ணி ஊத்தனது நீங்க ! உங்களுக்குத் தெரியலன்னா எப்படி... ?"

"சாமி சத்தியமா எனக்குத் தெரியாது" என்று தன் நெஞ்சைத் தொட்டுச் சொன்னார் ரத்தன். தடுமாறி எழுந்து நிற்க முயன்றார்.

"உண்மைய சொல்லிட்டா ஒங்களுக்குக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது. சும்மா வீண் பிரச்சன வேணாம்".

"அபாண்டமா இப்படிப் பேசாத தம்பி. இது எப்படி நடந்துதுன்னே எனக்குப் புரியல".

ரத்தனின் குரல் அடங்கி வரவர, வீரப்பன் குரலை உயர்த்தத் தொடங்கினான். இறுதியில் "என்னைக்கா இருந்தாலும் உண்மை வந்துதான் ஆவணும் அதுமட்டும் ஞாபகத்துல இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு துண்டை உதறிக் கொண்டு போனான் வீரப்பன். போகும்போது குப்பை கூட்டும் பெண்ணிடம் கோழிகளை அப்புறப்படுத்தச் சொன்னான்.

ரத்தன் தனித்து விடப்பட்டார். அவரால் யாரையும் நிமிர்ந்து பார்க்க இயலவில்லை. எல்லாருடைய கண்களிலும் சந்தேகக்கோடு. வீட்டுப் பெண்ணின் பார்வையில் கொஞ்சமும் ஒட்டுதல் இல்லை. அன்று முழுக்க அவர் சாப்பிடவில்லை. திண்ணைக்கு வந்த சாப்பாடு அப்படியே மூடி இருந்தது. மதியத்திற்குப் பிறகு கொஞ்சம் தண்ணீர் மட்டும் குடித்தார். மனம் பாரமாக இருந்தது. வெயில் என்று கூடப் பார்க்காமல் ஏரிக்கரைப் பக்கம் சென்றார். சுழன்று அடிக்கும் காற்றில் ஆலமரத்தடியில் பாறை மீது உட்கார்ந்தார். பக்கத்தில் பட்டுப் போன மரமொன்றிருந்தது. கிளை எதுவுமில்லாத வெறும் கட்டை. அதன் பட்டையை இரண்டு காகங்கள் கொத்திக் கொண்டிருந்தன. பார்த்துக் கொண்டிருந்த ரத்தன் கசப்பான சிரிப்பொன்றை உதிர்த்தார்.

இரண்டு நாள் கழித்து மீண்டும் வீரப்பன் வந்து அவரை அழைத்தான். காலை வேளை, அவருக்குப் பகீர் என்றது. எதுவும் பேசாமல் கூடவே அழைத்துப்போய் பண்ணைச்சுவர் அருகே காட்டினான். ஏழெட்டுக் கோழிகள் இறந்து கிடந்தன. ஓரடி சட்டென்று பின் வாங்கினார் ரத்தன். "இதுக்கு என்ன சொல்றீங்க" ? என்று கேட்டான் வீரப்பன். குழப்பத்திலும் திகைப்பிலும் மூழ்கிய ரத்தனின் பதிலுக்குக்கூட காத்திருக்காமல் போய்விட்டான்.

யோசனையில் ஆழ்ந்தபடி திண்ணைக்குத் திரும்பினார் ரத்தன். இது எப்படி நடக்கிறது என்று அவருக்குப் புரியவே இல்லை. அவர் முதல் சந்தேகம் வீரப்பன் மீதுதான். தொடர்ந்து பண்ணைக்குப் புதுசாக வந்த எல்லார் மீதும் சந்தேகம் படர்ந்தது. ஆனால் வீரப்பனோ ரத்தன்தான் இந்த வேலையை ரகசியமாய்ச் செய்கிறார் என்றும் தனக்கும் அவருக்கும் இருக்கிற பகையைக் கோழி மீது காட்டுகிறார் என்றும் வதந்தி பரப்பினான். குடும்பத்துக்குள்ளும் பண்ணைக்குள்ளும் அவர் தனிமைப் படுத்தப்பட்டார். தன்னை நோக்கிச் சுட்டும் விரல்களை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அன்றும் அவர் பட்டினி கிடந்தார்.

மறுநாள் இரவு தூங்கவே இல்லை அவர். விடியும் நேரம் நெருங்க நெருங்க வீரப்பன் கொண்டு வரப்போகும் கோழிகளின் சாவுச் செய்திக்காக நடுக்கத்தோடு காத்திருந்தார். தனியே எழுந்துபோகப் பயமாக இருந்தது. பண்ணைக்குள் ஓர் இரவைக் கழித்தால் கண்டு பிடித்துவிட முடியும் என்கிற நம்பிக்கையைச் செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தார் அவர். விடியும்போது வீரப்பன் செய்தி அனுப்பி இருந்தான். குப்பை கூட்டும் பெண் வந்து சொன்னாள். அவர் அருகே எட்டுக் கோழிகள் செத்துக் கிடந்தன. அன்று திண்ணையை விட்டு எழுந்திருக்கவே இல்லை அவர் மனசில் வெறுமை.

அடுத்தநாள் மேலும் ஆறுகோழிகள் இறந்து கிடப்பதாய்ப் பையன் வந்து சொன்னான். ரத்தனின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"இப்படி தெனமும் கொஞ்சம் கொஞ்சமா கொல்றதுக்குப் பதிலா எல்லாத்தயும் ஒரே நாள்ல கொன்னுருய்யா. கூண்டோட போய்ச் சேந்துரும். அப்படியே எங்களுக்கும் கொஞ்ச வெஷத்தக் குடுத்துரு. நாங்களும் போயிடுவம். இத்தன வருஷமா ஒன்ன வச்சி காப்பத்தின குடும்பத்துக்கு ரொம்ப பெரிய உபகாரம் செஞ்சிட்ட.."

வீரப்பன் திண்ணைக்கு வந்து சத்தம் போட்டான். அவரால் ஒரு வார்த்தை பேசமுடியவில்லை. அழுதபடி உட்கார்ந்து விட்டார். பகல் முழுக்க அழுகைதான். சாயங்காலமாக அக்குள் கட்டையோடு ஊரைத்தாண்டி நடந்தார்.

இரவு சாப்பாட்டு வேளையின்போது திண்ணையில் ரத்தன் இல்லை. என்கிற சங்கதியை வீரப்பனிடம் வந்து சொன்னாள் வேலைக்காரப் பெண். "எங்க போகும் கெழம்... எங்கனா கோயில் கொளம்ன்னு உக்காந்துட்டு திரும்பி வரும் போ..." என்றான் அவன். கோழி செத்துப் போகத் தொடங்கிய நாளில் இருந்தே அவர் சாப்பிடுவதை விட்டுவிட்டார் என்கிற சங்கதி தெரிந்த பெண்கள் அவ்வளவாய் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.


மறுநாள் வாசல் பெருக்கப் போன பெண் வந்து ரத்தன் வீட்டில் இல்லை என்கிற சங்கதியை வீரப்பனிடம் சொன்னாள். தற்கொலையோ என்கிற எண்ணம் சட்டென எழுந்து அவனை உறைய வைத்தது. அன்று முழுக்க ஏதாவது செய்தி வரும் என்று பதட்டத்தோடேயே இருந்தான். ஏதுவும் இல்லை. அவர் ஊரை விட்டு போய்விட்டார் என்கிற விஷயத்தை அவனால் நம்பவும் முடியவில்லை. இதுதான் எதிர்பார்த்த முடிவா என்று குழப்பமாக இருந்தது.

இரண்டுநாள் கழித்து முட்டைகளை எண்ண அதிகாலையில் பண்ணைக்குச் சென்ற வீரப்பனின் பார்வையில் சுவர் ஓரம் ஐந்தாறு கோழிகள் சுருண்டுக் கிடப்பதைக் கண்டான். பையனிடம் "ஏண்டா அப்படிக் கெடக்குது ?" என்றான். தானே நெருங்கித் தூக்கினான். கோழிகள் இறந்திருந்தன.

★ ★ ★

# மே நாள்

## ஜி. மகேந்திரன்



எந்தத் தொழிலாளியும் சூரியன் உதிப்பதற்கு முன்பாகவோ அல்லது மறைவதற்கு முன்பாகவோ தங்கள் குடும்பத்தினரைச் சந்தித்துக் கொண்டதில்லை. பகல் வெளிச்சத்தில் சந்தித்துக்கொள்ள வாய்ப்பற்றவர் மெழுகுவெர்த்தியின் மங்கலான வெளிச்சத்தில் ஏக்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வார்கள். இப்படியாகத்தான் புதிதாகத் தோன்றி எண்ணிக்கையில் பலவாக உயர்ந்துகொண்டிருந்த தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை அமைந்திருந்தது.

தொழிலாளி வர்க்கத்தின் இந்த அவலங்களைப் பேசுவதற்குப் பல இலக்கியங்கள் எழுந்தன. மார்க்சிம் கார்க்கியின் "தாய்" பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் துன்பம் மிகுந்த சோகங்களைத் தொழிலாளர்கள் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்ளவும் புதிய எழுச்சி கொண்டு வர்க்க உணர்வு பெறவும் உதவி செய்தது.

அழுக்கு நிறைந்த இடத்தில் கரப்பான் பூச்சிகள் வசிப்பதைப் போல, தொழிலாளர்களின் குடியிருப்பு நெருக்கமாகவும், அசுத்தம் நிறைந்ததாகவும் இருந்தது. வயல்வெளிகளில் செழுமையாய் விளைந்து ஆலைக்குள் செல்லும் கரும்பு போலத் தொழிலாளர்கள் ஆலைக்குச் செல்வார்கள். கரும்பு இயந்திரத்தின் பற்சக்கரங்களுக்கிடையே சிக்கி, சாரத்தை எல்லாம் இழந்து சக்கையாக வெளியே தள்ளப்படுவதைப்போல எண்ணெய்ப் பசையும் கரிய புகையும் மிஞ்சிய உடல்களோடு வெளியே தள்ளப்பட்டார்கள்.

மார்க்சிம் கார்க்கியின் "தாய்" தரும் இந்த விபரங்கள் முற்றிலும் உண்மையைத்தவிர வேறு எதுவுமில்லை என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன.

தொழிலாளி வர்க்கத்தின் நூற்றாண்டு குமுறல் ஒட்டுமொத்தமாக அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் 1885 - மே மாதத்தில் வெடித்தது. சிகாகோ நகரம் தொழிலாளர்கள் நிறைந்திருந்தது. சோசலிஸச் சிந்தனை நிறைந்த பல குழுக்களும் செயல்பட்டன. இந்த முக்கியத்துவம்தான் மேதினப் போராட்டங்கள் தோன்றி உலகையே அதிர்ச்சி கொள்ளச் செய்யக் காரணமாகியது.

சிகாகோ நகரின் எழுச்சிக்கு முக்கிய வழிகாட்டுதல் ஐரோப்பாவில் பல ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இயக்கங்கள்தாம். 1848-ல் கார்ல் மார்க்ஸ், பிரடரிக் ஏங்கல்ஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை தொழிலாளர்களைத் தெளிவுபடுத்தியது.

தொழிலாளர்கள் இழப்பதற்கு எதுவுமில்லை - அடிமைச் சங்கிலியை தவிர, ஆனால் வெல்வதற்கு ஒரு புதுஉலகம் காத்திருக்கிறது என்று உணர்ந்தார்கள்.


தொழிலாளர்களின் இரண்டாவது அகிலம், தொழிலாளர்களின் மீதான மூர்க்கத்தனமான சுரண்டல் குறித்து, பெரும்கவலையை வெளியிட்டது. 1866-ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு 8 மணிநேரம் மட்டும் உழைப்பும், 8 மணி நேரம் உறக்கமும், 8 மணி நேரம் ஓய்வும் தேவை என்று தீர்மானத்தை நிறைவேற்றியது. அமெரிக்காவின் சிகாகோ நகரப் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

சிகாகோ நகரில் மே மாதத்தில் நடைபெற்ற போராட்டம் உழைக்கும் நேரத்தை 8 மணியாகக் குறைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியது. மே மாதம் சிகாகோவில் வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடப்பட்டது. மே மாதம் முதல் தேதியில் - 25 ஆயிரம் தொழிலாளர்கள் குவிந்துவிட்டார்கள்.

தீயைப்போல எல்லாத் தொழிற்சாலைகளிலும் பற்றிக்கொண்ட இந்தப் போராட்டக்கனல் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக சிகாகோவிலுள்ள மைக்ரிப்பேர் தொழிற்சாலையில் நடைபெற்றது. வேறு எந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையும் இல்லாமல் வேலைநிறுத்தப் போராட்டத்தை அடக்க, முதலாளிகள் போலீஸை முன் நிறுத்தினர். வன்முறை தலைதூக்கியது. போலீஸ்காரர்கள் துப்பாக்கியால் சுட்டதில் அங்கே 6 தொழிலாளர்கள் இறந்துபோனார்கள்.

சிகாகோ நகரின் ஹே மார்க்கட் சதுக்கத்தில் தொழிலாளர்கள் அனைவரும், காவல்துறையின் இந்தக்கொடுமையைக் கண்டிக்க எழுச்சியோடு கூடிவிட்டார்கள். தொழிற்சங்க அமைப்பு மே-மாதம் 3,4 தேதிகளில் பேரணியும், பொதுக்கூட்டம் ஒன்றும் ங்கு நடத்துவது என்று முடிவு செய்தனர்.

தொழிலாளர்கள் திட்டமிட்டபடி மாபெரும் எழுச்சியுடன் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.



"சுடப்பட்ட குதிரை இறந்த பிறகு, அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வர். ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாளநேர்ந்தால், அவனுடைய குடும்பத்தை யார் காப்பாற்றுவது?"

- அறிஞர் அண்ணா

கடைசியாகப் பேச அழைக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர் தனது உரையை நிகழ்த்திக்கொண்டிருந்த போதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

தொழிலாளர் பெருவெள்ளத்தின் நடுவில் கையால் எறியப்பட்ட ஒரு வெடிகுண்டு வெடித்தது. சிறிது காலத்திற்குப் பின்னர் இந்தக்குண்டை வீசியவன் - காவல்துறையாலும் முதலாளிகளாலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கைக்கூலியே என்பது நிரூபிக்கப்பட்டது. இந்த வெடிகுண்டால் காவல்துறை அதிகாரி ஒருவர் அங்கேயே இறந்துபோனார். கலவரம் வெடித்தது. ஹே மார்க்கெட் சதுக்கமே யுத்த பூமியாக மாறியது. மோதலில் 8 போலீஸ்காரர்களும், 4 தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர்.

இவ்வாறான, தொழிற்சாலைகளின் செயல்பாட்டைத் தொழிலாளர்களைத் தூண்டியதன் மூலம் பெரும் நஷ்டத்தை உருவாக்கியது; சட்டத்திற்குப் புறம்பாக அவர்கள் பேரணி நடத்தியது; பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு என்ற பெயரில் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தது - முதலான பல வழக்குகள் தொழிற்சங்கத்தின் முக்கியத் தலைவர்களின் மீது தொடரப்பட்டது. மொத்தம் 27 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

இந்தக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் முக்கியத் தலைவர்கள் முறையே (1) பார்சன்ஸ் (2) ஸ்பைஸ் (3) ஏங்கெல் (4) பிஷர் (5) விங் (6) பீல்டன் (7) ஷேவ்ரா (8) நிபி - ஆகியோர் அடங்குவர்.

வழக்கு நடைபெற்றதில் முக்கியத் தலைவர்களான இவர்கள்தான், இந்த வன்முறையைத் திட்டமிட்டு நடத்தியவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முதல் ஏழு பேருக்குத் தூக்கு தண்டனையும் பெயர்ப் பட்டியலில் 8-வதாக இடம்பெற்ற நிபிக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

'இது அநீதி' என்று உலகம் முழுவதும் கண்டனக் குரல் கேட்டது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலான கண்டங்களில் எல்லாம் கடும் எதிர்ப்பு வெளிப்பட்டது. தண்டிக்கப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் பலமாக எழுந்தது.

இதில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மற்றொரு விஷயம், உலகின் மாபெரும் சிந்தனையாளர்களான இங்கர்சால், பெர்னார்ட்ஷா - போன்றவர்களும் 'இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்' என்று குரல் கொடுத்தனர். எழுதியும் பேசியும் கூட அவர்கள் இதற்கு ஆதரவு திரட்டினார்கள்.

உலகம் முழுவதும் எழுந்த இந்தக் கண்டன அலையால் அமெரிக்க அரசு சில தலைவர்களின் தண்டனையை மட்டும் குறைக்க முன்வந்தது.

பீல்டன், ஷேவ்ரா - ஆகிய இருவரின் தூக்குத் தண்டனையும் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ஆனால், லிங் என்பவரை - தற்கொலை செய்துகொண்டார் என்னும் ஆதாரங்களைத் தயாரித்து வைத்துக்கொண்டு சிறைச்சாலையிலேயே அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

உலகத் தொழிலாளிவர்க்கம் எவ்வளவுதான் முயற்சி செய்தபோதிலும் நால்வரின் மரணத்தைத் தடுக்க இயலவில்லை. தோழர்கள் பார்சன்ஸ், ஸ்பைஸ், ஏங்கெல், பிஷர் - ஆகியோர் அமெரிக்க அரசால் தூக்கிலிடப்பட்டார்கள்.

1885, மே-1, சிகாகோ நகரில், எழுச்சி கொண்டு தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காக எழுந்த இந்த நாளைத்தான் உலகம் முழுவதும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

1890-ஆம் ஆண்டு, இலண்டனில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் மாமேதை ஏங்கெல்ஸ் கீழ்க்கண்டவாறு கூறினார்:

"ஐரோப்பிய, அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு விட்டார்கள். சட்டப்படி, 8 மணி நேர வேலை என்னும் கோரிக்கையைக் கட்டாயம் பெற்றுவிடுவார்கள்".

1890-ல் மேதினம் ரஷியாவில் கொண்டாடப்பட்டபோது, லெனின் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். "தொழிலாளர்களின் - உலகம் தழுவிய ஒற்றுமையில் கவனம் கொள்ளாது, ஒரு தனிப்பட்ட தேசமோ அல்லது உலகமோ முன்னேற்றம் பெறுதல் என்பது சாத்தியமில்லை" - என்று தமது மேதின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

இந்தியாவில் முதன்முதலில் மேதினம் கொண்டாடப்பட்ட இடம் சென்னைதான் என்பது இப்போது குறிப்பிடத்தக்கதாகும்.

தலைசிறந்த சீர்திருத்தவாதியும், தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்டுமான ம.சிங்காரவேலர்தான் 1923-ல் சென்னை 'ஐ கோர்ட்' கடற்கரையில் மேதின விழாவைக் கொண்டாடியுள்ளார். அப்பொழுது அவரால் தொடங்கப்பட்ட கட்சியின் பெயர் - தொழிலாளர்கள், விவசாயிகள் கட்சி (Labour Kissan Party). இதன் சார்பில்தான் மேதினம் அன்று கொண்டாடப்பட்டது.

அவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில், கலைஞர் அரசு, அண்மையில் கட்டி முடிக்கப்பட்ட சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் கட்டடத்திற்கு "சிங்காரவேலர் மாளிகை" எனப்பெயர் சூட்டியது.

1946-ல் பண்டிதர் ஜவகர்லால் நேரு அவர்களின் தலைமையில் இயங்கிய இடைக்கால அரசுதான் மேதினத்தை இந்தியத் தொழிலாளர்களின் தினமாக அறிவித்தது. ❑

## வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஜீப்புகள்

**வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ரூ.1 கோடியே 81 ஆயிரம் மதிப்புள்ள 32 புதிய ஜீப்புகள் 15. 4. 98 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டன. வருவாய் நிர்வாகப் பலன்கள் மக்களை உடனடியாகச் சென்றடையும் வகையில், அதிகாரிகள் விரைந்து செயல்பட இவை உதவும் என, அவற்றை வழங்கிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி.மனோகரன் அவர்கள் குறிப்பிட்டார்.**

நூல் நயம்

## 📖 தடி வீர சுவாமி கதை & வன்னியராயன் கதை

பதிப்பாசிரியர் : சு.நிர்மலா தேவி

வெளியிட்டோர்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சிஐடிவளாகம், தரமணி,
சென்னை-600 113.

பக்கம்:265 விலை ரூ.55

நாட்டுப்புறக் கதைப்பாடல் சுவடிப் பதிப்புகளில் புகழ்பெற்றவர் நூலாசிரியர். திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள இரண்டு சமூகக் கதைப்பாடல் சுவடிகளைத் தேடிப்பிடித்து எடுத்துவந்து பதிப்பித்திருக்கிறார்; அதுவே இந்நூல்.

★ ★ ★

## 📖 கண்ணீரில் விளைந்த காவியம்

ஆசிரியர் : புலவர் தே.ப.சின்னசாமி

பக்கம்:120 விலை ரூ.23

மறைந்த தன்னுடைய மனைவிக்கே இந்நூலைக் காணிக்கையாக்கியுள்ளார் நூலாசிரியர்; அதுமட்டுமல்ல, இக்காவியம் முழுவதுமே மனைவி என்பவள் எப்படி அமைந்திட வேண்டும் என்பதை விளக்குவதேபோல் அமைக்கப்பட்டிருக்கிறது.

## 📖 மனிதரில் டிசம்பர்கள்

(வாழ்வியல் நாடகம்)

பக்கம்:119 விலை ரூ.23

ஆசிரியர் : ஸ்ரீசவிதா

வானொலிப் போட்டிக்காக எழுதப்பட்ட நாடகத்தை நூல் வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள். தந்தை-மகன் இடைப்பட்ட பாசத்தை, நெருடலை முக்கிய இழையாக வைத்து எழுதப்பட்டுள்ள இதில், சோகமும் நகைச்சுவையும் சமஅளவில் கைகோத்து நிற்கின்றன.

இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர்:
மணிமேகலைப் பிரசுரம்,
4, தணிகாசலம் சாலை, சென்னை-600 017.

## 📖 அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாறு

(1776 முதல் 1945 வரை)

ஆசிரியர் : பி.எல்.ராஜேந்திரன்

வெளியிட்டோர் : உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டித் தெரு,
மண்ணடி, சென்னை-600 001.

பக்கம்:150 விலை ரூ.35

எளிய தமிழ்நடையில், எம்.ஏ. (வரலாறு) இரண்டாம் ஆண்டு படிக்கின்ற மாணாக்கர்க்கும் உதவுவதாக எழுதப்பட்டுள்ளது இந்நூல். இரண்டாம் உலகப் போர் வரை, அமெரிக்காவை ஆண்டவர்களின் படங்கள் இடம் பெற்றிருப்பது ஒரு சிறப்பு அம்சம்.

★ ★ ★

## 📖 காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்-4

ஆசிரியர் : விஷ்ணு பிரபாகர்
தமிழாக்கம் : விஜிகிருஷ்ணமூர்த்தி

வெளியிட்டோர் : காந்திய இலக்கியச் சங்கம்,
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
மதுரை - 625 020.

பக்கம்:113 விலை ரூ.10

காந்தியடிகளாரின் தனிமனிதப் பண்பு, செயலாற்றல் ஆகியவற்றை விளக்கக் கூடிய பலநிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது. சொல்லவந்த செய்திகளின் தரம் கெடாமல் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.



# உணவு - கூட்டுறவுத் துறையின் ஒப்பற்ற பணிகள்

சட்டப் பேரவையில் 28-4-98 அன்று

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு.கே.என்.நேரு அவர்கள் தாக்கல் செய்து அவர் ஆற்றிய உரை பின்வருமாறு:

கிட்டத்தட்ட, தமிழ்நாட்டிலே, மொத்தம் ஒரு கோடியே 50 இலட்சம் கார்டுகள், குடும்பக் கார்டுகள் உள்ளன. ஆட்சிப் பொறுப்பேற்றபோது, கிட்டத்தட்ட ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன் வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அப்போது அரிசியினுடைய கையிருப்பு, தமிழ்நாட்டிலே 3 இலட்சத்து 20 ஆயிரம் டன். ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன் என்கிறபோது, நம்மால் வழங்குவதற்கு இயலவில்லை. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியவில்லை.

## மத்திய அரசிடமிருந்து அதிக அரிசி

அப்போதுதான், முதன்முதலாக நாம் வெளி மார்க்கெட்டிலிருந்து அரிசியைப் பெறவேண்டும் என்று சொல்லி, ஆந்திர மாநிலத்திலிருந்து அந்த ஆண்டு ஒரு இலட்சம் டன் அரிசி பெற்றோம். கடந்த ஆண்டு 4 இலட்சம் டன் அரிசி வாங்கலாம் என்று இருந்தபோது, 3 இலட்சம் 20 ஆயிரம் டன்னை விட அதிகமான அளவு விளைந்துவிட்ட காரணத்தினால், அது நிறுத்தப்பட்டது. இப்படி, வெளிமாநிலத்திலிருந்து அரிசி பெற்றோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்லும் போதெல்லாம், பிரதமரைச் சந்தித்து, தமிழ்நாடு மாநிலம் அரிசி உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. எங்களுக்கு ஒதுக்கக்கூடிய அரிசியைக் கூடுதலாக ஒதுக்கவேண்டும் என்று வற்புறுத்திய காரணத்தினால், 1 இலட்சத்து 40 ஆயிரம் டன்னிலிருந்து 1 இலட்சத்து 65 ஆயிரம் டன்னாக உயர்த்தி, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியால், அவ்வாறு உயர்த்திக் கிடைத்த காரணத்தினால், அன்றைக்குப் பொதுவிநியோகத் திட்டம் எந்தவித தங்கு தடையும் இல்லாமல் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இதை ஆரம்பித்தபோது, இதற்கு அரசு அளித்த மானியம் வெறும் 10 கோடி ரூபாய்தான். இன்றைக்கு இந்த அரசு, இந்த ஆண்டு அனுமதி கோரியிருக்கிற தொகை 1,166 கோடி ரூபாய். இந்த அளவிற்கு, இன்றைக்கு பொதுவிநியோகக் கடைகள் மிக அதிகமான அளவுக்குப் பொருள்களை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.


## மே 1-ஆம் தேதி குடும்ப அட்டை வழங்கல்

இந்த அரசு பொறுப்பேற்றிருந்தபோது, ஒரு கோடியே 50 இலட்சம் கார்டுகளிலே, கிட்டத்தட்ட 15 இலட்சம் போலிக் கார்டுகளாக இருந்தன என்று ஆய்ந்து அறியப்பட்டு, புதிய கார்டுகள் வழங்கப்பட வேண்டுமென்ற முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின் பேரில் துறை செயல்பட்டது. இதிலே "ஏன் இவ்வளவு கால தாமதம்?" என்று உறுப்பினர்கள் கேட்டார்கள். "இரண்டாண்டுக் காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, எப்போது கார்டுகளை வழங்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

வருகிற 1-ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து மாநகரப் பகுதியிலும், அதுபோன்றே மாவட்டப் பகுதியிலும் வழங்குவதற்கு முழு முயற்சியாக அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டு கார்டுகள் அச்சடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## ரூ.30 கோடி செலவு

புது கார்டுகள் வழங்குவதால், இந்த அரசுக்கு ஏதாவது ஆதாயமா? ஏன் இவ்வளவு காலதாமதம்



எடுத்துக் கொண்டீர்கள் என்று கேட்டால், ஒன்றரைக் கோடி கார்டுகள் மட்டுமல்லாமல், போலிக் கார்டுகளாகக் கண்டறியப்பட்ட 15 இலட்சம் கார்டுகள் போக, மீதி 1 கோடியே 35 இலட்சம் கார்டுகள் வழங்க வேண்டும் என்பதுடன், புதிதாக மீண்டும் 15 இலட்சம் கார்டுகள், குடும்ப அட்டைகள் வழங்க வேண்டியிருப்பதால், கடந்த காலத்திலே இருந்ததைப் போலவே அதே ஒன்றரைக் கோடி அளவுக்குக் குடும்ப அட்டைகள் வரும் என்று தெரிந்திருந்தாலும்கூட, உண்மையாக வாங்க வேண்டியவர்களுக்கு அட்டைகள் வழங்கவேண்டும்;

போலியாக இருக்கின்ற அட்டைகளை நீக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான், 30 கோடி ரூபாய் செலவு செய்து, இன்றைக்கு அந்தப் பணியினை நிறைவேற்றியிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர்.

இங்கே பேசும்போது பல உறுப்பினர்கள் அரிசி கருப்பாக இருக்கிறது அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா என்று கேட்டார்கள். இங்கு நான் குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர்கள் தான் மழை பெய்கிற நேரத்திலே விவசாயிகள் நெல்லை எங்கே கொண்டு போய் விற்பார்கள்? விவசாயிகளுக்கு உரிய விலையைத் தரவேண்டாமா? விவசாயிகளிடம் அந்த நெல்லை வாங்கிக்கொண்டு அவர்களை ஆதரிக்க வேண்டாமா என்று கேட்ட உறுப்பினர்களே இன்றைக்கு அரிசி கருப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

**முதல்வர் உத்தரவு**

அதற்கும் முதலமைச்சர் அவர்கள் இனி நாட்டிலே கருப்பு அரிசி என்பது பொது விநியோகக் கடையிலே கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. ஏகபோக கொள்முதல் திட்ட காலத்திலே கூட இவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. குறுவையிலே 7 இலட்சம் டன், சம்பாவிலே கிட்டத்தட்ட 12 இலட்சம் டன் அளவிற்கு நெல்லை கொள்முதல் செய்திருக்கிறோம். கொள்முதல் செய்த பணியாளர்கள் அதை நல்லமுறையில் கொள்முதல் செய்திருக்கிறார்கள்.

அரிசி 20 கிலோ என்பதைத் தவறாது தந்து கொண்டிருக்கிறோம். ரேஷன் கடைகள் பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட்டம் அதிகமாக இருக்கிறது அதற்கு என்ன செய்யலாம் என்று முதல்வரை அணுகியபோது முதலமைச்சர் அவர்கள் மானியம் தந்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை நமக்கு அளித்திருக்கிறார்கள். அவர் எடுத்தவுடன் 20 நிலையங்களை அளித்தார்கள். அதற்குப் பிறகு 3 மாதங்களிலே 100 நிலையங்கள் அமைப்பதற்குரிய அனுமதி தந்திருக்கிறார்கள்.

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையம்**

அதற்குப் பிறகு, இப்போது 500 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களை அமைப்பதற்குரிய அந்த அனுமதியைத் தந்திருக்கிறார்கள். இதிலே கிட்டத்தட்ட 100 நிலையங்களில் ஆங்காங்கு பணிகள் ஆரம்பித்து இப்போது முடிகின்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றது. இதிலே கூட சில சங்கங்கள், நாங்கள் ஏழைச் சங்கங்கள், எங்களால் இந்த நிலையங்களைத் தொடங்க முடியுமா? என்று கேட்டபோது, 'நான் தருகிறேன் பணம்' என்று சொல்லி, அரசிடமிருந்து மானியமாக, அந்த 50 சதவிகித மானியத்தைத் தந்திருக்கிறார்கள். அதுவும் இன்றைக்கு மக்களால் வெகுவாக வரவேற்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, புதிய நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில், இது பற்றி இங்கு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். எந்தெந்தப் பகுதியிலே 800 அட்டைகளுக்கு மேல் இருக்கிறதோ அங்கு நீங்களாக கடைகளைத் திறக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அது அப்படியல்ல, நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே நலிந்த சங்கங்கள்கூட நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவை அவசியமானால், சட்டமன்ற

அரிசி 20 கிலோ என்பதைத் தவறாது தந்து கொண்டிருக்கிறோம். ரேஷன் கடைகள் பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட்டம் அதிகமாக இருக்கிறது, அதற்கு என்ன செய்யலாம் என்று முதல்வரை அணுகியபோது முதலமைச்சர் அவர்கள் மானியம் தந்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை நமக்கு அளித்திருக்கிறார்கள். அவர் எடுத்தவுடன் 20 நிலையங்களை அளித்தார்கள். அதற்குப் பிறகு 3 மாதங்களிலே 100 நிலையங்கள் அமைப்பதற்குரிய அனுமதி தந்திருக்கிறார்கள்.

உறுப்பினர்கள் அவசியம் என்று தெரிவித்தால், அரசினுடைய சட்டத்திற்கு உட்பட்டு நிச்சயமாகக் கடைகளைத் திறப்பதற்கு நாங்கள் முழுமையாக நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல கடந்த ஆண்டுகூட சொன்னார்கள், சென்னை உணவு மண்டலத்தை 14-ஆக உயர்த்தித் தரவேண்டுமென்று சொன்னார்கள். கடந்த காலத்தில் அறிவித்ததைப் போல 14 மண்டலங்களாக நாங்கள் உயர்த்தியும் தந்திருக்கிறோம். இதிலே இந்த ஆண்டு, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே அப்பாவு அவர்கள் குறிப்பிட்டதைப் போல கடந்த காலத்திலே வாங்கப்பட்ட நெல்களையெல்லாம் அடுக்கி வைப்பதற்குரிய இடங்களைத் தேர்வு செய்யவேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் ஈரத்தோடு வாங்கிய நெல்லை அரைப்பதற்கு மில் முதலாளிகளை அழைத்து ஒரு 10 கூட்டங்களாவது போட்டிருப்போம். அவர்கள் கேட்ட சலுகைகள் எல்லாம் கூட தந்தோம். அதிகமான அளவிற்கு சலுகைகளைத் தந்தும்கூட அவர்கள் இதிலே இருந்து எடுத்து அரைப்பதற்கு முன்வரவில்லை.

### நவீன அரிசி ஆலைகள்

அதற்காக, இன்றைக்கு 23, 25 இடங்களிலே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற அந்த மாடர்ன் ரைஸ் மில்களை எல்லாம் அதனுடைய நூறு சதவிகித அரைப்புத் திறனை நாம் கொண்டு வரவேண்டும் என்று முதல்வர் அவர்கள் சொல்லியதன் பேரில், இப்போது பல இடங்களிலே மின்சாரக் கோளாறுகள் காரணமாக மிஷின்கள் சரியாக இல்லாத காரணத்தினால் அவைகளையெல்லாம் கடந்த ஆண்டிலே சரி செய்ததன் காரணமாக இப்போது முந்தைய ஆண்டைவிட 60,000 டன் கூடுதலாக நெல்லை அரைத்திருக்கிறோம்.

இதிலேகூட, இந்த ஆண்டு மேலும் இரண்டு மில்களை காவிரிப் படுகையில் 800, 1,000 டன் என்ற அளவில் தினமும் அரைப்பதற்குரிய திறனைக் கொண்ட மில்களை அமைப்பதற்கு நமது தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவைகளை அரைப்பதோடு மட்டுமல்லாமல் அதைக் கொண்டு சென்று வைப்பதற்காக இன்றைக்கு தமிழ்நாட்டிலே 189 தாலுக்காக்களிலே மட்டும்தான் கிடங்குகள் இருக்கின்றன. மீதம் இருக்கின்ற 42 இடங்களில் கிடங்குகளைக் கட்டுவதற்குரிய இந்த ஆண்டு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து கடன் பெற்று 42 இடங்களிலே புதிய கிடங்குகளைக் கட்டுவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு, அதற்கான அனுமதியையும் முதல்வர் அவர்கள் தந்திருக்கின்றார்கள்.

கூட்டுறவுத் துறையிலே கடந்த ஆண்டு பல அறிவிப்புகளை வெளியிட்டிருந்தோம். இந்த ஆண்டு அந்த அறிவிப்புகளை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். குறிப்பாக, மொத்த தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் 8,033 தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது 800. மீதம் உள்ளவை 31. இந்த 31 சங்கங்களும் பல இடங்களில் நீதிமன்றங்களிலே வழக்கு இருக்கின்ற காரணத்தினால் அதை நடத்த முடியவில்லை. அதிலேகூட தலைமைச் சங்கங்களுக்கும் அதைப் போல மாநில தலைமைச் சங்கங்கள், மத்திய சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று சொன்னார்கள். முதலமைச்சரைக் கலந்து அதற்குரிய தேதி அறிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்த ஆண்டு வழங்கும் கடன்கள்

நகைக் கடன்கள் 96-97ஆம் ஆண்டு வழங்கிய கடன்கள் 2,535 கோடி ரூபாய். பயன்பெற்றோர் எண்ணிக்கை 34.26 இலட்சம். 1997-98ஆம் ஆண்டு வழங்கிய கடன்கள் 2,779 கோடி ரூபாய். பயன்பெற்றோர் எண்ணிக்கை 38.35 இலட்சம். இந்த ஆண்டு 3,400 கோடி ரூபாய் நகைக் கடனாக வழங்குவதாக நாங்கள் குறியிடு நிர்ணயித்திருக்கிறோம்.

அதுபோல தானிய ஈட்டுக் கடன் 96-97ஆம் ஆண்டு வழங்கிய கடன் ரூ.13.36 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 10 இலட்சம். 97-98ஆம் ஆண்டில் வழங்கிய கடன் ரூ.21.80 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 14 இலட்சம். இந்த ஆண்டு 98-99இல் 70 கோடி ரூபாய் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதாகக் குறியிடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோன்று, நடுத்தர காலக் கடன்கள். 96-97ஆம் ஆண்டு வழங்கிய கடன் ரூ.66.37 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 76 ஆயிரம் பேர் 97-98ஆம் ஆண்டு வழங்கிய கடன் ரூபாய் 100 கோடியே 74 இலட்சம். பயன்பெற்றோர் எண்ணிக்கை 92 ஆயிரம் பேர். இந்த ஆண்டு நடுத்தர காலக் கடனாக வழங்குவதற்கு

ரூ.100 கோடி என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல வீட்டு வசதி திட்டம். இந்தத் திட்டம் 96-97இல் செயல்படவில்லை. 97-98இல் வழங்கப்பட்ட கடன் ரூ.52.09 கோடி. பயன்பெற்றோர் 900 பேர். இந்த ஆண்டு இந்த திட்டத்திற்கு ரூ.105 கோடி தருவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, லாரி, பேருந்துக் கடன்கள் வாங்குவதற்கு இந்த ஆண்டு ரூ.10 கோடி வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவப் பொறியாளர் கடன்களுக்கு ரூ.10 கோடி இந்த ஆண்டு புதிதாகக் கடன் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

பண்ணை சாராக் கடன், இந்த ஆண்டு, 1998-99இல் ரூ.130 கோடி வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

நீண்ட காலக் கடன், 1998-99ஆம் ஆண்டு ரூ.248 கோடி வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, வைப்பு நிதித் திட்டத்தில் நிதி திரட்டுதல் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது கூட்டுறவுத் துறையிலே வைப்புநிதியாக இருந்தது 7,000 கோடி ரூபாய். இந்த இரண்டு ஆண்டு காலத்தில், கிட்டத்தட்ட 22 மாத காலத்தில் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் 9,750 கோடி ரூபாய் வைப்புநிதியாக வைக்கப்பட்டிருக்கிறது என்றால், மக்கள் இதிலே அதிக ஆர்வம் காட்டி, நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்கிற காரணத்தினால் இவ்வளவு ரூபாய் சேர்ந்திருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த வங்கியாக நமது தலைமை வங்கி தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோலத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், இங்கேகூட உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். விவசாயிகள் கடன் வேண்டுமென்று கேட்டால் அவர்களிடம் அதிகமான உரத்தை வாங்க வேண்டுமென்று சொல்வதாக உறுப்பினர்கள் சொன்னார்கள். 97-98இல் தொடக்க நாணயக் கூட்டுறவு வங்கியில் குறுகிய காலக் கடனாகக் கொடுக்கப் பெற்றது ரூ.697 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 7,60,000 நபர்கள்.

## வங்கிகளுக்குப் புதிய கட்டடங்கள்

அதே மாதிரி இந்த ஆண்டு கடந்த ஆண்டைப் போல நமது முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கிட்டத்தட்ட அத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 50 வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் தரப்படும். நகர வங்கிகளுக்கு, 50 வங்கிகளுக்குப் புதிய கட்டடங்கள்.

அதே மாதிரி மத்திய வங்கியினுடைய கிளை 50 இடங்களிலே, அதற்குப் புதிய கட்டடங்கள், இப்படி கடந்த ஆண்டு அறிவித்ததை பணத்துடன் அரசாணையும் வழங்கப்பட்டிருக்கிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே 8 கோடி ரூபாய் செலவிலே 1,800 வங்கிகளுக்கு 'கிரில் கேட்டும்', 2,200 வங்கிகளுக்கு தொடர்ந்து கடந்த காலத்தில் அறிவித்ததைப் போல புதிய மத்திய வங்கி கிளைகளாக இந்த ஆண்டு 25 கிளைகள் திறக்கப்படும்.

50 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய கட்டடம். அதேபோன்று 50 நகர வங்கிகளுக்குக் கட்டடம் கட்டப்படும். மத்திய வங்கியின் 50 கிளைகளுக்குக் கட்டடங்களும் இந்த ஆண்டு கட்டப்படும் என்பதைத் தெரிவித்து, இந்தத் துறையிலே இருக்கிற பல குறைபாடுகளை நிச்சயமாகக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உங்களுடைய உற்சாகத்தை ஏற்று நல்லமுறையிலே செயல்படுவோம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 30ஆம் தேதி வரை நெல் கொள்முதல்

நேற்றைய முன்தினமே அவையில் அறிவித்து இருக்கிறோம். 30ஆம் தேதி வரை விவசாயிகளுடைய நெல்லை நாங்கள் நிச்சயமாக கொள்முதல் செய்கிறோம். சாக்கு இல்லை. பணம் இல்லை என்ற பிரச்சினைகள் இல்லை. சாக்கு இருக்கிறது பணம் இருக்கிறது. அதற்குரிய பணம் தருகிறோம். 30ஆம் தேதி வரை நிச்சயமாக வருகின்ற நெல்லை நாங்கள் கொள்முதல் செய்கிறோம் என்ற அறிவிப்பை இங்கே தெரிவிக்கிறேன்.

அடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கி 25 ஆண்டுகள் ஆகின்றன. 25 ஆண்டுகள் முடிவதையொட்டி, ஒவ்வொரு ஊழியர்களுக்கும் 1,000 ரூபாய் மதிப்புள்ள பொருள் வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல மற்ற துறைகளில் இருப்பதுபோல, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பணியாற்றுகிற தொழிலாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேரிடுமானால், அவர்கள் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் 60,000 ரூபாயை 1 இலட்சமாக உயர்த்தித் தரச்சொல்லி முதலமைச்சர் அவர்கள் எனக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள் என்ற நல்ல செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ★

அதுபோல தானிய ஈட்டுக் கடன் 96-97ஆம் ஆண்டு வழங்கிய கடன் ரூ.13.36 கோடி. பயன்பெற்றோர் எண்ணிக்கை 10 இலட்சம். 97-98ஆம் ஆண்டில் வழங்கிய கடன் ரூ.21.80 கோடி பயன்பெற்றோர் எண்ணிக்கை 14 இலட்சம். இந்த ஆண்டு 98-99இல் 70 கோடி ரூபாய் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதாகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

# போக்குவரத்துத் துறையில் சீர்கேடுகளைப் போக்கிட சீர்திருத்தங்கள்

இங்கே 10 உறுப்பினர்கள் போக்குவரத்துத் துறையினுடைய பணிகளைப் பற்றியும், அதிலே இருக்கிற குறைகளைப் பற்றியும் சுட்டிக்காட்டி உரையாற்றியிருக்கிறார்கள்.

இந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் 1972-ல் இன்றைய முதலமைச்சர் அன்று முதலமைச்சராக இருந்தபோது பொதுவுடைமை நோக்கத்தோடு 2247 அரசுப் பேருந்துகளாக இருந்த அந்த அரசுத்துறையை, முதல் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கி 1973-ல் மீண்டும் 3 போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கி இன்று 2247 பேருந்துகள் என்ற எண்ணிக்கையை 17,284 பேருந்துகள் என்று எண்ணிக்கை உயர்கின்ற அளவுக்குப் பாடுபட்டிருக்கிற தலைவர் கழகத்தலைவர் என்பதை மறுக்கமுடியாது.

அன்று 20,000 தொழிலாளர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி இன்று 1,24,900 பணியாளர்கள் இதிலே பணியாற்றுகிறார்கள் என்று சொன்னால், அதற்கு வித்திட்டவர் தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் என்பதை நன்றி உள்ளவர்கள் மறக்கமாட்டார்கள்.



சீர்கேடுகளை எல்லாம் அகற்றுகின்ற வகையில் பல சீர்திருத்தங்களையும் இந்தத் துறையிலே கொண்டு வந்து இருக்கிறோம். அதனுடைய விளைவாக இன்று ஏற்பட இருந்த பெரிய நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது. நான் சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டினால் இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளினால் இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற நன்மைகளை நீங்கள் நன்கு உணர முடியும்.

குறிப்பாக கூண்டு கட்டுவது - பாடி பில்டிங் - அதிலே கடந்த காலங்களில் 95-96ல் நகரப் பேருந்துகளைக் கட்டுகின்றபோது ஒரு பேருந்துக்கான சராசரி செலவை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2.65 இலட்சங்கள், 1996-97ல் 1.64 இலட்சமாக அது குறைந்திருக்கிறது.

எந்தப் பொருளினுடைய விலை ஏறிக்கொண்டிருந்தாலும் பாடி கட்டுவதிலே - இந்தக் கூடு கட்டுவதிலே இந்த இரண்டு ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களில் ஒரு பேருந்துக்கு 1 இலட்சம் ரூபாய் அளவுக்குக் குறைகிற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம், இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக.

அதேபோலப் புறநகர் பேருந்துகளில் கடந்த காலங்களிலே 3.17 இலட்சம். இன்று அவைகள் கட்டப்படுவதற்கு 2.32 இலட்சம் கிட்டத்தட்ட அதிலேயும் 1 இலட்சம் ரூபாய் மிச்சப்படுத்தப்படுகிறது.பெயிண்ட் வாங்குவது அன்றைய விட பெயிண்ட்டுகள் எல்லாம் எல்லா இடங்களிலும் விலை ஏறியிருக்கிறது. ஆனால் கார்ப்பரேஷனில் மட்டும் அவர்கள் அன்று வாங்கிய விலையை விட இன்று குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறோம். அதுதான் கடந்த காலங்களிலே அடித்த கொள்ளை, பெயிண்ட்டிலே மட்டும் இன்று 15 முதல் 25 சதவீதம் வரை விலை குறைந்திருக்கிறது.

உறுப்பினர்கள் கணேசன், திருநாவுக்கரசு, ஞானசேகரன் ஆகியோர் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து அவர்கள் இங்கே பேசி இருக்கிறார்கள். கணேசனுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஊதியத்தில் உள்ள முரண்பாடுகளை எல்லாம் சுட்டிக்காட்டினார்.

எப்போதுமே நம்முடைய நாட்டில் ஒரு பழமொழி உண்டு; அரைக் காசு உத்தியோகமாக இருந்தாலும் . அரசாங்க உத்தியோகமாக இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். நமக்கு கவர்ன்மெண்டு வேலை என்று சொன்னால் பணிப் பாதுகாப்பு, நிரந்தரம் இருக்கிறது என்பது ஒரு உளவியல் ரீதியாக ஏற்பட்டுவிட்ட பாதிப்பு. ஆகவேதான் இந்த உளவியல் ரீதியாக இருக்கிற இந்த உணர்வைப் பயன்படுத்தி, தொழிலாளர்களை எப்படியும் தங்கள் பக்கம் திருப்பலாம் என்று சிலபேர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

### தொழிலாளர்களுக்கு அன்பு வேண்டுகோள்

அந்தத் தொழிலாளர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ளும் அன்பான வேண்டுகோள்; உறுப்பினர் திருநாவுக்கரசு நான் சொல்லவேண்டும் என்று சொன்னார். நான் இங்கே சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டி எடுத்துவைக்கிற வாதங்கள் கூட தொழிலாளத் தோழர்கள் நாளைக்குப் பத்திரிகையில் படிக்கமுடியும். அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கட்டும், அவர்கள் இன்று பெறுகிற ஊதியங்கள், தொழிற்சங்கங்களில் அவர்கள் உறுப்பினர்களாக இருக்கிற காரணத்தால், தொழிற்சங்கச் சட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிற காரணத்தால் அவர்களுக்குக் கிடைக்கிற சலுகைகள், இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து அரசு ஊழியர்களாக மாறினால் அவர்களுக்குக் கிடைக்கிற இழப்பு என்ன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

### 3 ஆண்டுக்குள் ஊதிய உயர்வு

இப்போது அவர்களுக்கு இந்த எண்ணம் வருவதற்குக் காரணம் அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த ஊதிய உயர்வுகள்தான். இவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொடுக்கப்பட்ட ஊதிய உயர்வு 98-ல் இப்போது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு கொடுக்கப்படுகிறது.

முதன்முதலாக இவர்கள் அரசு ஊழியர்களாக வருகிறோம் என்று ஏற்றுக்கொண்டால் நாங்கள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு கேட்கமாட்டோம். அரசு ஊழியர்களுக்கு இருப்பதைப் போலவே 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை எங்களுக்கு ஊதியம் நிர்ணயித்தால் போதும் என்பதை முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்களா ? அதுமட்டுமல்ல; இப்போது அவர்கள் ஏற்றுக்கொண்டால் அவர்களுக்குக் கிடைக்கிற பணிஇழப்பையும் அவர்கள் பார்க்கவேண்டும்.

அதற்காகத்தான் நான் சொல்லுகிறபொழுதே மிகவும் கவனத்துடன் சொன்னேன். இதுபோன்ற பண இழப்புகள் வந்தாலும் அவைகளை இழப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நீதிமன்றத்திற்குச் செல்லமாட்டோம். தொழிற்சங்க உரிமைகளை விட்டுக்கொடுக்கிறோம் என்று அவர்கள் கேட்டுக்கொண்டால் அரசு ஊழியர்களாக அவர்களை மாற்றுவதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

### முதல்வர் உடனடி உத்தரவு

ஆகவே, தொழிலாளர்களுக்கு இதுபோன்ற எண்ணம் இருக்கும் என்று சொன்னால், இந்த அரசைப் பொறுத்தவரையில் முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசைப் பொறுத்த வரையில் போராளிகளை மதிக்கக்கூடிய ஒரு தலைவர் கலைஞர் என்ற காரணத்தாலேதான், போராட்டம் என்று அறிவித்தவுடனேயே அமைச்சரை அழைத்துப் பேசுங்கள் என்று கட்டளையிடுகிற தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கிற காலத்திலே எந்தப் போராட்டமும் நடத்தக்கூடாது என்று உணர்ந்திருக்கிற காரணத்தாலே - நேற்றைக்கு முன்தினம் நான் சேலம் சென்ற போதுகூட, உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதைப்போல் அங்கேயிருக்கிற தொழிற்சங்கத்தினுடைய, பிராஞ்சிலே இருக்கிற தொழிற்சங்கத் தலைவர்களைக்கூட அழைத்துப் பேசினேன்.

### அனைத்து சங்கங்களின் ஒருமித்த கருத்து

அங்கே எச்.எம்.எஸ்.-லே இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள்; ஐ.என்.டி.யூ.சி.யிலே இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள். தொ.மு.ச.விலே இருந்து வந்து பார்த்தார்கள். சி.ஐ.டி.யூ.சி.லே இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள். அவர்கள் எல்லாம் வைத்த கோரிக்கை, அரசு ஊழியர்களாக எங்களை ஆக்கவேண்டிய அவசியம் இல்லை. தொழிலாளர்களுக்குக் கிடைக்கிற உரிமைகளை நாங்கள் இழப்பதற்குத் தயாராக இல்லை என்றுதான் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமின்றி, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். 21 போக்குவரத்துக் கழகங்கள், மாவட்டத்திற்கு ஒரு கழகம் வேண்டும் என்று ஞானசேகரன் குறிப்பிட்டார். இவைகளையெல்லாம், இன்று நடைமுறை அடிப்படையிலே இரண்டு போக்குவரத்துக் கழகங்களை மட்டும் நான்கை இணைத்து இரண்டாக உருவாக்கியிருக்கிறோம். விரைவுப் பேருந்துக் கழகங்களையும் ஒன்றாக இணைத்திருக்கிறோம். மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறது. மற்ற போக்குவரத்துக் கழகங்கள் அப்படியே இயங்கிக் கொண்டிருக்கின்றன.



இந்தப் போக்குவரத்துக் கழகங்களினால் ஏற்படக்கூடிய லாபங்களை உணர்ந்து அதனால் அனுகூலங்கள் இருக்குமானால் படிப்படியாக அவைகளைச் செய்யலாம் என்று இந்த அரசு முடிவு எடுத்து அவைகளை நிறுத்தி வைத்திருக்கிறது. ஆகவே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களினுடைய நஷ்டங்களைப் பொறுத்தவரையிலும், நிர்வாகச் சீர்திருத்த முறைகளிலேயும் இந்த அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது.

### மக்கள் தேவையுணர்ந்து சேவை புரியும் கலைஞர்

இது மட்டுமின்றி, போக்குவரத்துக் கழகங்களிலே ஏற்படுகிற நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு முதல்வர் அவர்கள் இந்தத் துறையின் ஒரு பகுதியாக இருக்கிற - இதிலே கிடைக்கிற லாபங்களை அதற்கு விட்டுக்கொடுத்து, இந்த நஷ்டங்களை ஈடுகட்டுகிற அளவிற்கு அவரும்கூட அடிக்கடி கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தாலேதான் இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த அளவிற்கு நஷ்டங்கள் வந்தாலும் பொதுமக்களுடைய தேவைகளைக் கருதி சேவை செய்து கொண்டிருக்கிற முதல்வர் அவர்கள் அளித்திருக்கிற சலுகைகளின் அடிப்படையில் சிறப்பாக இவை செயல்பட்டு வருகின்றன.

மேலும், மினி பஸ் பற்றி எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். மினி பஸ் போக்குவரத்து உருவாக்கப்பட்டதனுடைய நோக்கமே, கிராமப்புறங்களிலே பேருந்து வசதிகள் இல்லாத இடங்களுக்கு மினி பஸ் இயங்கவேண்டும் என்பதுதான். இதுதான் அதனுடைய நோக்கமே தவிர, மற்ற நிலைகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்பது அல்ல. அந்த எண்ணத்தில் 16 கிலோ மீட்டர் வழங்கப்பட்டு சர்வீஸ் ரோடு 1 கிலோ மீட்டர் வரை இருக்கிற இடங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது.

நீங்கள் சொல்லுவதைப் போல் 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் என்று நீட்டித்துக் கொடுக்கப்படும் என்று சொன்னால், போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளாக இருந்தாலும் அவை பாதிக்கப்படும். தனியார்கள், வண்டி ஓட்டுபவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப் போல லாபநோக்கம் இல்லாமல் ஓட்டமாட்டார்கள். 16 கிலோ மீட்டர், 22 கிலோ மீட்டர் என்று வாங்கி வைத்துவிட்டு, அந்த இடத்திலேயிருந்து 4

கிலோ மீட்டர் தூரம், கூட்டம் அதிகமாக இருக்கிறதே என்று, அதற்கு மட்டும் ஷார்ட் ட்ரிப் ஓட்டிக் கொண்டிருப்பார்களே தவிர, அவர்களுக்கு நீட்டிப்பு இருக்கிற பகுதிகளிலே எல்லாம் விடமாட்டார்கள். இது நடைமுறையிலே இருக்கிற சிக்கல்.

அதற்காகத்தான் இந்த அரசு, தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்று நாம் 16 கிலோ மீட்டர் என்றும், 1 கிலோ மீட்டர் சர்வீஸ் ரோடு என்ற அடிப்படையிலேயும் வழங்கியிருக்கிறோம். உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல முன்பு 40 என்று இருந்தால் இன்றுவரை 105 பேருந்துகளுக்கு, மினி பேருந்துகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது.

அவைகளின் செயல்பாடுகளைக் கணித்து, அதிலே குறைபாடுகள் இல்லாமல் இருக்குமானால், நிச்சயமாக அந்த 1 கி.மீ. என்பதை 2 கி.மீ. அல்லது 3 கி.மீ. என்று தளர்த்துவதற்கு முதல்வர் அவர்களோடு கலந்து ஆலோசித்து அதற்கான ஏற்பாடுகளை வருங்காலங்களில் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி

உறுப்பினர்களுக்கு குடும்ப மருத்துவ உதவித் திட்டமாக ஒரு இலட்சம் ரூபாய் அல்லது அதற்குக் குறைவாகச் செலவாகிறது என்று சொன்னால், செலவு செய்ததில் 75 சதவீதம் தொகை வழங்கப்படும் என்று அரசு உத்தரவு இருந்தது. ஆனால், அது மாற்றப்பட்டு, அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் அல்லது அதற்குள்ளாக எவ்வளவு செலவு செய்திருந்தாலும், செலவு செய்த முழுத்தொகையையும் வழங்கலாம் என்று இந்த அரசு அறிவிக்கிறது. இது தொழிலாளர்களுக்கு இந்த அரசு செய்கின்ற நன்மை.

மேலும் போக்குவரத்துக் கழகங்களில் பார்வையற்ற பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் 75 ரூபாய் ஊர்திப் படியாக வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இச்சலுகை இதுவரை அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது போக்குவரத்து கழகத்தில் பணியாற்றுகின்ற பார்வையற்ற தொழிலாளர்களுக்கும் இது நீட்டிக்கப்படுகிறது.

மேலும், சென்னை மாநகரப் பயணிகளுக்கென்று சில சலுகைகளை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். "ட்ராவல் அஸ் யூ ப்ளீஸ்" என்ற பயணச்சீட்டு விற்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு 375 ரூபாய். கிட்டத்தட்ட மாதத்திற்கு 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாய் வரை டிக்கெட் விற்கப்படுகிறது. மாதத்திற்கு 375 ரூபாய் கட்டி வாங்கிக்கொண்டால், எங்கே வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். அந்தப் பயணச் சீட்டை வைத்திருக்கின்ற யார் வேண்டுமானாலும் பயணம் செய்யலாம் என்ற ஒருமுறை இப்பொழுது சென்னையில் இருக்கிறது. அந்த 375 ரூபாய் மொத்தமாகச் செலுத்துகின்றவர்களுக்குச் சில சலுகைகளை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அவர்களே 3 மாதத்திற்குச் சேர்த்து மொத்தமாக வாங்கிக்கொண்டால், அவர்கள் 1000 ரூபாய் கட்டினால் போதும். 3 மாதத்திற்கு இந்தச் சலுகையை அனுபவிக்கலாம். அதுபோல 6 மாதத்திற்கு மொத்தமாக வாங்கிக் கொண்டால், 2000 ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டால், 6 மாதத்திற்குச் சென்னை மாநகரத்தில் எங்கு வேண்டுமானாலும், அந்தப் பயணச்சீட்டை வைத்திருக்கின்ற யார் வேண்டுமானாலும் பயணம் செய்யலாம் என்ற சலுகையைப் பயணிகளுக்காக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அதுபோன்று சென்னையில் மட்டும் அரசு ஊழியர்கள் - மற்றவர்கள் சீசன் டிக்கெட் 40 பயணச் சீட்டு வாங்கினால், 60 முறை பயணம் செய்யலாம் என்று வழங்கியிருக்கிறோம். இதை மாநகரவாசிகளுக்கு மட்டுமல்லாமல், புறநகர்ப் பகுதிகளில் உள்ள மக்கள் பயணம் செய்வதற்கு வசதியாகவும் இந்த சீசன் டிக்கெட் வசதியை மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் நீட்டித்து வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது பெரும்பாலானவர்கள் கார் வைத்திருக்கிற வர்களெல்லாம் ஆண்டுக்கு ஒருமுறை லைசென்ஸ் வாங்குவதில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதாவது சாலை வரி கட்டுவதில் உள்ள பல்வேறு முறைகளை மாற்றி அவர்களுக்கு நிரந்தரமாக ஆயுட்காலவரி என்ற அடிப்படையில் அவர்களுக்கு வழங்கவும் முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்கான சட்டத்திருத்தம் இந்தக் கூட்டத்தொடரில் வரும். புது வாகனங்களுக்கு ஆயுட்கால வரி கட்டாயமாக இருக்கும். இனி, புதிதாக வாங்குகின்றவர்கள் ஆயுட்கால வரியைக் கட்டவேண்டும். இதுவரை வண்டி வைத்திருப்போர் வேண்டுமானால் அதற்கு விருப்பம் கொடுத்து அதை மாற்றிக்கொள்ளலாம். அல்லது ஆண்டுக்கு ஒருமுறை வரியைக் கட்டலாம் என்ற சலுகையை அளித்து இந்தத் திட்டத்தை அளித்து இருக்கிறார்கள்.

## விருப்புவெறுப்பின்றிச் செயல்படும் அரசு

மேலும் பல உறுப்பினர்கள் ஆங்காங்கே துணை அலுவலகங்கள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதுவும் குறிப்பாக, இங்கே உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் பேசுகின்றபோது, சங்கரன்கோவிலுக்கு விட்டிருந்த பேருந்தைக்கூட, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தினால் நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார்.

*கூண்டு கட்டுவது - பாடி பில்டிங் - அதிலே கடந்த காலங்களில் 95-96ல் நகரப் பேருந்துகளைக் கட்டுகின்றபோது ஒரு பேருந்துக்கான சராசரி செலவை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2.65 இலட்சங்கள், 1996-97ல் 1.64 இலட்சமாக அது குறைந்திருக்கிறது.*

*எந்தப் பொருளினுடைய விலை ஏறிக்கொண்டிருந்தாலும் பாடி கட்டுவதிலே - இந்தக் கூடு கட்டுவதிலே இந்த இரண்டு ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களில் ஒரு பேருந்துக்கு 1 இலட்சம் ரூபாய் அளவுக்குக் குறைகிற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம், இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக.*

எந்தக் காலத்திலே நிறுத்தப்பட்டது என்று அவர் சொன்னால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏனென்றால், கடந்த காலங்களிலே நிறுத்தப்பட்ட பேருந்துகளையெல்லாம் நடத்திக்கொண்டிருக்கின்ற அரசுதான் கலைஞருடைய அரசு. எந்தத் தனிப்பட்ட உறுப்பினர் மீதும் விருப்பு வெறுப்போடு நடக்கிற அரசு அல்ல இந்த அரசு. வேண்டுமானால் அவருடைய தலைவர்களுக்கு அது வழக்கமாக இருக்கலாம். அந்த அடிப்படையில்தான் உண்மைகளைக்கூட மறைத்து, அவர்கள் எதையெதையோ சொல்லி, யார் யாரையோ கைது செய்ய வேண்டுமென்றெல்லாம்கூட பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

*புறநகர் பேருந்துகளில் கூண்டு கட்ட கடந்த காலங்களிலே 3.17 இலட்சம். இன்று அவைகள் கட்டப்படுவதற்கு 2.32 இலட்சம் கிட்டத்தட்ட அதிலேயும் 1 இலட்சம் ரூபாய் மிச்சப்படுத்தப்படுகிறது. பெயிண்ட் அன்றை விட எல்லா இடங்களிலும் விலை ஏறியிருக்கிறது. ஆனால் கார்ப்பரேஷனில் மட்டும் அவர்கள் அன்று வாங்கிய விலையை விட இன்று குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறோம். பெயிண்ட்டிலே மட்டும் இன்று 15 முதல் 25 சதவீதம் வரை விலை குறைந்திருக்கிறது.*

### விருப்ப எண்கள் பெற

பேருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்று இப்பொழுது சுட்டிக் காட்டுகிறார். அதை விடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மேலும் விபத்து நிவாரண நிதியை முதல்வர் அவர்கள் அதிகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதுவரை உயிர்நீத்தால் 3,000 ஆக வழங்கப்பட்டு வந்த தொகை, ரூ.5,000 ஆக இனி வழங்கப்படும். நிரந்தரச் செயலிழப்பாக இருந்தால், இதுவரை ரூ.1,500 என்று வழங்கப்பட்டது. இனி அது ரூ.3,000 ஆக வழங்கப்படும். ஒரு கண் அல்லது ஒரு கை/கால் இழப்பு ஏற்பட்டிருந்தால், இதுவரை ரூ.1,000 வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் ரூ.2,000 ஆக அது வழங்கப்படும். ஏனைய சிறிய காயங்களுக்கு இதுவரை ரூ.100 வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் ரூ.250 ஆக அது வழங்கப்படும்.

மேலும், சிறப்பு எண்களைப் பதிவு செய்கின்றபோது சில சங்கடங்கள் இருக்கின்றன. குறிப்பாக விருப்ப எண்ணைப் பெறுவதற்கு ரூ.5,000 கட்டினால் போதும் என்று விதி இருக்கிறது. இப்பொழுது அதை மாற்றியமைத்து, இந்த அரசு சில விதிமுறைகளை உருவாக்கியிருக்கிறது. 50 சி.சி.வரை கொள்ளளவு உள்ள வாகனங்களுக்கு ரூ.500 கட்டினால் அவர்கள் விரும்பிய எண்களைப் பெறமுடியும். 50 சி.சிக்கு மேல் அனைத்து இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.1,000 கட்டினால் போதும்.

இப்போது 50 சி.சி.வாகனங்களுக்கு வாங்கவேண்டு மானால்கூட ரூ.5,000 கட்டவேண்டும். அதைக் குறைத்து இப்போது 30 சி.சி. வரையுள்ள வாகனங்களுக்கு ரூ.500-ம் 50 சி.சிக்கு மேல் உள்ள இருசக்கர வாகனங்களுக்கு ரூ.1000-ம் ஏனைய வாகனங்களுக்கு ரூ.3,000-ம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு, அதாவது ரூ.4 இலட்சம் மற்றும் அதற்கு மேல் விலையுள்ள வாகனங்களுக்கு ரூ.5,000-ம் சிறப்பு எண்களுக்குப் பதிவுக் கட்டணமாகப் பெறப்படும் என்கிற திருத்தத்தையும் கொண்டுவந்திருக்கிறோம்.

### த.மா.கா.உறுப்பினர் கோரிக்கை ஏற்பு

மேலும், தமிழ்மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஒரு கேள்வியிலே கேட்டிருந்தார். உறுப்பினர் அழகராஜா - உறுப்பினர்கள் கார் வாங்குகிற போது, அவர்கள் விரும்பிய எண்ணைப் பெறுகிறபோது, ஐயாயிரம் ரூபாய் கட்டுவதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டிருந்தார். எல்லோருக்கும் சலுகைகளைக் கொடுத்தோம். சட்டமன்ற உறுப்பினர்கள் சலுகைகளைக் கேட்கிறபோது பல சலுகைகளைக் கேட்டிருந்தாலும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் உறுப்பினர் கேட்டதற்கிணங்க, நமது முதலமைச்சர் அவர்கள், அதற்கு அனுமதி அளித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் கார் வாங்கினால், அவர்கள் விரும்பிய எண்ணைப் பெறுவதற்கு 5 ஆயிரம் ரூபாய் கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

*- சட்டப்பேரவையில் 5-5-98 அன்று போக்குவரத்துத்துறை மான்யக்கோரிக்கை மீதான விவாதங்களுக்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.பொன்முடி அவர்கள் அளித்த பதிலுரையிலிருந்து.* ★

---

'யாதும் ஊரே யாவரும் கேளிர்...

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!'

- கணியன் பூங்குன்றனார், புறநானூறு.



12-ஆம் பக்கத் தொடர்ச்சி

கோவை மாவட்டத்தில் 55 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம், வடவள்ளி நகர பேரூராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.5.5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கோவை மாவட்டத்தில் 10 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் வேட்டைக்காரன்புதூர், உடையகுளம், கோட்டூர் மற்றும் ஆனைமலை ஒன்றியத்தில் 6 ஊராட்சிகளில் அடங்கிய 38 கிராமங்களுக்கு ரூ.15.32 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கடலூர் மாவட்டத்தில் 1 இலட்சத்து 45 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ரூ.17 கோடி மதிப்பீட்டில் கடலூர் நகராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 98 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் கீழ்க்கொடுங்காவூர் மற்றும் 20 ஊராட்சிகளைச் சேர்ந்த 100 குடியிருப்புகளுக்கான ரூ.9.75 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 54 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் வந்தவாசி மற்றும் தெள்ளாறு ஒன்றியத்தில் உள்ள நல்லூர் மற்றும் 22 ஊராட்சிகளைச் சேர்ந்த 108 குடியிருப்புகளுக்கான ரூ.5.45 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் 16 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ரூ.5.8 கோடி மதிப்பீட்டில் பாலக்கோடு ஊரகப் பேரூராட்சி குடிநீர்த் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 48 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் கும்மிடிப்பூண்டி மற்றும் மீஞ்சூர் ஒன்றியத்தில் கடலோரக் குடியிருப்புகளுக்கான ரூ.11 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டம் செயலாக்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 26 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் திருப்போரூர், திருக்கழுக்குன்றம், சித்தாமூர் மற்றும் லத்தூர் ஒன்றியங்களைச் சேர்ந்த கடலோரக் குடியிருப்புகளுக்கான ரூ.5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு உள்ளாட்சி அமைப்புகளின் மன்றத் தீர்மானம் எதிர்பார்க்காமல் ஆய்வுப் பணிகள் துவக்கப்படும். ஆயினும் இப்பணிகளுக்கான ஒப்புதல் உள்ளாட்சி அமைப்புகளிடம் பெற்ற பின்னரே இறுதி செய்யப்படும். உள்ளாட்சி அமைப்பு களிடமிருந்து ஆய்வுத் தொகையை எதிர்பார்க்காமல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் பின்னர் இத்தொகையைத் திட்ட செலவினத்தில் சேர்த்துக் கொள்ளவும் குடிநீர் வாரியத்திற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.

புதிய குடிநீர்த் திட்டங்களை, வடிவமைக்கும் போது இப்பகுதியில் முன்பே இயங்கிவரும் கையிறைப்பான்கள் மூலம் கிடைக்கும் குடிநீரின் அளவைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்ற புதிய வழிமுறையைப் பின்பற்ற அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

குடிநீர்த் திட்ட செயலாக்கத்தில் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 50 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் நகராட்சிகளுக்கும், 50 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் நகர மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்திலிருந்து ரூ.10 கோடி நிதியுதவி பெறும் சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 30.9.98க்குள் முடிவடையும் வகையில் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

தன்னலமற்ற தொண்டு நிறுவனங்கள் அவர்களின் நிதியிலிருந்து செலவு செய்த குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முன்வருமானால் குடிநீர் வடிகால் வாரியத் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் நீராதாரம் தோற்றுவித்தல் போன்ற உதவி வழங்கப்படும். இப்பணியை முடிவுற்றவுடன் தனி மின்னிறைப்பான் திட்டங்கள் பராமரிப்பிற்காக உள்ளாட்சி மன்றத்திடமும், கூட்டுக் குடிநீர்திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமும் ஒப்படைக்கப்படும்.

ஊரகக் குடிநீர்த் திட்டங்களில் முன்பு 750 வரை மக்கள் தொகை கிராமங்களுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவும் 750க்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு 30 ஆயிரம் லிட்டர் கொள்ளவும் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் முறையை மாற்றி இனிமேல் 500க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருந்தாலே 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

## நரிப்பையூரில் ரூ.40 கோடி திட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில 77 ஊராட்சிகள் அடங்கிய 296 குடியிருப்புகளில் உள்ள 80,000 மக்கள் பயன்பெறும் வகையில் 38 லட்சம் லிட்டர் கொடுதிறன் கொண்ட நரிப்பையூர் உப்புநீரை நன்னீராக்கும் திட்டம் ரூ.40.81 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு 1998 - 99ல் பயனுக்குக் கொண்டு வரப்படும். இந்தியாவிலேயே இவ்வளவு பெரிய அளவிலான திட்டம் எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் மூலம்நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 20 லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்க முடியும் என்பதால் இக்குடியிருப்புகளுக்குக் கூடுதலாக 20 லிட்டர் நீர் வழங்கிடவும் மாவட்டத்தின் இதர பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கிடவும் நிரந்தர நீராதாரம் கொண்ட புதிய பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தருமபுரி, கடலூர் குடிநீர்த் திட்டங்கள்

தருமபுரி மாவட்டத்தின் மூன்றில் இரண்டுபகுதியைச் சேர்ந்த 18 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள், 4855 ஊராட்சிகள் அடங்கிய 4101 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் மற்றும் பொதுச் சுகாதாரத் திட்டம் ரூ.636.30 கோடி திருந்திய திட்ட மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜப்பானிய அயல்நாட்டுப் பொருளாதார கூட்டுறவு நிதியத்தின் நிதி உதவியுடன் செயலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கடலூர் மாவட்ட - வீராணம் ஏரியின் கொள்ளளவை அதிகரித்து விவசாயத் துறைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் 10 இலட்சம் மக்கள் பயன் பெறும்வகையில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதயுதவியுடன் ரூ.263 கோடி மதிப்பீட்டிலான குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப் படும்.

## பாதாளச் சாக்காடைத் திட்டங்கள்

பாதாளச் சாக்கடைத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டருக்கு மேல் குடிநீர் வழங்கப்படும். எல்லா நகராட்சிகளிலும், எல்லா மாவட்ட தலைமையகங் களிலும், அதாவது ஆலந்தூர், தாம்பரம், பல்லாவரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர், வேலூர், அம்பத்தூர் ஆகிய 12 நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதிஉதவியுடன் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் நகராட்சிகளில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ நிதியுதவியுடன் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## கண்காணிப்புக்குழு அமைப்பு

தமிழ்நாட்டில் குறைந்த அளவு குடிநீர் வசதியுள்ள எல்லா நகராட்சிகளிலும் மற்ற நகரப் பேரூராட்சிகளிலும் புதிய குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த ஹட்கோ நிறுவனத்திடமிருந்து ஐந்தாண்டுகளில் ரூ.500 கோடி கடனுதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிராமக் குடிநீர்த் திட்டங்களின் புனரமைப்புப் பணிகளைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்து திட்டங்களை முழுப் பலனுக்குக் கொண்டு வர இரண்டாண்டுகளில் ரூ.52 கோடி மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப் படும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்436 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்து வருகின்றது.

இதனைப் பராமரிப்பதிலும் நிர்வகிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகள் பங்கேற்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் பயன்பெறும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கண்காணிப்புக்குழு அமைக்கப்படும். இக்குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடி திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்யும்.

நகர உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் வடிகால் வாரியம் முறையான,தொடர்ந்த குடிநீர் வழங்குவதை ஒழுங்குப்படுத்தும் வகையில், பெரிய அளவில் குடிநீர் வழங்குதலை அளக்கும் கருவிகள் பொருத்தப்படும்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் 4 தலைமைப் பொறியாளர் அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் வடிவமைப்பு மற்றும் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்க ஏதுவாக ரூ.5.35 கோடி செலவில் புதிய கணிப்பொறிகளையும், மென்பொருட்களையும் நிறுவப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றிய செய்திகள் இணையும் வசதியில் இன்று (27.4.98) முதல் சேர்க்கப்படும். இதன் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள் மற்றும் வாரியத்தால் இதுவரை செயல்படுத்தப்பட்டுள்ள பெரிய அளவிலான திட்டங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள் பற்றி சர்வதேச அளவில் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் அறிந்துகொள்ளலாம். இந்தியாவிலுள்ள குடிநீர் வாரியங்களிலேயே, முதலாவதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்தான் இந்த இணைய வசதியைப் பயன்படுத்த உள்ளது என்பதை உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன்.

ஒரு ஊர்தி செயல் இழந்து நிராகரிக்கப்பட்டாலே அதற்குப் பதிலாகப் புதிய ஊர்தி வாங்குவது என்ற புதிய முறைப்படி 243 புதிய ஜீப்புகள் வாங்கப்பட வேண்டியதில் 56 ஜீப்புகள் வாங்கப்பட்டு மீதமுள்ள 187 புதிய ஊர்திகள் ரூ.6.5 கோடி செலவில் வாங்கி, குடிநீர்த் திட்டங்களை விரைவில் செயல்படும் வகையில் பயன்படுத்தப்படும்.

வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகங்களுக்கு ரூ.7.550 கோடி செலவில் ஏழு இடங்களில் புதிய கட்டட வளாகங்கள் அமைக்கப்படும்.

தொழில்நுட்பப் பணியாளர்களின் திறனையும் அறிவையும் வளர்க்கும் விதத்தில், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் துறையின் சமீபத்திய தொழில்நுட்ப வளர்ச்சியில் 15 அலுவலர்களுக்கு டென்மார்க் நாட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

இந்த அரசு பதவி ஏற்ற 13.5.96க்கு பிறகு 22 மாதங்களில் 5914 ஊரகக் குடியிருப்புகளுக்கு நீராதாரம் தோற்றுவித்து குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றி மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டது. 2821 ஊரகக் குடியிருப்புகளுக்குச் சென்ற ஆண்டில் நீராதாரம் உருவாக்கப்பட்டு நடப்பு ஆண்டில் குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 2623 ஊரகக் குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே நீராதாரங்கள் தோற்றுவிக்கப்பட்டு குடிநீர்த் திட்டப் பணிகள் இந்த ஆண்டில் எடுக்கப்படும்.

## தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் சார்பில் நொச்சிக்குப்பம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. போல - வேளச்சேரி நடுக்குப்பம், காசிமேடு ஆகிய பகுதிகளிலும் சுமார் 12,000 நபர்கள் பயன்பெறும் உவர்நீரை நன்னீராக்கும் திட்டம் ரூ.2.15 கோடி செலவில் செயலாக்கப்படும்.

1998 - 99 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் ரூ.300 கோடிகளுக்கு மேல் மூலதனத் திட்டங்களை செயல்படுத்தும்.

6.4.98 அன்று வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள், இதே பேரவையில் பேசும்போது, நகர பகுதியின் தென்பகுதிகளான வேளச்சேரி, சைதாப்பேட்டை, கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய இடங்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய ஒரு தனிச் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து விநியோகம் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனைக் கருத்தில் கொண்டும் சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஏற்கெனவே தயாரித்திருந்த பெருந்திட்டத்தின் அடிப்படையிலும், செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் தண்ணீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட ஒரு புதிய தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் 300 கோடியில் அமையவிருக்கும் இந்த நிலையம் 2002 ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கழிவுநீர்க் குழாய்களில், அடைப்புகளை உடனுக்குடன் அகற்ற வாரியம் 40 ஜெட் ராட்டிங் இயந்திரங்களையும், 50 டிராக் பக்கெட் இயந்திரங்களையும் ரூ.12.77 கோடி செலவில் புதிதாக வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இவற்றில் 25 பிராக்பக்கெட்டு இயந்திரங்கள் பெறப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள இயந்திரங்கள் விரைவாகப் பெறப்பட்டு பணியில் ஈடுப்படுத்தப்படும்.

சென்னை மாநகரில், குடிநீர் விநியோகத்தைச் சீராக்க நகரின் 16 இடங்களில் குடிநீர் விநியோக நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று இருக்க தற்போது 4 நிலையங்கள் மட்டும்தான் உள்ளன. மீதமுள்ள 12 நிலையங்களில், வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி மற்றும் கண்ணப்பர் திடல் ஆகிய இடங்களில் அமையவுள்ள நிலையங்கள் இந்த ஆண்டிலேயே முடிக்கப்பட்டு, செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும். 8 நிலையங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிப்பட்டு நிலையத்திற்கான வேலை கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படும்.

## மாம்பலத்தில் கழிவுநீர்க் குழாய்கள்

மாம்பலம் வாய்க்கால் கரையோரத்தில், கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்படும் திட்டம் ரூ.16 கோடி செலவில் இந்தத் ஆண்டு ஆரம்பிக்கப்படும். இந்த திட்டம் செயல்படுத்திய பின், மாம்பலம் வாய்க்காலில் கழிவுநீர் கலக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- சட்டப் பேரவையில் உள்ளாட்சித்துறை அமைச்சசர் திரு. கோ.சி.மணி அவர்கள்
27.5.98 அன்று ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல்
மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப்
பதிலளித்து ஆற்றிய உரையிலிருந்து...)

# நலம் காண்போம் - தமிழக வளம் காண்போம்



## கலைஞர் அரசின் 2 ஆண்டுப் பணிகளில் சில....



★ விவசாயிகளுக்கு இந்த ஆண்டு 44 கோடி நிலவரி ரத்து. கூட்டுறவு கடன்களுக்கு அபராத வட்டித் தொகை ரூ.50 கோடி தள்ளுபடி.

★ விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம்.

★ 77,901 விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புகள்.

★ நெல் கொள்முதல் விலை : குவிண்டாலுக்கு

| | 1995-96ல் (இலட்சம் டன்) | 1997-98ல் (இலட்சம் டன்) |
|---|---|---|
| மோட்டா ரகம் | ரூ.360 | ரூ.415 |
| சன்ன ரகம் | ரூ.375 | ரூ. 445 |
| போக்குவரத்து இடைநிகழ் செலவு | ரூ.5 | ரூ. 35 |
| கொள்முதல் அளவு | 1.43 | 18 |

★ 1996-98ல் (இரண்டு ஆண்டுகளில்) ஆதிதிராவிடர்கள் - நலிந்தோருக்கு இலவச கான்கிரீட் வீடுகள், 1,27,832. இவ்வாண்டில் மேலும் 60,000 வீடுகள்.

1991-96 வரை 5 ஆண்டுகளில் கட்டி முடித்த வீடுகள் 1,20,700.

★ நலிந்த பிரிவினருக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் மாத ஒய்வூதியம்.

1995ல் ரூ.100 - எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு.

1998ல் ரூ.150 - எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு ரத்து.

★ அடித்தட்டு மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அரண். ரூ.6,485 கோடியில் உணவு, உடை, உறையுள்.

★ ஏழை, எளியோர் 1 கோடி 40 இலட்சம் பேர்களுக்கு இலவச வேட்டி சேலை.

★ ஏழைப் பெண்கள் திருமண உதவித் தொகை 1989 ல் ரூ.5000, 1996ல் ரூ.10,000.

1996 - 98ல் வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.68 கோடி.

இவ்வாண்டு 60,000 பெண்கள் பயன்பெற ரூ.60 கோடி.

★ மனைவரி ரத்து, நிலுவைத் தொகையும் தள்ளுபடி.

★ ரூ.3,000க்கு மேற்படாத சொத்தின் மதிப்பிற்கு, முத்திரைத் தீர்வு, பதிவுக் கட்டணம் ரத்து.

★ மூன்று பேர் உள்ள குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி.

★ 2,000 புதிய நியாய விலைக் கடைகள் - அனைத்து நியாய விலைக் கடைகளிலும் புகார் புத்தகம். புதிய இரண்டு வண்ணக் குடும்ப அட்டைகள்.

★ ஜனநாயக ஒளி பரவிட உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள். கூட்டுறவுத் தேர்தல்கள்.

★ ஆண்டுதோறும் தொகுதிக்கு ஒரு நவீன கிராமம் - அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - ரூ.224 கோடி மதிப்பீட்டில் 33,282 பணிகள்.

★ 'நமக்கு நாமே திட்டம்' - ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு.

★ சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு ரூ.35 இலட்சம்.

★ நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள 96,000 உறுப்பினர் களின் 60 வயதை கடந்த கைத்தறி நெசவாளர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.150.

★ கைத்தறி நெசவாளர் துயர் துடைத்திட ஆண்டு முழுவதும் 20% ரிபேட், தேக்கத்தைக் குறைத்திட 3 மாதங்களுக்கு 30% சிறப்பு ரிபேட்.

★ 4 ஆண்டுகளாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்த ரிபேட் ரூ.43 கோடி வழங்கப்படும்.

★ 25,860 ஆசிரியர்கள் முன்னுரிமைத் தகுதிப்படி பணி நியமனம்.

★ 2,600 பெண் காவலர்கள் உள்பட 10,302 காவலர்கள் நியமனம்.

★ 1,100 உதவி ஆய்வாளர்கள் நியமனம்.

★ 8,000 சாலைப் பணியாளர்கள் நியமனம்.

★ 13,000 மக்கள் நலப் பணியாளர்கள் மீண்டும் நியமனம்.

★ 12,000 கி.மீ. சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றம்.

★ 10,000 கி.மீ. தூரத்திற்குப் புதிதாக கிராமச் சாலைகள்.

★ ரூ.285 கோடியில் 7,227 ஊரகக் குடியி ருப்புகளுக்கு குடிநீர் வசதி அதிகரிப்பு.

★ 1,10,000 புதிய தெருவிளக்குகள்.

★ 4,000 மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு.

★ 98,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு.

★ மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதங்கள் மாநில அரசு ஊழியர் களுக்கும் 1-1-1996 முதல்.

★ தனியார் மின்உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து 5,792 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டத்திற்கான அனுமதி.

★ ரூ.100 கோடி மதிப்பீட்டில் டாசிட் நிறுவனத்தின் மூலம் 'வணிக மற்றும் நிதி மையம்'.

★ திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.700 கோடி திட்டச் செலவில் உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்கா, அதில் ரூ.7,000 கோடி மதிப்பீட்டில் புதிய தொழிற் சாலைகள்.

★ தொடக்கப்பள்ளி இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கும் திட்டம்.

★ 12 ஆம் வகுப்பு வரை மாணவர்க்கு இலவச பஸ் பயணம்.

★ கிராமப்புறப்பள்ளி மாணவர்க்கு, தொழில் கல்லூரிகளில் 15 சதவீதம்.

★ பள்ளி மாணவர்க்குச் சத்துணவோடு வாரம் ஒரு முறை முட்டை.

★ அமைப்பு ரீதியில் இல்லாத 25 இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெற 'தொழிலாளர் நல வாரியம்'.

★ ரூ.26 கோடியில் மீனவர்களுக்கு 8,000 இலவச வீடுகள்; இவ்வாண்டில் மேலும் 4,000 வீடுகள்.

★ ரூ.186 கோடி மதிப்பீட்டில் 1000 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய அனைத்து கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை வசதி.

★ சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரி. நெல்லையில் புதிய சட்டக் கல்லூரி.

★ 24 மணி நேரமும் இயங்கும் 167 ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

★ ரூ.50 கோடியில் 652 ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

★ அனைத்து சமூகத்தினரும் நல்லிணக் கத்தோடு ஒற்றுமையாக வாழும் வகையில் 50 இடங்களில் 'சமத்துவபுரம்'.

## சொன்னதைச் செய்வோம் !

## செய்வதைச் சொல்வோம் !!

★ ★ ★

# ஒடுக்கப்பட்ட உழைப்பாளிகளை ஒன்றுபடுத்திய காரல்மார்க்ஸ்

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன் காணத் தகுந்தது வறுமையா? பூணத் தகுந்தது பொறுமையா?" என்ற கேள்வியைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுப்பினார். இந்தக் கேள்விக்கு விடை காணும் அந்த வழியைத்தான் நூற்றாண்டு காலமாக உலகத்திலே உள்ள பல சிந்தனையாளர்கள் தேடித்தேடி அதிலே மாபெரும் சிந்தனையாளனாக கார்ல் மார்க்ஸ் தோன்றி இந்த மூலதனத்தை நமக்கெல்லாம் வழங்கியிருக்கிறார்.

இந்த மூலதனத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய இந்திய மொழியில் - அதுவும் நம்முடைய தமிழ் மொழியிலேயே முழுவதும் மொழியாக்கம் செய்து தந்த பெருமை - அந்தப் பெருமையை நாமெல்லாம் பெற்று மகிழ்கின்ற இந்த நல்ல வாய்ப்பான நேரத்தில் இல்லை என்றாலுங்கூட - அந்தப் பெரும் மொழிப்புலவர் ஜமதக்னி அவர்களுக்கு தமிழ்ச் சமுதாயம், இலட்சிய வெறிகொண்ட இளைஞர் சமுதாயம், தொழிலாளர் வர்க்கம் என்றென்றும் தன்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் காணிக்கையாக்கத் தயாராக இருக்கின்றது.

இந்த நூலை வெளியிடுவதற்காக நம்முடைய நாகநாதன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றி இங்கே பேசிய முனைவர் பேராசிரியர் ஜெகதீசன் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன்.

நான் என்றோ ஒருநாள் அவரோடு பழகுகிறவன் அல்ல. ஒவ்வொரு நாளும் காலையில் அண்ணா அறிவாலயத்தில் வாக்கிங் செல்லுகிற நேரமெல்லாம் எனக்குத் துணையாக வருகின்றவர் நாகநாதன். யார் வந்தாலும் வராவிட்டாலும் நாகநாதன் வரத் தவறுவதில்லை. அப்படி நடந்த நேரத்திலேதான் நாகநாதன் என்னிடத்தில் இந்த நூலைப் பற்றிப் பல நேரங்களிலே விளக்கியிருக்கிறார். அது அச்சிலேற்றப்பட முடியாமல், அச்சியேற்றப் பட்டாலும் வெளிவர முடியாமல் ஒரு தயக்கம், ஒரு இடர்ப்பாடு ஏற்பட்டிருப்பதை என்னிடத்தில் எடுத்துக் கூறியிருக் கின்றார். அதற்கு ஏற்ப, அவர் விடுத்த விண்ணப்பம்; நம்முடைய தமிழ்க்குடிமகன் அவர்களுடைய துறையிலே தேங்கிக் கிடக்கிறது என்று செய்தி என்னிடத்திலே சொல்லப் பட்டது. தேங்கிக் கிடப்பதை அறிந்து, தமிழ்க் குடிமகனிடத்திலே நானே கேட்டு, தேக்கத்தைப் போக்கி, எல்லோருடைய ஏக்கத்தையும் போக்குகின்ற அளவிற்கு இன்றைக்கு இந்த 'மூலதனம்' வெளியிடப் பட்டிருக்கின்றது.

தமிழ்க்குடிமகன் அவர்கள் நான் சொன்னவுடன், உடனடியாக செயல்பட்டு இந்தப் பரிந்துரையைச் செய்து நிதிநிலை அறிக்கையிலேயே நாகநாதனுடைய முயற்சிக்காக ஒரு ஐந்து இலட்ச ரூபாயை அரசின் சார்பாக வழங்குகின்ற அந்த நிலையை ஏற்படுத்தியிருக்கின்றார்.

**எது மூலதனம்? ஏங்கல்ஸ் விளக்கம்**

'மூலதனம்' என்கின்ற இந்த நூலுக்கு, முகவுரை அந்தக் காலத்திலே எழுதியவர், 1886-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஐந்தாம் நாள், 'மூலதனம்' முகவுரை எழுதியவர், ஆங்கிலப் பதிப்புக்கு முகவுரை எழுதியவர் 'பிரடரிக் ஏங்கல்ஸ்' அவர்கள் ஆவார்கள்.

அவர் குறிப்பிடுகிறார்.

"மூலதனம் (Das Capital) ஐரோப்பா கண்டத்தில் பாட்டாளி வகுப்பினரின் விவிலியம் (கிறித்துவ மறைநூல்) என அழைக்கப்படுகிறது. ஜெர்மனியிலும், சுவிட்சர்லாந்திலும் மட்டுமின்றி; பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் மற்றும் அமெரிக்கா - மேலும் இத்தாலியிலும், ஸ்பெயினிலும் கூட இந்த நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவுகள் பாட்டாளி வகுப்பினர் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக மலர்ந்துவருகின்றன".

- என்று ஏங்கல்ஸ் 1886-ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எழுதிய முகவுரையிலே குறிப்பிடுகின்றார்.

மேலும் 'மூலதனம்' என்ற அந்த நூலைப் பற்றி ஏங்கல்ஸ் குறிப்பிடும்பொழுது :

"மார்க்சியக் கண்ணோட்டத்தில் மூலதனம் என்றால் என்ன என்பது பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது. பொதுவான கருத்தில் ஏதாவது ஒருவகையான உடைமை உள்ளவர்கள் எல்லாம் முதலாளிகள் அல்லது மூலதனக்காரர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

இதன் அடிப்படையில் சுயமாக உழைக்கும் சிறு வர்த்தகர்கள் - கடைக்காரர்கள், சிறுபட்டறை உரிமையாளர்கள் எல்லாம் முதலாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இவர்களிடத்தில் சிறிதளவு உடைமை உள்ளது என்பது உண்மைதான்.

ஆனால், அவர்களும் உழைப்பில் ஈடுபடுகின்றனர். இவர்களின் உடைமை பிரதானமாகப் பிறரைச் சுரண்டுவதன் மூலம் பெருகும் மூலதனமாகச் செயல்படவில்லை.

அதேபோல் பெட்டியிலே பூட்டி வைக்கப் பட்டுள்ளது மூலதனமாகாது.

வட்டி வியாபாரமும் மூலதனமாகாது.

சாதாரண வட்டிக்கடன் பிரதானமாக அவ்வப்போது ஏற்படும் செலவுக்காக வாங்கப்படுவதுதான். இவைகள் எல்லாம் உழைப்பைச் சுரண்டும் மூலதனமாகாது. வங்கிகள், இன்சூரன்ஸ், நிறுவனங்கள் மூலம் முதலாளிகள் மூலதனத்தின் ஒரு பகுதியைப் பெறுகின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் மூலதனம் என்பது மனித உழைப்பைச் சுரண்டுவதில் ஈடுபடுத்தப்படும் பணத்தைத்தான் குறிக்கிறது".

மனித உழைப்பைச் சுரண்டுவதில் ஈடுபடுத்தப்படும் பணத்தைத்தான் 'மூலதனம்' என்பது குறிப்பிடுகிறது என்ற சீரிய செழுமிய கருத்தை 'மூலதனம்' என்கின்ற மொத்த நூலுக்கும் ஒரே ஒரு வரியில் ஏங்கல்ஸ் அவர்கள் பொருள் விளக்கம் தந்து, நம்மையெல்லாம் சிந்தனையிலே ஆழ்த்துகின்றார்.

**மதத்தை அபினி என்றவர் பிறந்தது மதகுருமார் நிறைந்த ஊரில்**

இத்தகைய அருமையான ஒரு தத்துவ நூலை அரும்பாடுபட்டுத் தந்த கார்ல்மார்க்ஸ் அவர்கள் எங்கே பிறந்தார். பொதுவுடைமைப் பூங்கா என்று வர்ணிக்கப்படுகின்ற ரஷ்யாவிலா? அல்லது செஞ்சீனத்திலா? அல்ல. ஜெர்மனியிலே 'ட்ரியர்' என்ற ஊரில் பிறந்தார். அந்த ஊர் புரோகிதர்களின் அடைக்கல ஸ்தானமாகவும், வைதீகத்தின் மூலஸ்தானமாகவும் இருந்த ஊர்.

காரல் மார்க்ஸ் பிறந்த ஊரிலிருந்து, கிறிஸ்தவ தேவாலயங்கள், மடங்கள், மத நிறுவனங்கள், பாதிரிமார்களின் உறைவிடங்கள் முதலியவற்றைப் பார்த்து "கெதே" என்ற ஜெர்மானியக் கவிஞன் பிரமித்துப் போனதாகக் கூறுகிறான்.

அவ்வளவு மதகுருமார்கள் நிரம்பிய ஊரில் காரல் மார்க்ஸ் பிறந்தார். இப்படி மத ஆதிக்கம் நிறைந்து விளங்கிய 'ட்ரியர்' என்னும் ஊர் காரல் மார்க்ஸ் அவர்களுடைய ஊரை மட்டுமல்ல; அவரது மூதாதையர்கள் யூதர்கள் என்பதையும் உலகத்திற்குச் சொல்கிறது. அவர்களுடைய பரம்பரைத் தொழில் - காரல் மார்க்சின் மூதாதையர்களின் பரம்பரைத் தொழில் இங்கே நம்முடைய ஆனைமுத்து அவர்கள் குறிப்பிட்டார்களே, அந்தப் பெயரையே மாற்றிவிட்டார்கள் என்று - காரல் மார்க்சுடைய பரம்பரைத் தொழில் புரோகிதம்.

ஆனால், காரல் மார்க்சின் தந்தை ஹிர்ஷெல் மார்க்ஸ் வழக்கறிஞர் தொழில் செய்தார். அப்படி அவர் வழக்கறிஞர் தொழில் செய்வதை யூதர்களே

ஜமதக்னி மொழிபெயர்த்த காரல் மார்க்சின்
நூல்களை வெளியிட்டு முதலமைச்சர் கலைஞர் உரை

தடுத்தார்கள். யூதர் என்பதால் காரல் மார்க்ஸின் தந்தைக்கு வழக்கறிஞர் தொழிலில் போதிய வருவாயும் கிடைக்கவில்லை. அதன் காரணமாக 1821-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 24-ஆம் தேதி ஹிர்ஷெல் மார்க்ஸ் யூதனாக இருந்து வழக்கறிஞர் தொழில் நடத்தத் தடை இருக்கின்ற காரணத்தால், வருமானம் இல்லாத காரணத்தால், யூதனாக இருப்பதனால் தான் வழக்கறிஞர் தொழிலுக்குத் தடை என்ற கேள்வியை எழுப்பி, கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்.

அவர் அப்படி மாறிய பிறகு, ஓராண்டுகாலம் கடந்த பிறகு, அவருடைய மனைவியும் கிறித்துவ மதத்திற்கு மாறினார். இப்படி மதஉணர்வு பெருகியிருந்த ஊரிலும், மதம் மாறிய பெற்றோர்கள் இடையிலும் பிறந்து வளர்ந்த காரல் மார்க்ஸ்தான் பின்னாளில், "மதம் மக்களுக்கு அபினி" என்று குறிப்பிட்டார் என்று வரலாற்று ஆசிரியர்கள் புகழ்ந்து கூறுகின்றார்கள்.

இவர் ஆரம்பத்திலே பத்திரிகைத் தொழிலில்தான் ஈடுபட்டார். இவர் பிறந்த அந்தப் பிரதேசத்திற்குப் பெயர் ரைன்லாந்து. ரைன்லாந்து என்கின்ற அந்தப் பிரதேசத்தின் பெயரை வைத்து, "ரைன்லாந்து கெஜட்" என்கின்ற ஒரு பத்திரிகையில் அவரும், அவருடைய நண்பர்களும் அந்தத் தொழிலில் ஈடுபட்டு அதைத் தொடங்கினார்கள். இந்தப் பத்திரிகை 1812-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள் தொடங்கப்பட்டது.

படிப்பை முடித்துவிட்டு, வேலையில்லாமல் இருந்த காலத்தில், இந்தப் பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைகளின் காரணமாக, அந்தப் பத்திரிகையும் காரல் மார்க்சினுடைய பெயரும் மிகப் பெரும் புகழுக்கு உள்ளாயின.

ஆனால், அந்தப் பத்திரிகையினுடைய மதிப்பு உயர்ந்த பிறகு, ஜெர்மானிய அரசு அவர்மீது ஒரு கண் வைக்கத் தொடங்கியது. காரணம், அரசைக் கண்டித்து, அரசினுடைய கொள்கைகளைக் கண்டித்து, அதனுடைய திட்டங்களைக் கண்டித்து, அவர் எழுத அவர்மீது ஜெர்மானிய அரசினுடைய கண்பட்டது. எனவே, பல அடக்குமுறைகளுக்கு அவர் ஆளாகவேண்டியிருந்தது.

**மார்க்ஸின் பத்திரிகைக் கொள்கைதான் பெரியாரின் பத்திரிகைக் கொள்கையும்**

அந்தப் பத்திரிகையிலே அவர் எடுத்தவைத்த எண்ணம் நம்முடைய சிந்தனையில் எல்லாம் என்றென்றும் பதியவேண்டிய ஒரு எண்ணமாகும்.

"அரசாங்கத்திற்காக மக்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணம் கூடாது. மக்களுக்காகத்தான் அரசாங்கம் இருக்கிறது என்ற எண்ணம்தான் தேவை" என்று அவர் குறிப்பிடுகிறார்.

இதற்குப் பிறகு ரைன்லாந்து பத்திரிகையை அவர் நிறுத்திவிட்டு, வேறு இடம் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது, அரசின் கெடுபிடிகளால். பத்திரிகையின் கொள்கைகளைப் பற்றி இன்னொரு கருத்தையும் மார்க்ஸ் வெகு அழகாகச் சொல்கிறார்.

"சந்தாதாரர்கள் பத்திரிகையின் கொள்கையை நிர்ணயிக்கக்கூடாது. பத்திரிகைதான் சந்தாதாரர்களின் கொள்கையை நிர்ணயிக்க வேண்டும்".

சந்தாதாரர்கள் என்றால் வாசகர்கள். தந்தை பெரியார் அவர்கள் 'குடியரசு' இதழ் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தபொழுது, இது விற்குமா? இதை மக்கள் ஏற்பார்களா? இந்தக் கருத்தை மக்கள் ஜீரணம் செய்ய முடியுமா? என்றெல்லாம் கேட்ட நேரத்தில் பெரியார் சொன்னாராம்:

"விற்கிறதோ இல்லையோ, நான் 'குடியரசு' பத்திரிகையை அச்சடிப்பேன். எவனும் வாங்குகிறானோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலையில்லை. ஒரே ஒரு பத்திரிகையாவது அச்சடித்து அந்த ஒரு பத்திரிகையை நான் ஒருவனே திண்ணையிலே உட்கார்ந்து நானே படித்துப் பார்ப்பேன்" - என்று தந்தை பெரியார் சொன்னார்.

இதே கருத்தைத்தான் காரல் மார்க்ஸ் சொல்கிறார். வாசகர்கள் பத்திரிகையின் கொள்கையை நிர்ணயிக்கக் கூடாது. பத்திரிகைதான் வாசகர்களின் கொள்கையை நிர்ணயிக்கவேண்டும் என்று மார்க்ஸ் சொன்னதாக சாமிநாத சர்மா அவர்களின் புத்தகத்திலே வெகு அழகாக அவர் மார்க்சின் இந்த சிந்தனா விலாசத்தைச் சுட்டிக் காட்டுகின்றார்.

காரல் மார்க்சைப் பற்றி நம்முடைய பேராசிரியர்கள் இங்கே பேசும்பொழுது, திராவிட இயக்கத்திற்கும், காரல் மார்க்சினுடைய கொள்கைகளுக்கும் உள்ள உடன்பாடு - ஏன்? கம்யூனிச இயக்கத்திற்கும், திராவிட இயக்கத்திற்கும் உள்ள உடன்பாடு - அதைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் பல நேரங்களிலே ஆற்றிய உரைகள், எழுதிய எழுத்துக்கள் இவைகளையெல்லாம் சான்றுகளாக ஆக்கிக் காட்டினார்கள். அண்ணா அவர்கள் காரல் மார்க்சைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணா அவர்கள் காரல் மார்க்ஸைப்பற்றிக் குறிப்பிடும்போது சொல்கிறார்;

"வளமையினருகே வறுமை; பலத்தினருகே பயம்; இவை ஏன்? இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல; கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்கள் அனைவரையும் கதிகலங்க அடித்தது. கி.மு.நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் கிரேக்கத் தத்துவ ஞானியின் காலத்திலிருந்து, கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரல் மார்க்ஸ் காலத்திற்கு முன்பு வரை மக்களின் நல்வாழ்வுக்கான ஆராய்ச்சிகள் அனைத்தும் அறிவுக்குப் பொருத்தமான முடிவை அளிக்கவில்லை.

| | | |
|---|---|---|
| ஆண்டை | - | அடிமை |
| உயர்ந்தவன் | - | தாழ்ந்தவன் |
| மதகுரு | - | பக்தன் |
| மிராசு | - | உழவன் |
| பிரபு | - | பணியாள் |
| முதலாளி | - | தொழிலாளி |

இவர்களிடையே ஏற்பட்ட போராட்டங்களின் வரலாற்றை நன்றாக அலசிப்பார்த்தவர் காரல் மார்க்ஸ்.

பிரபுக்கள் - முதலாளிகளின் கொடுங்கோன்மை வெகுநாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான். உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார்.

அவருடைய தெளிந்த முடிவு ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது; நலிவுற்ற ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒற்றுமைப்படுத்தியது" - என்று அறிஞர் அண்ணா அவர்கள் காரல் மார்க்ஸைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

**காரல் மார்க்ஸ் வாழ்க்கை பற்றி சாமிநாத சர்மாவின் கவிதை**

இத்தகைய பெருமை வாய்ந்த காரல் மார்க்ஸ் அவர்களுடைய வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை சாமிநாத சர்மா தன்னுடைய நூலில் கவிதை வரிகளில் வந்ததைச் சுட்டிக்காட்டுகிறார்.

"அவன் மேகங்களுக்கு மத்தியில் தன் இலட்சியத்தைப் பொருத்தி வைத்துக்கொண்டான்.

ஆனால், புழுதி மண்ணிலேதான் அவன் வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது.

அன்றாடம் என்ன தேவையோ அதுதான் அவனுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது.

நாலா பக்கங்களிலும் நெருக்கப்பட்டான். அவனை வறுமை வாட்டியது. தேவை திணறச் செய்தது. அவன் பொதுவாக வாழ்க்கையிலே புடமிடப்பட்டான். புடம் போடப்பட்டான்".

- இது சாமிநாத சர்மா எழுதிய நூலில் காணப்படும் கவிதை வரிகள்.

உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். என்னையும் அந்த உணர்வுகளில் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட இயக்கத்துக்கும், கம்யூனிஸக் கொள்கைகளுக்கும் உள்ள உடன்பாடு இன்று நேற்றல்ல. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உறவாகும். 'திராவிடர்' என்றாலே உழைப்பாளிகள்தான், பாட்டாளிகள்தான் என்ற சித்தாந்தத்தை உண்மை தத்துவத்தை தந்தை பெரியார் அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். மே தினங்கள் கொண்டாடப்படுகின்ற நேரத்தில்

எல்லாம் உரையாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடர் என்றாலே உழைப்பாளிகள்தான் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த இயக்கத்தில் சிறுபிராயம் முதல் நான் ஈடுபட்ட நேரத்தில் - நேற்றைக்குக்கூட ஒரு விழாவிலே தம்பி துரைமுருகன் பேசும்போது குறிப்பிட்டார். "பெரியாரும், அண்ணாவும் மாத்திரம் இல்லாமல் இருந்திருந்தால், கலைஞர் தமிழ்நாட்டில் ஒரு கம்யூனிஸ்ட் தலைவராகவே ஆகியிருப்பார்" என்று அவர் குறிப்பிட்டார்.

காரணம், பெரியாருடைய திராவிட இயக்கக் கொள்கைகளும், சமுதாயக் கொள்கைகளும், சுயமரியாதை கொள்கைகளும், அண்ணா அவர்களுடைய தமிழ் உணர்வு நிலையும் என்னை ஈர்த்துவிட்ட காரணத்தால், முழுக்க முழுக்க கம்யூனிஸ்ட்டாக நான் ஆகிவிடவில்லை என்பதை அவர் குறிப்பிட்டார். கம்யூனிஸ்ட் என்ற பெயரில் நான் இல்லாவிட்டாலும்கூட நான் ஒரு பொதுவுடைமைக்காரன்தான். நான் ஒரு கம்யூனிஸ்ட்தான். அதனால்தான் நான் 1983-ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய குறளோவியத்தில் காரல் மார்க்சினுடைய வாழ்க்கையை எழுதவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது.

83 - ஆம் ஆண்டு எழுதி வெளியிடப்பட்டது குறளோவியம். அந்த குறளோவியத்தில் காரல் மார்க்ஸைப் பற்றி எழுதியுள்ள வரிகளை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்.

165 ஆண்டுகளுக்கு முன்பு - இது 15 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதால் 165 என்று குறிப்பிடுகின்றேன். ஆனால், உள்ளபடியே 180 ஆண்டுகளுக்கு முன்பு - இன்றைய நிலையிலே வசித்தால்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு வானளாவிய சிந்தனையை நிறுத்திக்கொண்டு பூமிக்குள் கல்லறையாகிவிட்ட சமதர்மச் சிற்பி காரல் மார்க்சின் சித்தாந்தங்களைப் பற்றித் தெரிந் கொண்டிருக் கிறோம். அவனது பொதுவுடைமைச் சிந்தனை களைச் செயலாக்கும் குறிக்கோள் என்றைக்கு வெற்றி பெறும் என்ற ஆர்வத்தோடு உழைக்கும் கூட்டம் இன்னமும் இந்த உலகின் பல நாடுகளில் போர்க்கொடி உயர்த்திக்கொண்டு இருக்கின்றது.

### கார்ல் மார்க்சின் வாழ்க்கைத் துணைநலமாக விளங்கிய ஜென்னி

அந்த மாமனிதன் - சாதாரணக் குடும்பத்தில் பிறந்து மிகச் சாமானிய வாழ்வு வாழ்ந்து வறுமையின் கோரப்பிடியில் அடிக்கடி சிக்கி, அறுபத்தி ஐந்தாவது வயதில் கண்மூடும் வரையில் தனது கடமையை ஓய்வின்றி ஆற்றியதற்கு ஏங்கல்ஸ் போன்ற உற்ற நண்பர் ஒரிவருவர் இருந்தபோதிலும் அருகிலேயே இருந்து இறுதிவரையில் இல்லறம் நடத்திய மாதரசி ஜென்னி என்னும் குடும்ப விளக்கின் பெருமையைப் பலர் அறியமாட்டார்கள்.

செல்வக் குடும்பத்தில் உதித்தவள், அழகில் மிகச்சிறந்தவள், அவளை மணக்கப் பலர் தவித்தனர். ஆனால் அவளோ, வளமற்ற குடும்பத்தில் பிறந்த - தனது அழகிற்குப் பொருத்தமற்ற - தன்னை விட நான்கு வயது குறைவான காரல் மார்க்சையே மணப்பேன் என்று ஏழு ஆண்டுகள் காத்திருந்தாள். அவ்வாறே மணந்து கொண்டாள். கணவன் நாடு கடத்தப்பட்ட போதெல்லாம் அவளும் அவனுடன் சென்றாள். அவன் கைது செய்யப்பட்ட போது அவளும் கைது செய்யப்பட்டாள்.

அந்தப் பெண்மணி ஜென்னி தங்களின் குடும்ப நண்பருக்கு எழுதிய மடல் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறாள்:

"எனக்குத் தாங்க இயலாத மார்பு வலி - முதுகு வலி - குழந்தைக்குப் பால் கொடுக்க ஒருத்தியை ஏற்பாடு செய்யக்கூட கையில் போதுமான பணமில்லை. என் மார்பு வலியைப் பொறுத்துக் கொண்டு நானே குழந்தைக்குப் பால் கொடுத்தேன். குழந்தைக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு, அதனால் என் மார்பு கடியுண்டு ரணமாகி குருதி வடியத்தொடங்கியது. அதனால் பாலும் குருதியும் கலந்து அது குடிக்க வேண்டியிருந்தது. அந்த நிலையில் கடன்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்து எங்கள் துணிமணிகள், குழந்தைகளின் தொட்டில் விளையாட்டுப் பொம்மைகள் அனைத்தையும் ஏலம் போடுவதற்கு எடுத்துக்கொண்டார்கள். மூன்று நாள் சாவுடன் போராடிய குழந்தை இறந்துவிட்டது. அதன் உடலைப் பின்புறத்து அறையில் மூடி வைத்துவிட்டு, நாங்களும் மற்ற குழந்தைகளும் முன்புறத்து அறையில் இரவு முழுவதும் தரையில் படுத்துக்கிடந்தோம். விடிந்தால் அந்தக் குழந்தைக்கு ஒரு சவப்பெட்டி தயார் செய்யக்கூட எங்களால் முடியவில்லை.

நான் மட்டும் தனிமையில் இந்தத் துன்பங்களை அனுபவிக்கவில்லை. ஒருவகையில் நான் கொடுத்து வைத்தவள். என் கணவர்தான் எனக்கு எல்லாம் - அவர் என் பக்கத்திலேயே இருக்கிறார் என்பதே எனக்கு ஆறுதல். நான் அவருடன் அவருக்குத் துணையாக இருப்பதே என் துன்பங்களுக்கெல்லாம் பரிகாரமாகக் கருதுகிறேன். ஆனால், என்னுடையவரிடம் பல வகையிலும் ஆதாயம் பெற்றவர்களில் ஒரிருவரே உதவிக்கு வருகின்றனர். அதை நினைக்கும்போது என் நெஞ்சம் நெருப்பாகிறது. உதவியற்ற நிலையிலும் கடமையாற்றிடும் அவருடன் துணையாக இணைந்து நிற்பதே எனக்கு இன்பமல்லவா?"

இன்று உலகத்தின் கண்கள் எல்லாம் எந்தக் கருத்துக்களைப் படித்திடத் துடிக்கின்றனவோ அந்தக் கருத்துப் புதையலுக்குச் சொந்தக்காரனான காரல் மார்க்சின் இல்வாழ்க்கையில் விளைந்த துன்ப துயரங்கள் ஒன்று இரண்டல்ல - ஓராயிரம் - அத்தனையையும் தாங்கிக்கொண்டு அவனையும் தாங்கி நின்ற அந்தத் தாய்க்குலத்துத் திருச்சுடர் ஜென்னியை "வாழ்க்கைத் துணைநலம்" என்று வாயார, மனமார வாழ்த்தவேண்டாமோ?

அருமையான புதையல் போன்ற ஒரு கருவூலம் போன்ற நூலினை நமக்கெல்லாம் தந்துள்ள தம்பி நாகநாதனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்த நூலைத் தமிழாக்கித் தந்துள்ள ஜமதக்னி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். சிறைவாசத்திலே பல ஆண்டுக்காலம் இருந்தவர்; தியாக சீலர்; தான் மாத்திரமல்லாமல் தன்னுடைய குடும்பத்தையே இந்திய நாட்டு விடுதலைக்காக அர்ப்பணித்தவர். அவருடைய அருமைச் செல்வி சாந்தி அவர்களும், சாந்தியினுடைய அருமைக் கணவர் நாகநாதனும் அந்த தியாகசீலருடைய புகழைப் பரப்புகின்ற வகையில் அவர் பெரும்பாடு பட்டு நாலைந்து ஆண்டுகள் தொடர்ந்து எழுதி எழுதிக் குவிந்த தொழிலாளர்களுடைய இலக்கியத்தை இன்றைக்கு வெளியிட முன்வந்தமைக்காக என் சார்பிலும், உங்கள் அத்தனைப் பேருடைய சார்பிலும் நன்றியையும், பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் அவர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.



- ஜமதக்னி மொழிபெயர்த்த
காரல்மார்க்சின் நூல்களை வெளியிட்டு
2.5.98 அன்று முதலமைச்சர் கலைஞர்
ஆற்றிய உரையிலிருந்து.

★★★

# தொழில்



இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்.
பிரம தேவன் கலையிங்கு நீரே!.

மண்ணெ டுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டி வைப்பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே!

- பாரதியார்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

